வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி

# விவசாயத்தினை மீள வலுவூட்டல்



வருடாந்த அறிக்கை

2020/21

# விவசாயத்தினை மீள வலுவூட்டல்

ஆண்டின் அதிக காலம் கொவிட் – 19 தொற்றினால் சிக்கியுள்ள நாடு மற்றும் உலகம் தொடர்ந்தும் அதன் சமூக மற்றும் பொருளாதார தாக்கத்திலிருந்து மீளுவதற்கு போராடிக் கொண்டிருக்கின்றது. கம்பனியானது எதிர்காலத்தினை நோக்கி பார்க்கும் போது இலங்கையின் விவசாயிகளையும் முழு விவசாயத் துறையினையும் முன்னெப்போதும் இல்லாத அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குகிறது.

எவ்வாறெனினும், பல ஆண்டுகளாக, லக்பொஹொர குடும்பம் எல்லாச் சந்தர்ப்பங்களிலேயும் சவால்களுக்கு முகங் கொடுத்து நாட்டின் விவசாயிகளை காப்பாற்றுவதற்கும் பாதுகாப்பதற்கும் உச்ச ரீதியில் முயற்சி எடுத்துள்ளது. தற்போது, சாத்தியமற்ற வீதத்தில் உலகளாவிய நெருக்கடியின் எடையின் கீழ் இந்த துறை பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் மீள்தன்மை மற்றும் உறுதித்தன்மையைக் வெளிப்படுத்த அது தன்னைத்தானே அழைத்தது.

அண்மைக்கால வரலாற்றில் நம்மை தாக்கிய கடுமையான நெருக்கடியிலிருந்து வெளி வருவதற்கான கூட்டு முயற்சியில் இலங்கை நாடு, வயல், விவாசாயிகள் மற்றும் நாட்டு மக்களுடன் நாங்கள் நின்றோம். பயிர் செய்கைக்கு தேவையான திறனை வழங்கி, மீண்டும் வயலில் இறங்க வேண்டுமென்ற விவசாயியின் விருப்பத்தினை மீள் ஊட்டம் செய்வதனை நோக்கமாகக் கொண்டது எங்கள் முயற்சி. விவசாயியை உற்சாகப்படுத்தி, முழு விவசாயத் துறையினையும் புதுப்பித்து உயிர்ப்பிக்கும் பிரதான இயக்கியாக நாங்கள் நிற்கின்றோம். பல நெருக்கடிகளை எதிர்கொண்டு தலைநிமிர்ந்து நிற்கின்றோம். நாங்கள் விவசாயிகளின் பக்க உறுதியாக நிற்கின்றோம். இலங்கையின் சமூக பொருளாதார மீட்சிக்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம்.

ஒப்பம்,

**லக்பொஹொர முகாமைத்துவம் மற்றும் ஊழியர்கள்**

**குறிப்பு: கொவிட் 19 தொற்றின் போது எழுந்த பாரிய வழங்கல் நெருக்கடியின் காரணத்தினால் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி அதன் செயல் நடவடிக்கை திட்டத்தில் அடையாளப்படுத்தியுள்ள செயற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதற்கு இயலாது போனது.**

**விவசாயம், கிராமிய பொருளாதார விவகாரங்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும்
மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு**

80/5, கொவிஜன மந்திரய, ரஜமல்வத்த, பத்தரமுல்ல, இலங்கை

தொலைப்பேசி : +94 11 2 868 920 | தொலைநகல் : +94 11 2 863 497
மின்னஞ்சல்: info@agrimin.gov.lk | இணையம் : www.agrimin.gov.lk

Creative Writing, Photography,
Layout & Design

79, Wijerama Road, Udahamulla, Nugegoda, Sri Lanka.
+94 11 302 4950 | +94 71 224 11 00
kalawainfo@gmail.com

# வருடாந்த அறிக்கை
# 2020/21

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி

**வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி**
லக்பொஹொர சுவர்ணஜயந்தி மாவத்தை,
ஹுனுப்பிட்டிய, வத்தளை, இலங்கை.

தொலைபேசி : 011-2 930 298 / 99 | தொலைநகல் : 011-2 947 763
மின்னஞ்சல் : info@lakpohora.lk | இணையம் : www.lakpohora.lk




ISO 14001: 2004
சுற்றுச்சூழல்
தரச் சான்றிதழ்




வருடாந்த அறிக்கைகள்
விருது 2014
தகுதிக்கான விருது




JASTECA CSR
விருது 2014
தகுதி விருது




CNCI சாதனையாளர்
விருது 2014
தேசிய மட்டத்திலான திறமைக்கான விருது



தேசிய கமத்தொழில் வியாபார
விருது 2014
வெள்ளி விருது



தேசிய உற்பத்தித்திறன்
விருது 2012/13
இரண்டாம் இடம்



இல்கை தேசிய
தர விருது 2013
வெள்ளி விருது



SLCBCC
வியாபார நட்சத்திரம் 2014
வெள்ளி விருது



அக்கிமொட்டோ 5S
விருது 2014
தகுதிக்கான விருது



தேசிய வியாபாரத்திற்கான
சிறந்த விருது 2014
**தங்க விருது**



மனிதவள முகாமைத்துவ
விருது 2013
**வெள்ளி விருது**

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| இலங்கை விவசாயத்தின் அடித்தளம் | 06 |
| கூட்டாண்மை தகவல் | 07 |
| எமது பயணத்தின் மைக்கற்கல் | 10 |
| பணிப்பாளர் சபை | 12 |
| இலக்கு மற்றும் நோக்கு | 15 |
| நிதியியல் சிறப்பம்சங்கள் | 17 |
| கடந்த 10 வருடகால நிதிச் சுருக்கம் | 18 |
| தலைவரின் செய்தி | 20 |
| பொது முகாமையாளரன் அறிக்கை | 22 |
| சிரேஷ்ட முகாமைத்துவ குழு | 30 |
| கம்பனியின் நிறுவக கட்டமைப்பு | 34 |
| முகாமைத்துவ மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வு | 38 |
| கூட்டாண்மை ஆட்சி | 44 |
| இடர் முகாமைத்துவ அறிக்கை | 46 |
| மனிதவள முகாமைத்துவ அறிக்கை | 50 |
| கணக்காய்வு குழு அறிக்கை | 56 |
| நிதி அறிக்கைகள் | 76 |
| பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் அறிக்கை | 78 |
| தலைவர் மற்றும் நிதியியல் முகாமையாளரின் அறிக்கை | 79 |
| சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கை | 80 |
| இலாப நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று | 87 |
| நிதி நிலைமைக் கூற்று | 88 |
| உரிமை மூலதனம் மாற்றல் கூற்று | 89 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 90 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | 91 |
| பிரதிநிதிப் பத்திரம் | 129 |



# இலங்கை விவசாயத்தின் அடித்தளம்

கமத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் முழுமையான அரசு கம்பனியொன்றான வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி (CFCL) ஜர்மன் குடியரசின் நிதி மற்றும் தொழிநுட்ப உதவியுடன் 1957 இன் 49 ஆம் இலக்க அரச தொழிற்துறை கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1964 இல் தாபிக்கப்பட்டது.

இலங்கை கமத்தொழில் துறையின் உரத்தேவைகளை பூர்த்திசெய்வது அதன் அடிப்படை பணியாவதுடன், இரசாய உரத்தினை இறக்குமதி செய்து தரமான உரத்தினை கலவை செய்து பிராந்திய களஞ்சியங்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட விற்பனை முகவர் வலையமைப்பின் ஊடாக நாட்டின் அனைத்து பிரதேசங்களுக்கும் பகிர்ந்தளிப்பதன் ஊடாக உற்பத்திகளின் தரத்திற்கு முன்னுரிமை வழங்கி இந்தபொறுப்பினை நிறைவேற்றுகின்றது.

1987 இன் 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் அரசாங்க நிறுவனம் மற்றும் அரசுக்கு உரித்தான வியாபார நிறுவனங்களை அரசாங்க கம்பனிகளாக மாற்றும் அப்போதைய அரச கொள்கைக்கு அமைவாக, இந்த சட்டத்தின் கீழ், 1992 செப்தெம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் ஆரம்ப பெயருடன் தாபிக்கப்பட்டு தற்போது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இத் துறையில் காணப்படும் அரச வியாபார ஒருங்கிணைப்பு அரச கொள்கையின் பகுதியொன்றாக, தமக்கடுவ விவசாய கம்பனி 2008 இல் CFCL இன் கீழ் கொண்டு வரப்பட்டதுடன் அது தற்போது கம்பனியின் பொலொன்னறுவை களஞ்சிய வளாகமாக செயற்படுகின்றது.

# கூட்டாண்மை தகவல்

**நிறுவன பெயர்**

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி

**நிறுவன பதிவு இலக்கம்**

PB 499

**சட்ட இயல்பு**

இலங்கையின் திறைசேரி செயலாளரின் பூரண உரித்துடைய வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமாகும்.

**அலுவலக பதிவு மற்றும் முகவரி**


வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனி

லக்பொஹொர சுவர்ண ஜெயந்தி மாவத்தை,

உனுப்பிட்டிய, வத்தளை, இலங்கை.

தொலைபேசி : 011 2 930 298 / 99

தொலைநகல் : 011 2 947 763

மின்னஞ்சல் : info@lakpohora.lk

இணையதளம் : www.lakpohora.lk





# நெற்பயிர் செய்கைக்கு

யூரியா, மியூரியாட், பொட்டாஷ், பொஸ்பேட், துத்தநாக சல்பேட்டு போன்ற நேரடி உரங்கள் விவசாயிகளுக்கு நங்கள் வழங்கும் உர வகையில் அடங்கியுள்ளன.

## நமது தேசத்தினை போஷிப்பதற்கு கடினமான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்

கடினமான நெருக்கடியான காலங்களில் நாங்கள் வாழ்வதற்கும் வேலை புரிவதற்கும் வேண்டியுள்ளது. அந்த தசாப்தங்களில் பல சவால்கள், பெரும் தோல்விகள் மற்றும் பெரிய வெற்றிகளும் இருந்தன. இவை அனைத்தும் இலங்கை உர கூட்டுத்தாபனத்தின் ஊடாக இலங்கை மக்களுக்காக உண்மையுடனும் அர்பணிப்புடனும் பணியாற்றிய ஊழியர்களின் தொடர்ச்சியான கண்காணிப்பில் நிகழ்ந்தவை ஆகும்.

**1964**

கௌரவ பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க அவர்களின் தலைமையில் கைத்தொழில், உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சின் கீழ் ரூ.58,000 முதலீட்டில் இலங்கை உரக் கூட்டத்தாபனம் ஆரம்பிக்கப்பபட்டதுடன், அதன் முதல் தலைவராக அமைச்சின் மேலதிகச் செயலாளரான சேம் சில்வா அவர்களாவார். தலைமைக் காரியாலயம் டார்லி வீதியில் அமைக்கப்பட்டதுடன் 80,000 மொட்ரிக் டொன் களஞ்சியப்படுத்தக்கூடிய கொள்ளளவுடைய களஞ்சியச்சாலை ஒன்றை ஹூனுபிட்டியவில் ஆரம்பிக்கப்பட்டது. வேனொன்று வாடகைக்கு எடுத்துக்கொள்ள பணம் இல்லாமையால் கூட்டுத்தாபனத்தின் முதல் ஊழியர்களில் ஒருவரான கே.கே. அன்டனி அவர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தில் வெளியேற்றப்படும் கடதாசிகளுக்காக 12 வளையும் கூடைகளைக் கொண்டு அவற்றை தனது சைக்கிளில் ஏந்திக்கொண்டு மீண்டும் தலைமைக் காரியாலயத்தை நோக்கி சைக்கிளில் சென்றுள்ளார்.

**1964**

கூட்டுத்தாபனத் தின் உரம் ‘லக்பொஹொர’ (இலங்கை உரம்) வர்த்தகப் பெயரின் கீழ் விநியோகிக்கப் படுகின்றது.

**1966**

மணிக்கு 35 மெகாவொட் கலவைக் கொள்ளளவைக் கொண்ட ஹூனுபிட்டிய வளாகத்தில் கலவை செயற்பாடுகள் ஆரம்பமானது. இங்கு 70,000 மொட்ரிக் டொன் கலக்கப்பட்டது. இறக்குமதி, உற்பத்தி மற்றும் விநியோகம் தொடர்பாக தனியார் நிறுவனங்களில் காணப்பட்ட ஏகபோகம் அதனூடாக சரிந்தது.

**1970**

திறந்த பொருளாதாரத்தின் அறிமுகத்துடன், இலங்கை உரக் கம்பனியில் காணப்பட்ட துறை முன்னுரிமை நிலைமை இழக்கப்பட்டது. தனியார் துறையின் போட்டிகளுக்கு வலுவான ரீதியில் பதிலளித்ததுடன், கூட்டுத்தாபனம் அதுவரை கூட்டுறவுகளுக்கு மற்றும் விவசாய சேவை மையங்களுக்கு மட்டும் வரையறையுடன் காணப்பட்ட விநியோக வலைப்பின்னல் அங்கீகரிக்கப்பட்ட வநியோக பிரதிநிதிகள் வரை விரிவாக்கப்பட்டது.

**1976**

அனுமதி முறையை ரத்து செய்து உர மானியத்தை அறிமுகம் செய்யப்பட்டது.

**1978**

ஜெர்மனி அரசின் வெகுமதிகளான 28 மில்லியன் ரூபாய் மற்றும் தொழிநுட்ப உதவியுடன் மாகோ, வெளிகம, பொலன்னருவை மற்றும் அனுராதபுர பிராந்திய களஞ்சியசாலைகளின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது.

**1980**

புதிதாக உருவாக்கப்பட்ட களஞ்சியங்கள் 13,000 மெட்ரிக் டொன் முதல் 16,000 மெட்ரிக் டொன் வரையான கொள்ளளவுடன் முழுமையாக செயற்பட்டது. முதன் முறையாக விநியோக பொருட்கள கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

**1986**

உர விநியோகம் மேலோங்குவதற்காக அரசினால் உர ஒருங்கிணைப்புக் குழு நிறுவப்பட்டது. இக்குழுவினால் விவசாய சமூகத்திற்காக உர பாவனை தொடர்பாக ஆரம்பக் கல்வி, பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் விவசாய சமூகத்தை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது

**1988**

ஜெர்மனி அரசிடம் 22 மில்லியன் ரூபாய் பெற்றுக்கொண்டு ஹூனுபிட்டிய மத்தியக் களஞ்சியச்சாலையின் புணரமைப்பு நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டது. மணிக்கு 30 மெட்ரிக் டொன்/மணி கொள்ளளவுடைய புதிய கலவை இயந்திரமொன்று பொறுத்தப்பட்டது.

## 1992

இச்சொத்துக்களை நீக்குவதற்கு அரசு தீர்மானித்ததுடன் இது கூட்டுத்தாபன வரலாற்றில் ஒரு தீர்க்கமான வருடமாக அமைந்தது. ஹூனுபிட்டிய களஞ்சியச்சாலை இலங்கை உரக் கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டதுடன், களஞ்சியங்களில் புவியியல் விரிவாக்கத்தின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களுடன் மேலும் ஐந்து நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டது. பின் அவற்றில் மூன்று தனியார் துறைக்கு விற்கப்பட்டதுடன் தமன்கடுவ உர நிறுவனம் மற்றும் இலங்கை உரக் கூட்டுத்தாபனம் வேறு இரண்டு நிறுவனங்களாக தொடர்ந்து செயற்பட்டது.

## 1994

உர மானியம் சிறப்பாக நடாத்திச் செல்லும் பிரதான பொறுப்பு இலங்கை உரக்கம்பனிக்கு கொடுக்கப்பட்டது. யுத்தம் நடைபெற்ற இக்காலத்தில் கடும் சவால்களுக்கு மத்தியில் கடைகள் மற்றும் தொலைதூர கிராமப் புறங்களுக்கு உரம் வழங்குவதில் மிக அர்ப்பணிப்புடன் செயற்பட்டது.

## 2002

செத்தம் வீதியில் அமைந்திருந்த இலங்கை உரக் கம்பனியின் தலைமைக் காரியாலயம் ஹூனுபிட்டிய வளாகத்திற்கு கொண்டுவரப்பட்டது.

## 2005

அப்போதிருந்த அரசாங்கத்தினால் வரலாற்றுமிக்க நெல் உர மானியம் ஆரம்பிக்கப்பட்டது. விவசாயிகளின் 70% க்கு சலுகையை வழங்கி 50 கிலோகிராம் உர பையானது ரூபா 350 இற்கு பெற்றுக்கொடுக்கும் பாரிய வேலைத்திட்ட மொன்றை மேற்கொண்டது

## 2007

நிகரச் சொத்துக்களின் பெறுமதியானது 330 மில்லியன் நட்டமுடன் கூடிய தொகையை கொண்டிருந்ததுடன் நிறுவனம் நிதியியல் ரீதியாக அதிக ஆபத்தான நிலையை கொண்டிருந்தது.

## 2008

அரச நிறுவனங்கள் தனியார் மயமாக்க மாட்டாது என அரசு வழங்கிய உறுதியின் காரணமாக இலங்கை உரக் கம்பனி புதிய முகாமைத்துவ சபை ஒன்றை நியமித்ததுடன், 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் நிறுவனம் மீண்டும் பதிவு செய்யப்பட்டது.

## 2010

திறமையான முகாமைத்துவ தீர்மானத்தின் மூலம் செயற்பட்ட நிறுவனம் ஆபத்தான நிலையிலிருந்து விலக ஆரம்பித்தது. அந்நிறுவனம் முழுமையாக தன்னைத்தான் மாற்றிக்கொண்டு, 2013 ஆம் ஆண்டில் 1606 மில்லியன் ரூபாய் நிகரச் சொத்துப் பெறுமதியை தனதாக்கிக் கொண்டதுடன் இலாபமாக 39 மில்லியன் ரூபாயை திறைசேரிக்கு செலுத்தியது.

## 2013

உயர் தரத்திலான 52 உரக் களஞ்சியச் சாலைகள் நாடு முழுதும் நிறுவப்பட்டிருந்ததுடன், GPS தொழிநுட்பத்துடனான போக்குவரத்து வலைப்பின்னல் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

## 2016

2016 ஆம் ஆண்டில், கரிம பொருளை நோக்கி கவனத்தினை செலுத்தியதுடன் நச்சற்ற மக்களுக்கான கொள்கையினை அறிமுகப்படுத்தியதுடன் CFC உர உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தியதன் ஊடாக இந்த கொள்கைப் பயணப்பாதையுடன் தன்னை இணைத்து கொண்டது.

# பணிப்பாளர் சபை

## தலைவர் / பணிப்பாளர்

**திரு. சரத் சமரகோன்**
(2020.04.01 – 2020.08.31)

**திரு. ஜனத் விடானகே**
(2020.09.17 - 2021.03.31)

## பணிப்பாளர்கள்

**திரு. எஸ.எல். கமகே பந்துசிறி**
(2020.04.01 – 2021.03.31)

**திருமதி. ஈ.ஜீ.ஜீ.எச். மதுக ரணசிங்க**
(2020.04.01 – 2021.03.31)

**திரு. டப். பீ. திமுது பெத்தும்**
(2020.04.01 – 2021.03.31)

**திரு. எல். கெமுனு சமரவிக்ரம**
(2020.04.01 – 2021.03.31)

**திரு. கோசல ஜயக்கோடி**
(2020.04.01 – 2021.03.31)

**திரு. ஜீ.ஆர். டொன் சுனில்**
(2021.03.04 – 2021.03.31)

**திரு. எச்.கே.சீ. தாருக அல்விஸ்**
(2020.04.01 – 2021.03.31)

## கம்பனி செயலாளர்

**திருமதி. ஏ.எம். ஷமிலா ஸ்வர்ணமாலி திலகரத்ன**

## முகாமைத்துவ குழு

| | |
|---|---|
| **திரு. ஆர்.ஏ.பீ. பெரேரா** | பொது முகாமையாளர் (பதில்)<br>முகாமையாளர் (விநியோகம்) |
| **திரு. பீ.டீ.எல். குமாரசிறி** | தலைமை உள்ளக கணக்காளர் |
| **பொ.டி.எம்.என்.ஏ. திஸ்ஸாநாயக்க திருமதி.** | முகாமையாளர் (தொழில்நுட்பம்) |
| **ஆர்.பி.எஸ். போதிபால** | முகாமையாளர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்) |
| **திருமதி. எம்.எல்.யூ. பெரேரா** | முகாமையாளர் (ஆய்வுகூடம்) |
| **திரு. ஜி.ஜி. சமன்** | முகாமையாளர் (பதில்)<br>(கொள்முதல் மற்றும் இறக்குமதி) |
| **திருமதி. எம்.ஜீ.டீ. கயனி** | முகாமையாளர் (பதில்) (நிதி) |
| **திருமதி. டீ.எஸ்.எஸ். தர்மபந்து** | முகாமையாளர் (பதில்)<br>(நிர்வாகம் மற்றும் மனிதவளம்) |



# தேயிலை பயிர் செய்கைக்கு

டீ.-65, டீ-200, டீ-750, யூ.டீ.-1625. யூ-397, யூடீ.-752,
வீ.பீ.எல்.சீ.-880, வீ.பீ.எல்.சீ.-945 வீ.பீ.யூ.எம்-910,
யூ-625. எஸ்டீ/யூஎம்-400, எஸ்.டீ.யூ.வீ.ஏ-435. யூ-709



# நமது முயற்சியின் அடிப்படைகள்

### குறிக்கோள்

உயர்ந்த
சர்வதச
தரத்திற்கிணங்க
உற்பத்தி செய்யப்பட்ட
இரசாயன மற்றும் இயற்கை
உரம் இலங்கையின்
கைத்தொழில் சமூகத்திற்கு
வழங்குதல்

### நோக்கு

அரசாங்கத்தின்
கொள்கைகளுக்கு
அமைவாக பல்வகை
சந்தைக் கேள்விகளுக்கும்
ஏற்ற விதத்தில்
விவசாயதுறைக்கான
உள்ளீடுகள் மற்றும் சேவைகளை
உற்பத்தி செய்தல் மற்றும்
விநியோகித்தல் ஊடாக கம்பனி
இலாபகரமாக நிலைத்து நிற்பதனை
உறுதி செய்தல்

### இலக்கு

இலங்கையின்
நிலைத்தகு
அபிவிருத்திக்கு
பங்களிப்புச் செய்வதற்கு
பல்வகைப்பட்ட விவசாய
சேவை வழங்கும் முன்னனி
நிறுவனமாக திகழ்தல

### மதிப்புக்கள்

சுற்றுச்சுழல் நிலைத்தன்மையை பராமரித்தல், ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை உறுதி செய்தல், மற்றும் அடிமட்ட விவசாயிகளுடன் தொடர்க்கொள்ளுதல் எமது எதிர்கால உற்பத்தியினை கட்டியெழுப்பும் பிரதான மதிப்புக்களாகும்.

**நிலையான விவசாயத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது**



# காய் கறிகள் மற்றும் வணிகப் பயிர்ச் செய்கைக்கு

காய்கறிகள், பழங்கள், உருளைக்கிழக்கு, மிளகாய், பட்டாணி, நிலக்கடலை, பச்சை பயறு, மற்றும் சோளம், போன்றவற்றிற்கு விசேடமாக கலவை செய்யப்பட்ட உரவகைகள்.

# நிதியியல் சிறப்பம்சங்கள்

வருமானம்
**ரூபா. 2.2 பில்லியன்**

வரிக்கு முன் இலாபம்
**ரூபா. 162.6 மில்லியன்**

மொத்த சொத்துக்கள்
**ரூபா 32 பில்லியன்**

| நிதியியல் சிறப்பம்சங்கள் மற்றும் விகிதங்கள் | | | |
|---|---|---|---|
| **விடயம்** | **2021 (ரூபா)** | **2020 (ரூபா)** | **விகிதம் (%)** |
| | **Rs.** | **Rs.** | **%** |
| வருமானம் | 2,257,657,781 | 2,100,583,296 | 7 |
| வரிக்கு முன் இலாபம் | 162,590,416 | 188,443,929 | -14 |
| வரிக்கு பின் இலாபம் | 124,392,743 | 97,993,276 | 27 |
| ஒரு பங்கிற்கான சம்பாத்தியம் | 2.48 | 1.95 | 27 |
| சொத்துக்கள் மீதான இலாபம் | 7.03% | 8.28 | -15 |
| பொறுப்புக்கள் மீதாக இலாபம் | 0.36% | 0.34 | 6 |

| நிதி நிலைமை மற்றும் விகிதங்கள் | | | |
|---|---|---|---|
| **விடயம்** | **2021** | **2020** | **விகிதம் (%)** |
| மொத்த சொத்துக்கள் | 32,098,651,854 | 25,366,775,513 | 26.54 |
| மொத்த உரிமையாண்மை | 6,345,978,479 | 6,141,242,690 | 3.33 |
| வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை | 50,245,608 | 50,245,608 | 0.00 |
| ஒரு பங்கிற்கான தேறிய சொத்து | 126.30 | 122.22 | 3.34 |

# கடந்த பத்து வருடங்களின் **நிதிச் சுருக்கம்**

| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இ.ரூ.ஆ | இ.ரூ.ஆ | இ.ரூ.ஆ | இ.ரூ.ஆ | இ.ரூ.ஆ | இ.ரூ.ஆ (மீள்கூறப்பட்ட) | இ.ரூ.ஆ (மீள்கூறப்பட்ட) | இ.ரூ.ஆ | இ.ரூ.ஆ | இ.ரூ.ஆ |
| **விரிவான வருமானக் கூற்று** | | | | | | | | | | |
| வருமானம் | 2,496,268,383 | 2,450,132,816 | 2,563,549,727 | 3,835,989,834 | 4,242,769,733 | 2,350,637,985 | 3,373,989,990 | 1,869,949,695 | 2,100,583,296 | 2,257,657,781 |
| மொத்த இலாபம் | 310,189,751 | 621,684,097 | 575,467,461 | 855,558,167 | 1,097,447,923 | 231,025,777 | 31,497,063 | 189,371,158 | 267,726,824 | 416,141,028 |
| ஏனைய வருமானங்கள் | 197,912,757 | 108,809,998 | 93,172,755 | 142,197,667 | 122,926,594 | 29,096,825 | 45,440,368 | 107,856,870 | 209,623,485 | 118,465,561 |
| வரிக்கு முன் இலாபம் | 159,544,495 | 199,894,319 | 241,328,764 | 520,200,738 | 836,604,005 | 127,804,541 | 39,346,123 | 119,782,045 | 188,443,929 | 162,590,416 |
| வரி | (52,315,944) | (73,037,738) | (62,869,313) | 134,184,888 | (233,331,176) | 11,787,491 | (63,882,188) | (154,240,094) | (90,450,653) | (38,197,672) |
| வரிக்கு பின் இலாபம் | 107,228,551 | 126,856,581 | 178,459,452 | 386,015,851 | 603,272,829 | 139,592,032 | (24,536,064) | (34,458,049) | 97,993,276 | 124,392,743 |
| **நிதி நிலைமை பற்றியக் கூற்று** | | | | | | | | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | 502,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 | 502,456,080 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | 1,836,179,780 | 1,835,723,580 | 1,835,723,580 | 1,833,071,080 | 1,833,071,080 | 2,506,976,187 | 2,028,858,589 | 2,291,788,758 | 2,297,282,725 | 2,317,365,710 |
| வருமான ஒதுக்கங்கள் | 1,285,578,730 | 1,397,891,510 | 1,500,363,432 | 1,869,914,195 | 2,392,840,203 | 2,899,788,327 | 2,792,590,448 | 2,736,987,204 | 3,341,503,885 | 3,526,156,689 |
| மொத்த உரிமையாண்மை | 3,624,214,590 | 3,736,071,170 | 3,838,543,092 | 4,205,441,355 | 4,728,367,363 | 5,909,220,594 | 5,323,905,117 | 5,531,232,042 | 6,141,242,690 | 6,345,978,479 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 1,908,557,760 | 1,882,887,059 | 1,879,174,306 | 1,865,055,225 | 1,838,655,988 | 2,683,237,393 | 2,636,328,307 | 2,744,935,187 | 2,705,686,663 | 2,665,990,105 |
| மூலதன தொழிற்பாட்டு முன்னேற்றம் | - | - | - | 29,982,587 | 32,152,294 | 21,960,737 | 22,316,114 | 676,729 | 676,729 | 676,729 |
| பிற்போடப்பட்ட வரிச் செலவுகள் | 4,862,949 | 73,037,738 | 5,561,375 | 37,484,888 | - | - | - | | 5,493,967 | 21,992,312 |
| திறைசேரி உண்டியலகளில் முதலீடு | 471,025,753 | 338,620,163 | 369,088,140 | 489,125,747 | 514,903,604 | 532,548,539 | 439,277,353 | 634,370,554 | 698,334,484 | 730,446,740 |
| தொட்டு உணர முடியாத சொத்துக்கள | - | 669,017 | 344,717 | 115,417 | 79,667 | - | - | 17,501,026 | 13,754,126 | 9,560,797 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள | 71,951,574 | - | - | - | - | - | - | - | - | - |
| தேறிய நடைமுறைச் சொத்து | 1,706,541,296 | 1,915,693,141 | 2,025,842,182 | 2,417,551,302 | 2,963,028,124 | 3,020,938,645 | 16,516,623,681 | 9,121,613,694 | 3,658,556,182 | 19,880,264,806 |
| பிற்போடப்பட்ட வரி பொறுப்புகள | - | 1,086,164 | 6,647,539 | 44,132,427 | 40,928,542 | 251,974,437 | 242,009,768 | 643,022,709 | 169,037,795 | 139,082,220 |
| நீண்டகால கடன்கள | - | - | 17,728,367,618 | 31,304,325,268 | - | - | 20,746,712,026 | 14,795,213,338 | - | 15,991,700,302 |
| **காசுப் பாய்ச்சற் கூற்று** | | | | | | | | | | |
| தொழி.நட.இரு. தேறிய காசு உட்/ வெளிப்பாய்ச்சல | 12,695,227,509 | (9,517,159,808) | (5,094,105,859) | (9,560,794,959) | 4,859,448,679 | 11,542,320 | 8,052,725,854 | 182,709,212 | (282,165,789) | (5,899,813,904) |
| முதலீ. நட.இரு. தேறிய காசு உட்/ வெளிப்பாய்ச்சல யஉவளைவைறள | (8,458,411) | 83,232,936 | (498,105,232) | (1,021,212,231) | (1,086,700,012) | (908,705,035) | 278,487,418 | 1,301,650,014 | 1,435,897,612 | 37,785,222 |
| நிதி சம. நட.இரு.தேறிய காசு உட்/ வெளிப்பாய்ச்சல | (13,079,312,780) | 9,575,483,282 | 5,654,013,585 | 10,614,850,014 | (3,843,885,272) | (7,628,967,604) | 834,304,831 | 5,966,502,687 | (691,730,383) | 5,554,446,115 |
| **ஏனைய தகவல்கள்** | | | | | | | | | | |
| ஒரு பங்கிற்கான சம்பாத்தியம் ரூபா | 2.13 | 2.52 | 3.55 | 7.68 | 12.01 | 2.78 | (0.49) | (0.69) | 1.95 | 2.48 |
| ஒரு பங்கிற்கான பங்கிலாபம் ரூபா | 0.18 | 0.76 | 1.05 | 2.30 | 3.60 | 0.83 | (0.15) | (0.21) | 0.59 | 0.37 |
| ஒரு பங்கிற்கான தேறிய சொத்து ரூபா | - | - | - | 84 | 94 | 118 | 116 | 110 | 122.22 | 126.30 |
| நடை மறை விகிதம் (நேரங்களின் எண்ணிக்கை) | - | - | - | 1.06 | 1.09 | 1.09 | 2.60 | 1.60 | 1.19 | 3.08 |



# தென்னை பயிர்ச் செய்கைக்கு

வய்பீஎம் (டப்) / (B), ஏபீஎம் (டப்) / (B),
கள்ளிறக்கல் (டப்) / (B)



# தலைவரின் **செய்தி**

பணிப்பாளர் சபையின் சார்பாக, 2021 மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான இலங்கை உரக் கம்பனியின் வருடாந்த அறிக்கையை முன்வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

1964 ஆம் ஆண்டு முதல், நெல் மற்றும் ஏனைய பயிர்களுக்கான உரங்களை இறக்குமதி செய்தல், கலவை செய்தல் மற்றும் மொத்த விற்பனை செய்தலில், அரசுத்துறையில் லக்பொஹொர நிறுவனம் முன்னணியில் உள்ளது

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக்கம்பனியின் 57 வருட வரலாற்றில், தேசத்தின் விவசாய சமூகத்திற்கு தேவையான பயனுறுதியுடைய வர்த்தக மாதிரியால் உதவு செய்யும் CFC இன் தொடர்ர்ச்சியான அபிவிருத்தி மற்றும் இலாபகரமான கம்பனியாக நிலைத்திருக்க உறுதி பூண்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு கொவிட் - 19 தொற்றின் விரைவான முன்னேற்றத்தினை கண்டதுடன் இவற்றின் பெறுபேறு விவசாய துறைக்கு, விசேடமாக எமது பிரதான நோக்கான குறுகிய அளவினையுடைய விவசாயிகளுக்கு கடுமையாக தாக்கமளித்தது.

உலக ரீதியில் மற்றும் தேசிய ரீதியில் அனைத்து சமூக மற்றும் பொருளாதார குறிக்காட்டிகளும் ஒவ்வொன்றாக "தரவரிசையிலிருந்து சரிந்தன" மேலும் போக்குவரத்து கட்டுப்பாடுகின் நேர்மறையான தாக்கம், நோய்நிலைமை அதிகரித்தமை, பொதுமக்கள் இடையே அதிகரித்த பயம் போன்ற அனைத்தும் இந்த துறையின் மீது ஒரு பயங்கரமான சூழ்நிலையினை உருவாக்கியது.

எவ்வாறெனினும், அந் நேர்மறையான விடயங்களினை கருத்திற் கொள்ளாது, சுகாதார நெருக்கடியினால் நாடு உணவு நெருக்கடிக்கு முகங் கொடுப்பதினை தவிர்த்துக் கொள்வதற்கு அவர்களின் வழங்கல் வழிகளினை மாற்றாது வைத்துக் கொள்ளும் மற்றும் உற்பத்திகளை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கும் சவாலை CFCL எதிர்கொண்டது. இங்கு விற்பனை மற்றும் வருமானத்தில் சிறிதளவு வீழ்ச்சியினை கண்டமையின் ஊடாக எமது முயற்சிக்கான உயர் பலன் பெறப்பட்டது என பெறுமையுடன் கூறிக் கொள்கின்றேன். CFCL இனால்

கடந்த ஆண்டின் நான்காம் காலாண்டில் கொவிட் நெருக்கடியின் போதான அதன் சிறந்த நடைமுறைகளை தொடர்ந்து நடைமுறைப்படுத்தியமை, வேலைகளை மீள் கட்டமைத்து

ஊழியர்களுக்கு உதவி புரிவதற்கு குழுக்களை தக்கவைத்து ஊக்குவிப்பாளராக அதன் வணிக நடவடிக்கைகளை சரிசெய்தமை, போக்குவரத்து வழங்கியமை அல்லது வீட்டிலிருந்து பணியாற்றும் மாற்று தெரிவினை வழங்களை போன்று ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு உகந்த சுகாதார வசதிகளை வழங்கியமை போன்றன இதற்கான காரணங்களாகும்.

செயற்பாட்டு சூழலில் இந்த கருத்திற் கொள்ளக்கூடிய நேர்மறையான நிலையொன்று காணப்படுகையில், வருமானம் ரூபா 2.1 பில்லியன் இலிருந்து ரூபா 2.26 பில்லியன் வரை சிறிதளவில் முன்னேறியது, அது 7% அதிகரிப்பாவதுடன் கம்பனி வளர்ச்சியொன்றினை காண்பித்த மூன்றாவது வெற்றிகரமான அறிக்கையிடும் காலப்பகுதியாகும். அதற்கு எதிரே, கம்பனி ரூபா 216.7 மில்லியன் இல் இருந்து 416 வரை மில்லியன் மொத்த இலாபத்தினை அறிக்கையிட்டதுடன், அது 55.22% ஆண்டு வளர்ச்சியினை காண்பித்தது, கடுமையான பொருளாதார நிலைமையின் மத்தியிலும் எல்லைகளை அடைந்துக் கொள்வதற்கான காரணிகளாக கம்பனியின் முகாமைத்துவம் மற்றும் பதவியணியின் அர்பணிப்பு மற்றும் உறுதி காணப்படுகின்றது. வரிக்கு முன் இலாபம் முன்னர் அறிக்கையிட்ட காலப்பகுதியினுள் ரூபா 188 மில்லியனில் இருந்து ரூபா 162.6 மில்லியன் வரை குறைந்ததுடன் பங்கொன்றிற்கான வருவாய் ஆண்டிற்கு 27.18 சதவீத அதிகரிப்பினை காண்பித்து ரூபா 2.48 ஆக காணப்பட்டது.

CFCL நிறுவனமானது அதன் மனிதவளத்திற்கு முன்னுரிமையை பெற்றுக் கொடுக்கும் நிறுவனமாவதுடன் அவர்களின் திறன் மற்றும் நலன் ஆகிய இரண்டினையும் மேம்படுத்துவதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்துள்ளது. பணியாளர் மேம்பாடு மற்றும் நல்வாழ்விற்கான பல்வகை உத்திகளின் ஒருங்கிணைந்த விளைவுகள், கடந்த அறிக்கையிடும் காலப்பகுதிக்கு இணையாக குறைந்த பதவியணி மற்றும் குறைந்த பதவியணி கிரயத்தின் ஊடாக திருப்தியினை அதிரிப்பதற்கு காரணங்களான.

நிதியியல் ரீதியில் நிலையான அரச முயற்சியாண்மை ஒன்றாக, CFCL விவசாயிகளின் நெல் உர தேவையில் 60% சேவையை வழங்கியதில் பெருமிதம் கொள்வதுடன், யூரியா, எம்ஓபீ மற்றும் டீஎஸ்பீ உரத்திற்காக சர்வதேச ரீதியில் கொள்வன செய்யும் சில இடங்களில் ஆபத்து அற்ற விநியோக சங்கிலியை உறுதி செய்துள்ளது. அதன் உற்பத்தி திறனை மேம்டுத்துவதற்கு மற்றும் கிரயத்தினை குறைப்பதற்கு தமது வெவ்வேறு வணிக ரீதியான செயற்பாடுகளை ஒருங்கினைத்து எப்போதும் இலக்கை கொண்ட அமைப்பாக, தமது ERP அமைப்பில் நுழைவினை மேலும் விரிவாக்குவதுடன் அண்மைய எதிர்காலத்தில் நாடாளவிய வலையமப்பினை ஒருங்கிணைப்பதனை மற்றும் தண்ணியக்கத்தினை இலக்காகக் கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, விநியோக வலையமைப்பினை ஓருங்கிணைத்து விரிவாக்கியுள்ளதுடன், விசேட தேவை மற்றும் புவியியல் இலக்கினை நோக்காக கொண்ட சந்தைப்படுத்தல் முயற்சிகளின் விளைவாக நெல் இலக்கில் 87% மற்றும் ஏனைய உர இலக்குகளில் 63% சதவீதம் மீளாய்வாண்டினுள் நிறைவேற்றிக் கொள்வதற்கு மற்றும் சிறந்த ஆய்வகங்கமொன்றின் வெளியீடுகள் நாட்டின் விவசாயத் துறையில் லக்பொஹொர வணிகக் குறியின் கீழ் தயாரிப்பு வரம்பிற்கு மிக உயர்ந்த தரத்தினை உறுதி செய்கின்றது.

எங்கள்வெற்றிற்குபாரிய ஆதரவினைபெற்றுக்கொடுத்த அதி மேதகு சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களுக்கும், மதிப்பிற்குரிய மஹிந்தானந்த அலுத்கமகே அமைச்சர் அவர்களுக்கும் வரிசை அமைச்சுக்களுக்கும் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கும் எனது உள்ளார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன், பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கும் எமது முகாமைத்துவ குழுவின் அங்கத்தவர்களுக்கு மற்றும் லக்பொஹொர குடும்பத்தின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**ஜனத் விடானகே**

தலைவர்



# பொது முகாமையாளரின் அறிக்கை

2020/21 நிதி ஆண்டிற்காக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஆண்டறிக்கை முன்வைப்பதை குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி உர விற்பனையில் அதன் வெற்றிகரமான 56 வருடங்களை நிறைவு செய்கின்றது. இந்த செயற்பாட்டின் போது CFCL நாட்டின் சிறந்த காப்ரேட் நிறுவனமாக உருவடுத்துள்ளது. தரத்திற்கு இணையான “லக்பொஹொர” பிராண்டின் உரிமையாளர்களாக இருப்பதில் நாம் பெருமிதம் கொள்கின்றோம். இது தொடர்பாக, “லக்பொஹொர” பிராண்டின் தனிச்சிறப்பான உற்பத்திகளின் தரத்தினை உறுதி செய்வதற்கு எடுக்கவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கின்றது.

ஆரம்பத்திலிருந்தே CFCL இலங்கையின் தனியார் துறை உள்ளடங்கலாக ஒட்டுமொத்த உரம் துறையில் பல ஆண்டுகள் சந்தையில் முதன்மையாகவுள்ளது. சிரேஷ்ட முகாமைத்துவத்தின் வழிநடத்தல் மற்றும் உதவியின் கீழ் சிறந்து விளங்க முயற்சிக்கும் சந்தைப்படுத்தல் நிபுணர்களின் உந்துதல், அர்ப்பணிப்பு மற்றும் உயர் திறன் கொண்ட குழுவின் முயற்சியினால் இது சாத்தியமாகின்றது.

நாடு முழுதும் பரந்து விரிந்திருக்கும் தொழில்துறையில் மிகப்பெரிய டீலர் வலையமைப்பினை CFCL கொண்டுள்ளது. உரம் துறையில் எங்கள் கிடங்கு வலையமைப்பும் மிகவும் விரிவானது. இதன் ஊடாக எங்களது முழு அளவிலான உரங்களும் விவசாயிகளின் வீட்டு வாசலில் தேவையான நேரத்தில் மலிவான விலையின் கீழ் கிடைப்பதனை உறுதி செய்கின்றோம்.

நம்மை பொறுத்த வரையில், மனித ஆரோக்கியம், சுற்றுச்சூழல் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு வாழக்கூடிய உலகத்தினை விட்டுச் செல்வது எப்போதும் முக்கிய சிக்கலாகவுள்ளது. அதனால், எங்கள்

உற்பத்திக்கு காலநிலை மாற்றங்கள் மற்றும் நீர் வளத்தின் தாக்கம் குறைத்தல் எங்கள் நோக்கமாகியது. இந்த சூழலில், விவசாய இரசாயனங்களைச் சார்ந்திருப்பதனை குறைப்பதற்கும், நிலையான அபிவிருத்தியின் முன்னணயில் இலங்கயை நிலைநிறுத்துவதற்கும், அரச கொள்கைக்கு இணங்க, நிறுவனம் தனது உற்பத்தி தொகுப்பை கரிமப் பொருட்களுக்கு விரிவுப்படுத்தியது.

கரிம உரத்தின உற்பத்தி செய்து உள்ளூர் சநதைக்கு விநியோகிக்கும் முதல் அரசு நிறுவனம் இலங்கை உரக் கம்பனி என்பதனை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந் நிதி ஆண்டில், அதன் டீலர் வலையமைப்பு மற்றும் விவசாயிகளின் சிந்தனையை மாற்றும் முயற்சியில், செயற்கை பொருட்களுக்கு மேல் கரிமப் பொருட்களைப் பயன்படுத்துவதன் நன்மைகள் குறித்த விவசாயிகளின் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்காக, பெரிய அளவிலான, நாடளாவிய ரீதியில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இலங்கையில் விவசாய இரசாயனப் பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் எமது விவாய உற்பத்தியினை கரிம பிரியேத்தமாக மாற்றும் எமது நோக்கமான ஒரு நீடித்த உலகினை நோக்கிய உள்ளூர் மற்றும் உலகளாவிய முயற்சிகளுக்கான எமது அர்ப்பணிப்பு இதுவாகும்.

ஒரு புறம், கொவிட்-19 தொற்று நோய் விவசாய நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தியதன் காரணமாக விவாயத் துறைக்கு இந்த ஆண்டு கடினமான ஒன்றாக காணப்பட்டதுடன் இதன் விளைவாக உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாய துறையின் பங்களிப்பில் பரஸ்பரவ வீழ்ச்சி ஏற்பட்டது. CFCL அரச முன்னணி உர கம்பனியாக கொவிட்-19 தொற்று காலப்பகுதியில் நிலையான செயலாற்றலினை அறிவித்தது விநியோக சங்கிலிகள் மற்றும் விநியோக வழிகள் நல்ல விற்பனை இயக்கவியலின் விளைவாக செயல்பாடுகளின் நிலைத்தன்மையை தொடர்ந்து பராமரிக்கின்றன. எவ்வாறெனினும், கணிசமான நட்டத்தினை அடைப்படாததெனிலும் வருவாய் சற்று குறைந்துள்ளது. உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்வதில் உரங்கள் முக்கியமானவை என்பதே இதற்கு காரணமாகும்.

இது வரையில் பயணம் மிகவும் வெற்றிகரமாக காணப்பட்டதுடன் எதிர்கால் நம்பிக்கைக்குரியாகத் தெரிகின்றது. எங்கள் குழு எதிர்கொள்ளும் பல தடைகள், சவால்கள் மற்றும் சிரமங்களைப் பொருட்படுத்தாமல், எங்கள் குழுவின் வலுவான உறுதியும் மன உறுதியும் நம்மை பெரிய சாதனைகளுக்கு அழைத்துச் செல்லும். இன்னும் அங்கீகரிக்கப்படாத பல வழிகளில் சிறந்து விளங்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதனை நாங்கள் நன்கு அறிந்திருக்கிறோம் என்பதனை நாங்கள் நம்புகின்றோம். விவசாயத் துறையில் போக்குகளின் குழுவாக மாற்றுவதற்கான திறமை, அர்ப்பணிப்பு மற்றும் நிபுணணத்துவம் எங்களிடம் உள்ளது என்பதை நாங்கள் அறிவோம். வரவிருக்கும் ஆண்டுகளில் நமது பெரிய கனவுகளை நனவாக்க கைபோர்த்து முன்னேறுவோம்.



**ஆர். ஏ. பிரியந்த பேரேரா**
பொது முகாமையாளர் (பதில்)

# பணிப்பாளர்கள் சபை



**திரு. ஜனத் விடானகே**
தவைலர்/பணிப்பாளர்

ஜனத் விடானகே இலங்கையின் முன்னணி கல்வி நிறுவனங்களில் ஒன்றான ரோயல் கல்லூரியின் தயாரிப்பாகும். அவர் தனது கைகளை வைக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் தனிப்பட்ட மற்றும் தொழில் இலக்குகளை அடைவதில் ஒழுக்கம், நோக்கத்திற்கான அர்ப்பணிப்பு மற்றும் வளம் ஆகியவற்றைக் கொண்டுவருகிறார். இவர் தனது சகாப்தத்தின் சிறந்த பள்ளி குத்துச்சண்டை வீரர்களில் ஒருவராகவும் திகழ்ந்தவர். மேலும், இவர் பள்ளி படகோட்டுதல் அணியில் ரோயிங் ரைடராக இரட்டை வண்ணங்களைப் பெற்றுள்ளார். இவரின் தலைமைத்துவ திறமையை இனங்கண்டு கல்லூரி மாணவத் தலைவராக நியமிக்கும் பாக்கியம் கிடைத்தது. பள்ளிப் படிப்பை முடித்த பின்னர், ஹட்டன் நேஷனல் வங்கியில் சேருவதற்கு முன், ரஷ்யாவில் மருத்துவப் பட்டப்படிப்புக்கான புலமைப் பரிசை பெற்றுள்ளார். இவர் Cathay Pacific இல் முகாமையாளரான இவர், பல ஆண்டுகள் அந்தப் பதவியை வகித்ததோடு, அக்காலத்தில் சுற்றுலாத் துறையில் மிகவும் நம்பகத்தன்மையான நபர்களில் ஒருவராக திகழ்ந்தார். இவரது பதவிக் காலம் முழுவதும் இவர் சுற்றுலாத்துறையின் ஆர்வத்தை எச்சந்தர்ப்பத்திலும் இழக்காமல், தனது சொந்த சுற்றுலாத்துறை நிறுவனத்தின் உரிமையாளராகவும் ஆனார். இலங்கையில் அதிகமாக சுற்றுலாப் பயணங்களை மேற்கொண்ட நபர்களில் தனது

தொழில் வாழ்க்கையின் போது 137 நாடுகளுக்கு பயணம் செய்துள்ளதோடு, இவரது பயணங்களின் போது பெற்ற பாரிய அனுபவத்தை அவருடன் தொடர்புடைய ஒவ்வொரு வணிகத்திலும் பயன்படுத்துகிறார். இவர் லக்பொஹொர தலைவராக தேசத்திற்கான தனது சேவையைத் தொடர்ந்து செல்வதற்கு முன், இலங்கை மின்சார சபையின் (LECO) பணிப்பாளர் சபை அங்கத்தவராக பணிபுரிந்தார். இது தவிர விவசாயம் மற்றும் தாவரவியலில் தனது வாழ்நாள் முழுவதும் ஆர்வம் கொண்டிருந்தார். வாழ்க்கைக்கான அணுகுமுறையில் எப்பொழுதும் பணிவானவர், உலகம் தனது நோக்கம் மற்றும் வழிமுறைகள் ஏற்றுக்கொண்டாலும், இலங்கைக்கு நன்மையென தோன்றும் செயலைச் செய்ய ஒருபோதும் இவர் தயங்குவதில்லை.



### திரு. எஸ்.எல்.ஜீ பந்துசிரி
பணிப்பாளர்



### திரு. டப்.பீ. திமுது பதும்
பணிப்பாளர்

திரு. பந்துசிரி அவர்கள் அரச நிர்வாகத்தில் இளங்கலைப் பட்டம், நிதி முகாமைத்துவத்தில் முதுகலைப் டிப்ளோமா மற்றும் அரச நிதி முகாமைத்துவ டிப்ளோமாவும் பெற்றுள்ளார். இவர் விவசாயம், கிராமிய பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி ஆகிய அமைச்சுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் சபையின் உறுப்பினராக வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனிக்கு நியமிக்கப்பட்டார். இவர் அரச அடகு மற்றும் முதலீட்டு வங்கி உட்பட பல முன்னணி அரச சபை நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். இவர் தற்போது விவசாயம், கிராமிய பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் பிரதான கணக்காளராக கணக்கியல் துறையில் 34 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தையும் பெற்றுள்ளார். இவர் தற்போது கொழும்பு கொமர்ஷல் லிமிடெட் மற்றும் லக் பொஹொர நிறுவனம் ஆகியவற்றின் பணிப்பாளர் சபையை பிரதிநிதித்துவப்படுத்துகிறார். மேலும் இவர் நிறுவனத்தின் கணணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுவின் உறுப்பினருமாவார்.

திரு திமுது பதும் 2020.01.15 தொடக்கம் 2020.03.31 வரையில் இலங்கை உரக் கம்பனியில் பணிப்பாளர் சபையில் கடமையாற்றியுள்ளார்.

# பணிப்பாளர்கள் சபை



**திரு. கோசல ஜயகொடி**
பணிப்பாளர்



**திரு எச்.கே.சீ. தாருக அல்விஸ்**
பணிப்பாளர்

திரு.கோசல அவர்கள் தொழில் ரீதியாக சட்டத்தரணியாவார். இவர் குற்றவியல் சட்டம், பிராண்ட் பாதுகாப்பு மற்றும் கள்ளநோட்டு, நுகர்வோர் சட்டம், வணிக சட்டம், தொழிலாளர் சட்டம் மற்றும் எதிர்கால போக்குவரத்து ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர். இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் இளங்கலைப் பட்டமும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டவியல் பட்டமும் பெற்றுள்ளார். இவர் 2011 இல் இலங்கை உச்ச நீதிமன்றத்தின் சட்டத்தரணிக்கு அழைக்கப்பட்டதுடன் 10 வருட கால சட்டம் தொடர்பாக அனுபவமுள்ளவர். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICASL) மற்றும் இலங்கை கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் நிறுவனம் (AAT) ஆகியவற்றால் பாராட்டப்பட்டுள்ளார். இவர் சட்டம், கணக்கியல் மற்றும் நிதியியல், மூலதனச் சந்தை நடவடிக்கைகள் மற்றும் முகாமைத்துவ சேவைகளில் பல வருட அனுபவம் கொண்டவர்.

திரு. அல்விஸ் அவர்கள் கொழும்பு டி.எஸ். சேனநாயக்கா கல்லூரியின் புகழ்பெற்ற பழைய மாணவர் ஆவார். இவர் அரசியல் மற்றும் பொது நிர்வாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா பெற்றுள்ளார். தற்போது இங்கிலாந்தில் உள்ள பக்கிங்ஹம்ஷயர் புதிய பல்கலைக்கழகத்தில் சட்டவியல் பட்டத்தின் இறுதியாண்டில் கல்வி கற்று வருகிறார். கலாநிதி நாலக கொடஹேவா தற்போது நகர அபிவிருத்தி, கழிவு அகற்றல் மற்றும் சுகாதார துப்புரவு இராஜாங்க அமைச்சரின் ஒருங்கிணைப்பு செயலாளராக உள்ளார். பொது நிர்வாகம் மற்றும் அரசியலில் பத்தாண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்றுள்ளார்.



**திருமதி ஈ.ஜீ.ஜீ.எச் மதுகா ரணசிங்க**
பணிப்பாளர்



**திரு. எல்.. கெமுனு சமரவிக்ரம**
பணிப்பாளர்

திருமதி மதுகா ரணசிங்க ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நிதியியல் துறையில் இளங்கலை பட்டத்தையும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிதி பொருளாதாரத்தில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் ஏழு ஆண்டுகளுக்கும் மேலாக பொதுத் திறைசேரியில் பணியாற்றியுள்ளதுடன் மற்றும் தேசிய நிதி திட்டமிடலில் விரிவான அனுபவம் பெற்றவர். அவர் தற்போது பொது நிறுவனங்கள் துறையின் துணை இயக்குநராகவும், லக் உரம் மற்றும் மாநில அச்சகக் கூட்டுத்தாபனத்தின் இன் இயக்குநர்கள் குழுவின் கருவூலப் பிரதிநிதியாகவும் உள்ளார்.

திரு. சமரவிக்ரம அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் சிறப்புப் பட்டமும், தேசிய வணிக முகாமைத்துவ நிறுவனத்தில் பணியாளர் முகாமைத்துவ டிப்ளோமாவும் பெற்றுள்ளார். இவர் 1993 முதல் பணியாளர் முகாமைத்துவ நிறுவனத்தில் உறுப்பினருமாவார். இவர் தாய்லாந்தில் மனித வளப் பயிற்சி, இந்தியா, மலேசியா மற்றும் சிங்கபிரே ஆகிய நாடுகளில் மூலோபாய முகாமைத்துவம் மற்றும் ஹைதராபாத்தில் லியோனல் பொது முகாமைத்துவம் தொடர்பாக சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். 1987 – 1993 வரை தென்னை உற்பத்திச் சபையின் உதவி முகாமையாளராக தனது பணியைத் தொடங்கிய இவர், 1993 ஆம் ஆண்டு அசர அடகு மற்றும் முதலீட்டு வங்கியில் தனிநபர் முகாமையாளராக சேர்ந்துள்ளார். பின்னர் 2003 ஆம் ஆண்டு மனித வளம் மற்றும் விநியோகப் பிரிவில் உதவிப் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டு இறுதிகாயக 2011 முதல் 2012 வரை பிரதிப் பொது முகாமையாளராகவும் நியமிக்கப்பட்டார். இவர் 1999 இல் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பணியாளர் முகாமையாளராகவும், 1993 முதல் 1999 வரை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளராகவும் இருந்தார்.

# பணிப்பாளர்கள் சபை



**திரு. ஜீ.ஆர் டொன் சுனில**
பணிப்பாளர்



**திருமதி. ஏ.எம்.சீ.எஸ். திலகரத்ன**
கம்பனி செயலாளர்

திரு. கலகம ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்தில் கலைப் பிரிவில் இளங்கலைப் பட்டம், ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் சர்வதேசக் கற்கைகளில் முதுலை பட்டம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளாதார அபிவிருத்திக்கான முதுகலை டிப்ளோமா மற்றும் ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்தில் மதியுரைக்கான முதுகலை டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். அரசு ஊழியராக தனது பணியின் போது மேதலிக பணிப்பாளர் நாயகம் (பொது நிறுவனத் துறை), மேலதிக செயலாளர் - நிர்வாகம் உற்பத்தி மேம்பாடு மற்றும் கரிம பசளை வழங்கல் ஒழுங்குப்படுத்தல் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு மற்றும் மேலதிக பணிப்பாளர் - சிறப்பு செயற்திட்டங்கள் (முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு) போன்ற பதவிகளை வகித்துள்ளார். தற்போது அவர் இலங்கை உரக் கம்பனியின் சபையில் கடமையாற்றுவதுடன் மேலதிக செயலாளர் - அபிவிருத்தி (சுகாதார அமைச்சு) ஆகவும் கடமையற்றுகின்றார்.

திருமதி. சமிலா இலங்கை கம்பனியின் செயலாளராவார். இவர் 2009 ஆம் ஆண்டிலருந்து நிறுவனத்தின் உதவி முகாமையாளராக (சட்டம்) பணியாற்றியுள்ளார். இலங்கை சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்ற பின்னர், 2004 ஆம் ஆண்டு வழக்கறிஞராக பதிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் ஒரு வழக்கறிஞராவதோடு பொது சான்று வழங்கும் (நோட்டரி) அலுவலராக தொழிலாற்றுகின்றார். இவர் முழு நிறுவனத்தினுடைய கம்பனி செயலாளர் வேலைகளையும் மற்றும் சட்டரீதியிலான கட்டமைப்பு வேலைகளையும் மேற்கொள்கின்றார். இவர் இலங்கை உரக்கம்பனி லிமிடெட் குழுவோடு இணைவதற்கு முன்பு நுகர்வோர் விவகார அதிகார சபையில் சேவையாற்றியுள்ளதோடு இவர் களனிப் பல்கலைக்கழகத்தினுடைய கலைமாணிப் பட்டதாரியுமாவார்.



# இறப்பர் உற்பத்திக்கு

ஆர் ஏ – 465, ஆர்.யூ - 462, ஆர்யூ 465, ஆர்/வை பீ,
ஆர்/எஸ் ஏ உட்பட சிறப்பாக கலக்கப்பட்ட உரங்கள்

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு



**திரு ஆர்.ஏ.பீ. பெரேரா**
பொது முகாமையாளர் (பதில்) மற்றும் முகாமையாளர் (விநியோகம்)

விநியோக முகாமையாளரான திரு பெரேரா கொழும்பு பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் விசேட பட்டத்தை பெற்றுள்ளதுடன் முகாமைத்துவம் மற்றும் தொழிநுட்பத்தில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் தற்போது செயல்திறன் தொடர்பாக டிப்ளோமாவினை தேசிய உற்பத்தி திறன் செயலகத்தில் பயன்று வருவதுடன் மனிதவள முகாமைத்துவம், தொழில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, தீ பாதுகாப்பு மற்றும் இணைந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பராமரிப்பு தொடர்பாக விசேட நிபுணத்துவத்தினை கொண்டுள்ளார்.



**திரு. பீ.டீ.எல். குமாரசிரி**
கம்பனியின் சிரேஷ்ட உள்ளக கணக்காளர்

கம்பனியின் சிரேஷ்ட கணணக்காளரான திரு லால் குமாரசிரி களனி பல்கலைக்கழகத்தில் வணிக பிரிவில் விசேட பட்டத்தை பெற்றுள்ளதுடன் இலங்கை அரச நிதி கணக்காளர்கள் சங்கம், இலங்கை அரச நிதி மற்றும் அபிவிருத்தி கணக்காய்வு கல்வியகம் ஆகியவற்றில் உறுப்பினராகவுள்ளதுடன் அரச கணக்கு மற்றும் நிதி கல்வியகம் மற்றும் உள்ளக கணக்காய்வு கல்வியகம் ஆகியவற்றில் உள்ளக கணக்காய்வுக்கான சான்றிதழையும் பெற்றுள்ளார். கணக்காளர் மற்றும் சிரேஷ்ட உள்ளக கணக்காய்வாளராக தேசிய உபகரண இயந்திர ஸ்தாபனத்தில் கடமையாற்றியுள்ளார்.



**பொறியியலாளர் டி.எம்.என்.ஏ. திசாநாயக்க**
முகாமையாளர் (தொழிநுட்பம்)

கம்பனியின் பொறியியளாலரான திரு திசாநாயக்க அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் விசேட பட்டத்தையும் களனி பல்கலைக்களத்தில் வர்த்தக நிர்வாகத்தில் (நிதி) முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இலங்கை பொறியில் கல்வியகத்தில் உறுப்பினராகவுள்ளதுடன் இக்கல்வியகத்தில் பொறியியல் பிரதேச குழுவிலும் அங்கத்தவராகவும் உள்ளார்.



## திருமதி ஆர்.பி.எஸ் போதிபால

முகாமையாளர்
(விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்)

விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளரான திருமதி சுரங்கனி போதிபால விஞ்ஞான பட்டதாரியாகவுள்ளதுடன் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் விவசாயத்துறையில் (பெருந்தோட்ட முகாமைத்துவம்) விசேட பட்டத்தை பெற்றுள்ளார். பேராதனை பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞான பட்ட பின் பட்டதாரி கல்வியகத்தில் வர்த்தக நிர்வாகத்தில் முதுமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார். பெருந்தோட்டத்துறை முகாமைத்துவத்திலும் இவர் அனுபவம் வாய்ந்தவராகவுள்ளார்.



## திருமதி எம்.எல்.யூ பெரேரா

முகாமையாளர் (ஆய்வுக்கூடம்)

இவர் களனி பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானவியல் (உயிரியல் விஞ்ஞானம்) பட்டத்தைப் பெற்றுள்ளதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பகுப்பாய்வு இரசாயனவியலில் பட்ட பின் பட்டத்தையும் (ஆளஉ) பெற்றுள்ளார். 1996 இல் இலங்கை உரக்கம்பனயில் இணைந்த இவர் உர பகுப்பாய்வு சம்பந்தமான உயர் அனுபவம் உள்ளவரும் நீண்ட காலம் சேவை புரிபவருமாவார்.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு



**திரு. ஜி.ஜி. சமன்**
பதில் முகாமையாளர்
(கொள்முதல் மற்றும் இறக்குமதி)

கம்பனியின் பெறுகை மற்றும் இறக்குமதியின் பதில் முகாமையாளரான திரு சமன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் பட்டத்தை பெற்றுள்ளதுடன் தற்போது இவர் இலங்கை நிர்வாக அபிவிருத்தி கல்வியகக் கொள்ளுதல் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவத்தில் டிப்ளோமா பாடநெறியினை கற்கின்றார்.



**திருமதி எம்.ஜி.டீ. கயனி**
பதில் முகாமையாளர் (நிதி)

திருமதி கயனி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிகவியல் இளங்கலை (விசேட) பட்டத்தைப் பெற்றுள்ளதுடன், மருதானை தொழில்நுட்பக் கல்லூரி சம்பந்தமாக கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமாவை (HNDA) பெற்றுள்ளார். இலங்கை பொதுக் கணக்காளர்கள் சங்கத்தின் இணை உறுப்பினரான இவர், நிறுவனத்தில் 26 வருட அனுபவத்தைக் கொண்டுள்ளார்.



**திருமதி டீ.எஸ்.எஸ் தர்மபந்து**
பதில் முகாமையாளர்
(நிர்வாகம் மற்றும் மனிதவளம்)

இவர் களனி பல்கலைக் கழகத்தில் சமூகவியலில் முதுகலைப் பட்டத்தையும், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இளங்கலை தொழிற் கல்வியில் (விசேட) பட்டம் மற்றும் இலங்கை பீரிஸ் முகாமைத்துவ நிறுவனத்தில் மனித வள முகாமைத்துவம் சம்தந்தமான தொழில்முறை தகைமையையும் பெற்றுள்ளார். இவர், நிறுவனத்தில் 26 வருட அனுபவத்தைக் கொண்டுள்ளார்.



# நிறுவனக் கட்டமைப்பு




கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு
01
முகாமையாளர் (தொழிநுட்பம்) (01)
முகாமையாளர் (ஆய்வகம்) (01)
செயற்திட்ட முகாமையாளர் (01)
09
உதவி/பிரதி முகாமையாளர் தொழிநுட்பம் (01)
உதவி/பிரதி முகாமையாளர் ஆய்வுக்கூடம் (01)
உதவி/பிரதி முகாமையாளர் (சட்டம்) (02)
உதவி/பிரதி முகாமையாளர் (தகவல் தொழிநுட்பம் (02)
28
தொழிநுட்ப அதிகாரி (01)
தலைவரின் தனிப்பட்ட அதிகாரி (01)
37
முகாமைத்துவ உதவியாளர் (என். டெக்) 01 - /போர்மேன் (02)
முகாமைத்துவ உதவியாளர் (டெக்) (05)
முகாமைத்துவ உதவியாளர் (என். டெக்) (00)
முகாமைத்துவ உதவியாளர் (என். டெக்) (01)
முகாமைத்துவ உதவியாளர் (என். டெக்) (04)
முகாமைத்துவ உதவியாளர் (டெக்) (02)
176
முதன்மை மட்டம் (திறமையுள்ள) (12 + *4)
58
முதன்மை மட்டம் (பகுதி திறமையுள்ள) (03)
06
முதன்மை மட்டம் (தேர்ச்சியற்ற) (12 + *3)
முதன்மை மட்டம் (தேர்ச்சியற்ற) (02)
முதன்மை மட்டம் (தேர்ச்சியற்ற) (00)
முதன்மை மட்டம் (தேர்ச்சியற்ற) (01)
முதன்மை மட்டம் (தேர்ச்சியற்ற) (01)
முதன்மை மட்டம் (தேர்ச்சியற்ற) (02)
99



**46** நாடளாவிய உர விநியோக களஞ்சிய வலையமைப்பு....

# வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி

## நாடளாவிய உர விநியோக வலையமைப்பு

**வடமாநிலம்**
கொண்டவில்
கிளிநொச்சி
வாரணி
ஒலுமடு
முரங்கன்

**வட மத்திய மாநிலம்**
மதவச்சி
ஹொரொவ்பத்தன
கிரலோகம
நொச்சியாகம
ஹிங்குரக்கொட
வெலிகந்த
பொலன்னருவ

**வடமேல் மாநிலம்**
ஆனமடுவ
மாஹோ
குருனாகலை
நாத்தண்டிய

**மத்திய மாநிலம்**
தம்புளை
நாகொல்ல
மாத்தளை
கம்பளை
ரிகில்லகஸ்கட
நுவரெலியா

**கிழக்கு மாநிலம்**
திருகோணமலை
கந்தளை
மட்டக்களப்பு
தெஹியத்தகண்டிய
அம்பாரை
பொத்துவில்

**மேற்கு மாநிலம்**
ஹுனுபிட்டிய
தொடங்கொட
மத்துகம
பெலவத்தை

**சபரகமுவ மாநிலம்**
கேகாலை
குருவிட்ட
எம்பிலிபிட்டிய

**ஊவா மாநிலம்**
மஹியங்கனை
பிபிலை
பதுளை
மொனராகலை
வெலிமடை

**தெற்கு மாநிலம்**
வீரவில
தெஹிகஹலந்த
பட்ட-அத்த
மெதவியங்கொட
அக்குரஸ்ஸை
கொக்கலை
சூரியவெவ



# முகாமைத்துவ மீளாய்வு மற்றும் பகுப்பாய்வு




**விவசாயத் துறையினை மையப்படுத்திய பொது பொருளாதார பகுப்பாய்வு :**

கொவிட்-19 தொற்று முழு உலகத்தினதும் சமூக மற்றும் பொருளாதார குழப்பத்தினை உறுவாக்கியதுடன் இலங்கையின் உள்நாட்டு மற்றும் வணிக நிலைத்தன்மையில் கணிசமான வடுவொன்றினை மற்றும் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படலின் காரணத்தினால் இங்கையின் பொருளாதாரம் 2.3 சதவீதத்திற்கு இணையாக 3.6 சதவீதம் என சுருங்கி போனது. இது உலக சுகாதாரம் தொடர்பான பின்னடைவின் எதிர்மறையான தாக்கங்களை தணிக்க மத்திய வங்கி மற்றும் அரசினால் எடுக்கப்பட்ட சிறப்பன கொள்கை தீர்மாணங்கள் காணப்பட்ட போதிலும் சுதந்தரத்தின் பின்னர் பதிவு செய்யப்பட்ட ஆழ்ந்த பின்னடைவு இதவாகும். கொவிட் 19- பரவலினை கட்டுப்படுத்துவதற்காக நாடு முழுதும் ஏற்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் காரணத்தினால் 2020 ஆம் ஆண்டில் இந்த ஒட்டுமொத்த சருக்கமானது, ஆண்டுக்கு ஆண்டு சுருக்கத்திற்கு காரணம் இரண்டாம் காலாண்டினுள் அனுபவிக்கப்பட்ட 16.4 சதவீத சுருக்கத்தினாலாகும்.

தொற்றின் பெறுபேறாக ஏற்பட்ட உறுதியின்மை மற்றும் நிலையற்ற தன்மை காரணத்தினால் தொழிலாளர் பங்கேற்பு குறைந்ததுடன் 2009 இன் பின்னர் முதற் முறையாக வேலையின்மை வீதம் 5 சதவீத்திற்கு மேல் உயர்ந்தது. நிகழ்காலத்தில் சந்தை விலையின் கீழ் மொத்த உள்நாட்டு உற்பத்தி (புனூ) சுருக்கத்தின் ஒட்டுமொத்த தாக்கம் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு இணையாக இலங்கை ரூபா மதிப்பு சரிவை பிரதிபலிக்கும் வகையில், தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த ஆண்டில் 3,852 ஐ.அ.டொலர் தொடக்கம் 2020 இல் 3,682 ஐ.அ.மொலர் வரை குறைந்தது. தொற்று நோய் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த அளவினை 2019




இல் 84.0 பில்லியன் அ.டொலர்களில் இருந்து 2020 இல் 80.7 பில்லியன் அ.டொலர்கள் வரை சரிவை ஏற்படுத்தியது.

விவசாயம், வனவியல் மற்றும் மீன்பிடித்தல் நடவடிக்கைகளுடன் 2020 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தின் அனைத்து துறைகளும் கடநத் ஆண்டிற்கு இணயாக 2.4 சதவீதத்தினால் சுருங்கியது. விவசாய துறையில், கடல் மீன்பிடித்தல் மற்றும் கடல் மீன் வளர்ப்பு, மற்றும் வனவியல் மற்றும் மரம் வெட்டும் நடவடிக்கைகள் தொற்று நோயால் ஏற்பட்ட இடையூறுகள் காரணமாக குறிப்பாக சுருங்கியதுடன் 2019 இல் நிலவிய வறண்ட வானிலையின் பின்தங்கிய விளைவுகளால் பழங்களின் வளர்ச்சியும் குன்றியது. மறுபுறம், அரிசி தவிர மற்ற காய்கறிகள், அரிசி, பழங்கள் மற்றும் தானியங்களை வளர்ப்பதில் உப துறைகள் 2020 இல் உள்நாட்டுவிவசாய உற்பத்தியை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் கொள்கை முயற்சிகளால் ஆதரிக்கப்பட்டு நல்ல செயல்திறனைப் பதிவு செய்தன.

சமமான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை உறுதி செய்வதில் பாரம்பரிய விவசாயத் துறையில் உற்பத்தி மேம்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. மேலும் குறைந்தளவு உற்பத்தி திறன் விவாசாயிகள் மற்றும் விவசாயத் துறையில் உள்ள பிற தொழிலாளர்களின் வருமானத்தில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. அதிகரிக்கும் பொருளாதார அளவீடு (புயீ), நவீன தொழிநுட்ப அடிப்படையிலான விவசாயத்தை ஊக்குவித்தல், நல்ல விவசாய நடைமுறைகள் மற்றும் புவியியல் தகவல் அமைப்புக்கள் (புஜளு) போன்ற வயங்களின் திறமையான பயன்பாட்டிற்கான ஸ்மார்ட் விவசாய தொழிநுட்பங்களைப் பின்பற்றுதல் மற்றும் விவசாயிகளை விநியோக சங்கிலிகளுடன் திறமையாக இணைப்பது ஆகியவை விவசாயத் துறையின் உற்பத்தி திறனை அதிகரிக்கக் கூடிய முக்கிய அம்ச்களாகும்.

மேலும், நனோ தொழிநுட்பத்தினை பயன்படுத்தி மண் மேம்பாடு மற்றும் பயிர் நோய்களை கண்டறிதல், ஹைட்ரோபோனிக்ஸ் முறைகளை ஊக்குவித்தல், கலப்பின மற்றும் அதிக விளைச்சல் தரும் பயிர்களை தேர்ந்தெடுப்பது, பொதியிடல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகத்திற்கான மேம்பட்ட அறுவடைக்கு பிந்தைய சிகிச்சை நுட்பங்கள் கியவை விவசாயத் துறையில் உற்பத்தியினை அதிகரிக்க உதவும்.

## விற்பனைகளின் சுருக்கம்

| ஆண்டு | நெல் (மெ.டொன்) | ஏனைய பயிர்களுக்கான நேரடி உரம் (மெ.டொன்) | ஏனைய பயிர்களுக்கான கலவை உரம் (மெ.டொன்) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2019/2020 | 186,335,331 | 186,335.331 | 220,59.705 | 208,335.036 |
| 2020/2021 | 205,344.15 | 12,538.16 | 4,382.08 | 222,264.39 |

| நேரடி உரம் | விற்பனை (மெ.டொன்) |
|---|---|
| யூரியா | 143123.650 |
| டிஎஸ்பீ | 19785.000 |
| எம்ஓபீ | 42435.497 |

**2020.04.01 முதல் 2021.03.31 வரையிலான நெல் சலுகை, ஏனைய பயிர், சலுகையற்ற, கலவை மற்றும் கரிம உரங்களின் விற்பனை**

| மாதம் | யூரியா | டிஎஸ்பி | எம்ஓபீ | நெல் விற்பனை (மெ.டொன்) | சலுகையற்ற, கலவை மற்றும் உரிம உரங்களின் விற்பனை (மெ.டொன்) | மொத்த விற்பனை (மெ.டொன்) |
|---|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | 27698.350 | 2297.200 | 7295.200 | 37290.750 | 583.829 | 17.284 |
| மே | 18074.550 | 4675.650 | 6781.650 | 29531.850 | 4091.955 | 8.956 |
| யூன் | 7544.700 | 682.650 | 1731.250 | 9958.600 | 3524.426 | 16.228 |
| யூலை | 1162.150 | 204.550 | 286.547 | 1653.247 | 810.600 | 5.696 |
| ஆகஸ்ட் | 183.150 | 32.600 | 57.500 | 273.250 | 270.457 | 4.556 |
| செப்டெம்பர் | 139.750 | 22.700 | 12.350 | 174.800 | 79.348 | 14.544 |
| ஒக்டோபர் | 17532.450 | 5172.400 | 9692.700 | 32397.550 | 2191.087 | 8.260 |
| நவம்பர் | 27247.600 | 2472.250 | 6880.650 | 36600.500 | 2877.185 | 5.076 |
| திசெம்பர் | 32904.600 | 2440.850 | 7083.800 | 42429.250 | 620.815 | 0.788 |
| சனவரி | 4871.150 | 640.250 | 1348.900 | 6860.300 | 628.604 | 39.522 |
| பெப்ரவரி | 1455.700 | 176.400 | 384.650 | 2016.750 | 649.425 | 7.096 |
| மார்ச் | 4309.500 | 967.500 | 880.300 | 6157.300 | 592.506 | 16.294 |
| **மொத்தம்** | **143123.650** | **19785.000** | **42435.497** | **205344.147** | **16920.237** | **144.300** |

| 2020.04.01 முதல் 2021.03.31 வரையிலான விற்பனைப் பயிர்கள் | | |
|---|---|---|
| உரவகைகள் | விற்பனை (மெ.டொன்) | % |
| நேரடி | 12,538.159 | 73% |
| தென்னை | 1,412.270 | 8% |
| தேயிலை | 917.395 | 5.5% |
| இறப்பர் | 148.614 | 1% |
| காய்கறிகள் | 676.756 | 4% |
| பழங்கள் | 197.342 | 1.0% |
| பூக்கள் | 19.003 | 0.5% |
| ஏற்றுமதி | 399.218 | 2% |
| ஏனைய தானியங்கள் | 611.480 | 4% |
| சேதனம் | 144.300 | 1% |
| **மொத்தம்** | **170,64.537** | **100%** |




## நிதியியல் மதிப்பாய்வு

### வருமானம்

நிறுவனத்தின் வருவாய் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நெல் மற்றும் ஏனைய பயிர்களுக்கான உர விற்பனை ரூ. 2.258 பில்லியனாக இருந்ததுடன், இது ஆண்டுக்கு ஆண்டு 7% வீதம் அதிகமாகும்.

வருமானம்




### மொத்த இலாபம்

மீளாய்வாண்டில் நிறுவனம் ரூ. 416 மில்லியன் மொத்த இலாபத்தை பதிவு செய்துள்ளது. இது ஆண்டுக்கு 55.22% அதிகரிப்பு ஆகும்.

மொத்த இலாபம்




### நிர்வாகச் செலவுகள்

வலுவான மற்றும் இறுக்கமான நிர்வாகக் கட்டுப்பாடுகள் காரணமாக நிறுவனத்தின் நிர்வாகச் செலவுகள் ஆண்டுதோறும் குறைந்து வருகின்றது. எவ்வாறெனினும், ஒட்டுமொத்த நிர்வாகச் செலவுகள் 2.36% இனால் அதிகரித்தது (கடந்த ஆண்டிலிருந்து 3% குறைந்து) இது 550 மில்லியன் தொடக்கம் 563 மில்லியன் வரை.

நிர்வாகச் செலவுகள்




### விநியோகச் செலவுகள்

நிறுவன்தின் விநியோகச் செலவுகள் ரூபா 21 மில்லியனில் இருந்து 1 மில்லயனாக xxx ஆண்டுக்கு குறைந்துள்ளது.

விநியோகச் செலவுகள்



## வருமானம் மற்றும் செலவுகள்

வருமானம் ரூபா 346 மில்லியன் தொடக்கம் ரூபா 213 மில்லியன் வரை 38.44% வீழ்ச்சியொன்றினை பதிவு செய்து தொடர்ச்சியாக மூன்றாவது அறிக்கையிடும் காலப்பகுதியிலும் வீழ்ச்சி கண்டது. எவ்வாறெனினும், நிதிச் செலவுகள் 63 மில்லியன் இலிருந்து 21 மில்லியன் வரை 66.67% இனால் வீழ்ச்சி கண்டது.

நிதிச் வருமானம் மற்றும் செலவினம்




## வரிக்கு முன்னரான இலாபம்

வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 188 மில்லியன் தொடக்கம் 164 மில்லியன் வரை 13.30% இனால் வீழ்ச்சியடைந்தது. தொற்றின் காரணத்தினால் விற்பனை குறைவடைந்தமை வரிக்கு முன்னரான இலாபம் வீழ்ச்சியடைந்தமைக்கு பிரதான காரணமாகியது.

வரிக்கு முன்னரான இலாபம்




## வரி

ரூபா 38 மில்லியன் பிற்போடப்பட்ட வரிச் செலவினம் வருமான வரி கிரயத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இது ஆண்டிற்கு 52 மில்லியன் வீழ்ச்சியாகும்.

வரி




## பங்கொன்றிற்கான வருமானம்

ஆண்டுக்கான பங்கொன்றிற்கான இலாபம் ரூபா 1.95 தொடக்கம் ரூபா 2.48 இடையே காணப்பட்டதுடன் இது ஆண்டுக்கு 27.18% அதிகரிப்பாகும்.

## பங்கொன்றிற்கான வருமானம்

நிதியாண்டின் பங்கொன்றிற்கான வருமானம் ரூபா 0.59 ஆகும்.

பங்கொன்றிற்கான வருமானம்



## பங்கொன்றிற்கான இலாபம்

ஆண்டிற்கான பங்கொன்றிற்கான இலாபம் 0.59 இல் இருந்து 0.37 வரை வீழ்ச்சி கண்டது.




## பங்கு மீதான திரும்பல்கள் (ROE)

மீளாய்வாண்டில் நிறுவனம் அதன் பங்கு மீதான வருவாயை 0.34 ஆக அதிகரித்திருந்தது.




## சொத்துக்கள் மீதான திரும்பல்கள் (ROA)

மீளாய்வாண்டில் மொத்த சொத்துக்களில் 7.03% மீள் இலாபத்தை நிறுவனம் ஈட்டியது. இது கடந்த ஆண்டில் 8.28% ஆக காணப்பட்டது.



# கூட்டாண்மை ஆட்சி

நிறுவனமானது தரமான மனித வளங்கள் முகாமைத்துவ செயற்பாடுகள் மற்றும் உறுதியான கூட்டாண்மை பெறுமதிகளின் குறியீடுகளால் படிநிலை வழிகாட்டலுடன் நிறுவன மயமாக்கப்பட்டுள்ளது.

இலங்கை உரக்கம்பனியின் கூட்டாண்மை வழிநடத்தலை பராமரித்தலின் பூரண பொறுப்புடமையானது பணிப்பாளர் சபையின் உயர்ந்ததர அம்சங்களுடன் இணைந்ததாக உள்ளது. நிறுவனத்தின் கூட்டாண்மை வழி நடத்தலின் பொறிமுறையானது அனைத்து தரப்பினருடனும் உடன்பாட்டுடனான மதிப்பினை உறுதி செய்கிறது. கூட்டாண்மை வழிநடத்தலானது பின்வரும் விதிமுறைகள், சட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கு இணைந்ததாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

1. 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
2. நல்லாட்சிக்கான அரச வர்த்தகத் திணைக்களத்தின் அரச வர்த்தக வழிக்காட்டி
3. நல்லாட்சிக்கான அரச வர்த்தகத் திணைக்களத்தின் கொள்கை ஆவணம்

### பணிப்பாளர்கள் சபை

பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பானது அரசாங்க கொள்கைகளுடன் இணைந்ததாக அரசாங்க நிறுவனத்தின் திறனையும் பயனையும் உறுதி செய்வதாகும். வளங்களை பாதுகாத்தல், ஒழுங்கான கணக்குகளை பராமரித்தல், கொள்முதல்களின் சரியான அறிக்கைகளை உறுதிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அனைத்து சட்டரீதியான மற்றும் ஏனைய சட்ட தேவைகளுக்கு இணங்குதல் ஆகியவற்றின் மூலம் இலக்கை அடைய முடியும்.

பணிப்பாளர்கள் சபையானது நிறுவனத்திற்கு மூலோபாய இலக்குகள் உள்ளது என்பதையும் நிறுவன செயற்பாடுகள் மூலோபாய இலக்குகளை எய்யும் என்பதையும் உறுதிப்படுத்துகிறது. அங்கு உள்ளக வழிநடத்தல்கள் மற்றும் இடர் முகாமைத்துவத்திற்கான பயனுள்ள முறைமை உள்ளது என்பதையும் அந்த முகாமைத்துவ செயற்பாடுகள் பயனுள்ள முறையில் செயற்படுவதையும் வளங்களும் சொத்துக்களும் பயனுள்ள முறையில் உபயோகிக்கப்படுவதையும் முறைமையுடன் மேற்பார்வை செயகின்றது. பணிப்பாளர்கள் சபையானது ஆண்டுதோறும் பொது முகாமையாளர் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ பதவியணியின் செயல்திறனை மதிப்பீடு செய்து, ஆர்வமுள்ள தரப்பினருக்கு நிதி விடயங்களில் போதுமான விவரங்களை வழங்குவதுடன் அதே இயல்புடைய பிற தேவைகளை ஒரு முறையான அடிப்படையில் வெளிப்படுத்துகின்றது.

கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழுக்களை நியமிப்பதற்கான பொறுப்பு பணிப்பாளர்கள் சபைக்கு உள்ளது. நிறுவனமானது தரமான வழிகாட்டல்களுக்கான வழிகாட்டி, நெறிமுறைகள் குறியீடு மற்றும் கூட்டாண்மை வழிநடத்தலின் மூலோபாயங்களை அறிமுகம் செய்துள்ளது. பணிப்பாளர்கள் சபையானது செயற்பாடுகள் மற்றும் உரித்துடமையுடன் தொடர்புடைய எந்தவித முரண்பாடுகளும் தோற்றுவிக்கப்படாத நிலையில் அனைத்து அரசியலமைப்புகளும் வழிகாட்டிகளும் அரசாங்க சுற்றுநிரூபங்களுக்கு அமைய பின்பற்றப்படுகின்றன என்பதை உறுதி செய்கின்றது.

### பணிப்பாளர்கள் சபையினை நியமித்தல்

அரசாங்கத்தால் பணிப்பாளர்கள் சபை நியமிக்கப்படும் போது அந்த நியமனங்கள் தரம், போட்டி மற்றும் பொறுப்புணர்வு வழியில் மேற்கொள்ளப்படும். பணிப்பாளர்கள் சபையின் பொறுப்புகள், கடமைகள், பொறுப்புணர்வுகள் என்பவை பற்றிய நியமன கடிதத்தில் அதிகாரம் பெற்ற நபரினால் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும்.

நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் சபையானது நிறுவனத்தின் மூலோபாய இலக்குகள் மற்றும் கூட்டாண்மை சாதனைகள், நிறுவனத்தின் கூட்டாண்மை வழிநடத்தல், முகாமைத்துவம் மற்றும் நிர்வாக முறைகள் மற்றும் செயற்பாடுகளுடன் தொடர்புடைய பொறுப்புடைமைகளுடன் நியமிக்கப்படுவர்.

### பணிப்பாளர் சபை கூட்டங்கள்

பணிப்பாளர்கள் சபையானது 2020/21 ஆம் நிதியாண்டில் 10 கூட்டங்களை நடத்தியுள்ளதுடன் பணிப்பாளர் சபை ஆவணங்கள் ஊடாக முகாமைத்துவம் ஆனது சரியான நேரத்திற்கு குறிப்பிட்ட தகவல்களை சமர்ப்பித்துள்ளது.

### பணிப்பாளர்களுக்கான கொடுப்பனவுகள்

பணிப்பாளர்களுக்கான கொடுப்பனவுகள் அரசாங்கத்தினால் வடிவமைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் கொடுப்பனவு அளவுகளுக்கு அமைய வழங்கப்படுகின்றன. இந்த கொடுப்பனவு தொடர்பான தீர்மானங்களில் பணிப்பாளர்கள் தலையிட மாட்டார்கள்

### தலைவர்

பூரண கூட்டாண்மை கட்டமைப்பில் தலைவரின் பங்கானது மிகவும் முக்கியமானதாக திகழ்வதுடன்

அவர் சரியான வழியில் நிறுவனத்தை செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. தலைவரானவர் கூட்டாண்மை நிர்வாகத்தை வழிநடத்தல் ஒவ்வொரு பணிப்பாளரையும் சமமாக நடத்துதல், சரியான முறையில் பொறுப்புகளை விநியோகித்தல், சக்தியையும் அதிகாரத்தையும் சமப்படுத்தல், பணிப்பாளர் சபை கூட்டங்களை தொடர்ச்சியாக நடத்துவதை உறுதிப்படுத்தல், இந்த கூட்டங்களுக்கு அவர் தலைமை வகித்தல் ஆகியவை தொடர்பான செயற்பாடுகள் ஒழுங்கான முறையில் நடத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். அவர் தான் நிபுணத்துவம் பெற்ற துறைகளில் பங்களிப்பினை வழங்குவதுடன் செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபடுவதில் இருந்து விலகி இருத்தலுடன் மேற்பார்வை பங்கினை வகிப்பதுடன் அனைத்து பணிப்பாளர்களும் முன் செயலில் பங்கு வகிப்பதற்கு ஊக்குவிப்பார்.

## பணிப்பாளர்கள் சபையின் செயலாளர்

பணிப்பாளர்கள் சபையில் தொழில்சார் தகைமை பெற்ற செயலாளர் பணிப்பாளர்கள் சபை கூட்டங்கள், மற்றும் வருடாந்த பொது கூட்டங்கள், ஆகியவை தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அறிவித்தல், நேரத்திற்கு நேரம் பொருத்தமான விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவற்றை பணிப்பாளர் சபைக்கு மேம்படுத்தல் போன்றவற்றுக்கு பொறுப்பாக இருப்பார்.

பணிப்பாளர் சபை கூட்டங்களை நடத்துவது தொடர்பான நடைமுறைகளை பின்பற்றப்படுவது தொடர்பாக செயலாளர் உறுதிசெய்வதுடன் பணிப்பாளர்சபை பயனுள்ள வகையில் இயங்குவது, பணிப்பாளர் சபை ஆவணங்கள் நேரத்திற்கு விநியோகிக்கப்படுவது, பொறுப்புணர்வு தொடர்பான வழிகாட்டல்கள், பணிப்பாளர் சபையுடன் தொடர்புடைய தொடர்பான விதிமுறைகளும் நிபந்தனைகளும், பணிப்பாளர் சபை அங்கத்தவர்களும் உதவும் வகையிலான அறிவுறுத்தல்கள் என்பன அவரால் வழங்கப்படும்.

## பொதுமுகாமையாளரும் சிரேஷ்ட முகாமைத்துவமும்

பொதுமுகாமையாளரும் அவரது சிரேஷ்ட முகாமைத்துவமும் நிறுவனத்தின் வர்த்தக முகாமைத்துவத்தை தாங்கிச் செல்வதற்கு பொறுப்புடையதாக இருப்பர். அவர்கள் பணிப்பாளர் சபை மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு அமைய கொள்கைகளை திறப்பட ஆரம்பிப்பதற்கு பொறுப்புடையவர். பொதுமுகாமையாளர் மற்றும் அவரது சிரேஷ்ட முகாமைத்துவ குழுவிற்கு பரிசீலனை மற்றும் தீர்மானங்களை எடுப்பதற்கு தேவையான தகவல்களையும் விளக்கங்களையும் வழங்குகின்றனர். நிறுவனத்தின் திறம்பட நிர்வாகத்திற்கான நிர்வாக மற்றும் ஒழுங்குமுறை அமைப்புக்களைப் பராமரிக்கும் அதே வேளையில் நிறுவனத்தின் நோக்கு மற்றும் இலக்குகளை அடைவதற்கு உதவும் செயல்பாடுகள் திட்டங்கள் மற்றும் பாதீடுகளை தயாரிக்கின்றனர். பொது முகாமையாளர் மற்றும் சிரேஷ்ட நர்வாகத்திற்கான கொடுப்பனவுகளை தீர்மானிக்க, கொடுப்பனவு முன்மொழிவின் வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

## நிதியியல் அறிக்கைகள்

பணிப்பாளர்கள் சபையானது நிறுவனத்தின் வருடாந்த நிலையையும் பெறுபேறுகளையும் மிகவும் துல்லியமான முறையில் குறிப்பிடும் வகையிலான வருடாந்த நிதியியல் அறிக்கைகளை தயாரிப்பதற்கு பொறுப்புடையவர்களாவர். இலங்கையின் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்திற்கு இணங்க நிதியியல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும். நிதியியல் அறிக்கைகள் பொது முகாமையாளரை உள்ளடக்கியதாக பணிப்பாளர்கள் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினர் தேவைப்படும் போது முக்கியமான தகவல்களை வெளிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

## வருடாந்த கணக்காய்வு

பட்டயக் கணக்காளர்களின் பட்டியலில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி: திறைசேரியினால் பரிந்துரைக்கப்படும் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் பரிந்துரைப்படி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிப்புற கணக்காய்வாளரால் கம்பனியின் வருடாந்த கணக்காய்வு செய்யப்படுகிறது. வருடாந்த கணக்காய்வு அறிக்கையானது பணிப்பாளர் சபையினால் பகுப்பாய்வு செய்யப்பட்டதன் பின் வருடாந்த சம்மேளனத்தின் அங்கீகாரத்திற்கு முன்வைக்கப்படும். கணக்காய்வு நடவடிக்கையின் போது பாரபட்சமின்றி மற்றும் சுதந்திரமான தீர்மானத்தில் ஏற்படும் பாதிப்புக்களின் ஆலோசனை மற்றும் ஏனைய சேவைகள் வழங்குவதில் விலகியிருப்பதோடு, இவ்வெளிக் கணக்காய்வாளர்கள் ஒவ்வொரு 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாற்றப்படுவார்கள்.

## கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழு

நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழுவானது நிர்வாகப் பணியில் பணிப்பாளர்கள் சபைக்கு உதவுவதில் முக்கிய பங்கினை வகிக்கிறது. இந்த குழுவானது திறைசேரியில் நிதியியல் தகைமை பெற்ற பிரதிநிதியுடன் பணிப்பாளர் சபையின் மூன்று நிறைவேற்று தகைமையற்ற அங்கத்தவர்களை உள்ளடக்குகிறது. இந்த பிரதிநிதி கணக்காய்வு குழுவின் தலைவர் பதவியை வகிக்கிறார்.



# இடர் முகாமைத்துவம்

### இடர் முகாமைத்துவ செயன்முறைகள்

நிறுவனத்தின் இடரை வெளிப்படுத்துவதற்கான அடையாளமும் அங்கீகாரமும் இடர் முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்படுகிறது. நிறுவனமானது நட்டங்களை தவிர்க்கவும் நட்டங்களால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கவும் பயனுள்ள திட்டத்தை தயாரிக்கிறது என்பதை இது உறுதிப்படுத்துகிறது. இடர் முகாமைத்துவமானது இடர்களை அடையாளம் காணும் முகமாக தெளிவான ஒரு கட்டமைப்பு வழியை வழங்குகிறது. அனைத்து கட்டுப்பாடுகள் தொடர்பாக தெளிவான ஒரு புரிந்துணர்வினை அடைவதற்கு நிறுவனமானது மதிப்பீடு செய்து அதற்கு முன்னுரிமை அளிப்பதுடன் இந்த இடர்களை குறைப்பதற்கு தேவையான படிகளை எடுக்க முடிகின்றது.

நிறுவனமானது இந்த கவனக்குறைவினை அடையாளம் காணவும் மதிப்பீடு செய்யவும் குறைக்கவும் மாற்றவும் உடனடியாக விருத்தி செய்யப்பட்ட செயற்பாடுகளை பின்பற்றியது. எமது இடர் முகாமைத்துவ முறைமையின் பிரதான நோக்கமானது எமது வர்த்தகம் சார்ந்த செயற்பாடுகளின் இடர்கள் தொடர்பாக பூரண அவதானம் செலுத்தி உதவுவதாகும். இடர்களை அடையாளம் காண்பதுடன் மதிப்பீடு செய்வதும் முதன்மையாக மெற்கொள்ளப்பட வேண்டியவையாகும். பல விடயங்கள் செய்யப்படுவது அவசியம். இதன் பின்னர் அடையாளம் காணப்பட்ட இடர்களை புறக்கணிக்கவும் குறைக்கவும் மாற்றவும் திட்டமிடப்பட்ட மூலோபாயங்கள் பயன்படுத்தப்பட முடியும். பணிப்பாளர்கள் சபையானது நிறுவன செயற்பாடுகளை மையமாகக் கொண்ட பயனுள்ள இடர் முகாமைத்துவ முறைமை உள்ளமையை உறுதி செய்ய வேண்டும்.

### பிரதான இடர் காரணிகள்

எமது நிறுவனத்தில் சில இடர் காரணகளுக்கான தன்மைகள் காணப்படுவதுடன் செயல்பாட்டு அமைப்பில் நிச்சயமற்ற நிலையில் இவை நிலவுகின்றன. நிறுவனத்தினால் எதிர்நோக்கப்படும் அந்த இடர்காரணிகளை குறைப்பதற்கான படிகள் பற்றி பின்னர் கலந்துரையாடப்படும்.

### மூலோபாய இடர்பாடுகள்

எமது மூலோபாய நோக்கங்களில் பாதிக்கப்பட்ட நிச்சயமற்ற தன்மை காரணமாகவும் பயன்படுத்தப்படாத வாய்ப்புகள் காரணமாகவும் ஏற்படும் இடர்கள் மூலோபாய இடர்கள் என அழைக்கப்படுகின்றன.

நிறுவனத்தின் இலக்குகளுக்கு அமைய பணிப்பாளர்கள் மேற்கொள்ளும் பிரதான முடிவுகளில் இருந்து பிரதானமாக இவ்வகையான இடர்கள் எழுகின்றன.

எங்கள் முன்மொழியப்பட்ட நிறுவன இலக்குகளை அடையத் தவறுகின்றமையே மூலோபாய இடரின் பின்னணியில் உள்ள முக்கிய கருத்தாகும். இதைக் கருத்தில் கொண்டு, இயக்குநர்கள் குழுவும் நிர்வாகக் குழுவும் ஐந்தாண்டு எதிர்கால விரிவான திட்டம், 3 ஆண்டு செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் முறையான பின்தொடர்தல் மதிப்பாய்வுகளை நடத்துகின்றனர்.

### வணிக இடர்கள்

உற்பத்தி, சந்தைப்படுத்தல், உற்பத்திகளின் விற்பனை, உற்பத்தி கிரயத்தினை தாக்கும் பொருளாதார இடர்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய இடர்களை உள்ளடக்குவதுடன் தொழில்நுட்ப சூழல் மற்றும் வாடிக்கையாளர் தெரிவுகள் மாற்றங்களினால் ஏற்படும் இடர்கள் போன்ற இடர்களை வணிகள் இடர்கள் உள்ளடக்குகின்றது. எமது வர்த்தகத்துடன் தொடர்புடைய பிரதான உள்ளக இடர்கள் பழைய உற்பத்திகளுடன் ஒப்பந்தம் செய்யக்கூடிய இயலாமை மற்றும் புதிய உற்பத்தி அபிவிருத்தியுடன் தொடர்புடைய இடர்கள் ஆகும். பழைய உற்பத்திகளுடன் ஒப்பந்தம் செய்வதற்கான இயலாமை நான்கு மடங்காகும். அதாவது வாடிக்கையாளர்களின் தேவைகளை புரிந்து கொள்வதற்கான இயலாமை, தொழில்நுட்பம், கைத்தொழில் மற்றும் பொருளாதார காரணிகள் மற்றும் தத்துவார்த்த தேவைகள்.

நிறுவனமானது வாடிக்கையாளர்களின் மாற்றங்கள் நிமித்தம் வாடிக்கையாளர்களுக்கு திருப்தி மற்றும் மதிப்பீடுகள் மீதான முறையான புள்ளிவிபர ஆய்வினை நடத்துகிறது. நிறுவனத்தின் சட்ட விதிகள் மற்றும் சிபாரிசுகளின் எதிர்கால மாற்றங்களை அறிந்து கொள்வதற்கு நிறுவனமானது முன்னணி சட்ட சபைகள் மற்றும் நிறுவனங்களான அரசாங்க தென்னை ஆய்வு நிலையம், தேயிலை ஆராய்ச்சி நிலையம், இறப்பர் ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றுடன் நெருங்கி செயற்படுகிறது.

சந்தை மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப பூரண கற்கைகளின் பின்னரே புதிய உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

### வணிகமற்ற இடர்கள்

இந்த இடரானது பிரதான வர்த்தகத்துடன் தொடர்பற்று இருப்பதுடன் இது பிரதானமாக நீண்டகால

நிதியியலுடன் தொடர்புடையதாக உள்ளது. இந்த நிதியியல் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நீண்ட காலத்துக்கான நிதி பெறுதலை கருத்திற்கொண்டு எதிர்கால 5 வருடங்களுக்கான செயற்றிட்டம் மற்றும் 3 ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் ஊடாக நிறுவனத்தின் நீண்ட கால நிதித்தேவைகளை பூர்த்தி செய்வதற்கான காரணிகள் அடையாளம்காணப்படுகின்றன. பணம்உள்ளேவருவதும் நிறுவனத்தில் இருந்து வெளியே செல்வதும் திட்டமிட்ட வருடாந்த வரவு - செலவு திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் மூலம் திறனுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளதுடன், எந்தவித உடனடி பணத்தேவைகளும் எழும்பமாட்டாது.

### 4.1.2.4. செயற்பாட்டு இடர்கள்

நிறுவனத்தின் அடிமட்டப்பகுதியில் என்ன நடக்கிறது என்பது தொடர்பான கருத்தினை இது அளிக்கிறது. செயற்பாட்டு இடர்கள் நேரடியாக நிறுவனத்தின் பிரதானமாக உள்ளக வளங்கள், முறைமைகள், செயற்பாடுகள் மற்றும் ஊழியர்களில் தங்கியுள்ளது. அத்துடன் இது இயற்கை சூழ்நிலைகளான அதாவது விற்பனை நிலையங்களின் பன்முக செயற்பாடுகள் மற்றும் இயந்திரம், ஊழியர்களுக்கான செலவு மற்றும் மோசமான காலநிலை செயற்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

- பாரிய தீ பாதுகாப்பு முறையானது போதுமான தீயணைப்பாளர்கள் மற்றும் எச்சரிக்கை முறைமையை கொண்டதாக நிறுவனத்தால் பராமரிக்கப்படுகிறது.

- தீ காரணமாக சேதங்கள் ஏற்படும் போது அதனை ஈடு செய்யும் முகமாக நிறுவனமானது தீ காப்புறுதி காப்பீடு ஒன்றினை கொள்வனவு செய்துள்ளதுடன் மேலதிக இலத்திரனியல் காப்புறுதியை அல்ட்ரா தன்மையான ஆய்வுகூட உபகரணங்களுக்காக கூடுதல் மின்னணுக் காப்பீட்டையும் கொண்டுள்ளது.

- கொள்ளை மற்றும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கத்தை குறைக்கும் முகமாக பண பாதுகாப்பு காப்புறுதியும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

- ஒவ்வொரு இறக்குமதி செய்யப்படும் பொதி சரக்கு கப்பலுக்கும் போதுமான கடல் காப்புறுதி சான்றிதழ்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

- பணம் மற்றும் பணமற்ற ஊழியர் திட்டங்களுக்கு அமைய நிறுவனத்தின் ஊழியர்களுக்கான செலவு குறைந்த மட்டத்தில் உள்ளது.

### 4.1.2.5. நிதி இடர்கள்

பண சாதனத்தை பயன்படுத்துவதில் கடன் இடர், திரவ இடர் மற்றும் சந்தை இடர் ஆகியவற்றை உள்ளடக்கியதாக நிறுவனமானது பண இடரினை கொண்டுள்ளது.

### 4.1.2.6. கடன் இடர்

நிறுவனத்தின் பொறுப்புகளுக்கு அமைய தொடர்புடைய தரப்பினர் உடன்படாத பட்சத்தில் கடன் இடர் ஆனது நிறுவனத்தின் நிதியியல் நஷ்டத்துடன் தொடர்புடைய இடர் ஆகிறது. கடன் இடர் ஆனது பிரதானமாக நிதியியல் நிறுவனங்களுடன் கடன் மற்றும் பண வைப்புகள் மீதான விற்பனைகள் காரணமாக எழுகிறது. இவ் இடரினை குறைப்பதற்கு பின்வருவன மேற்கொள்ளப்படுகின்றன,

- விநியோகஸ்தர்களை நியமிப்பதற்கு முன், பிராந்திய விற்பனை முகாமையாளர்கள், பிரதான உள்ளக கணக்காளர்கள், நிதி முகாமையாளர்கள் மற்றும் நிறுவனத்தின் சட்டப் பணியாளர்கள் அடங்கிய குழுவினால் ஒவ்வொரு நபரின் திறனைப் பற்றிய விரிவான பகுப்பாய்வு நடாத்தப்படும்.

- கடன் வசதிகளை வெளியிட முன்னர் விநியோகஸ்தர்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினரிடமிருந்து வங்கி உத்தரவாதங்கள் பெறப்படுகின்றன.

- கடன் காலங்கள் மற்றும் பெறுமதி வரையறைகள் விநியோகஸ்தர்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினருக்கு கடன் ஆய்வாளர்களினால் செய்யப்படும் முடிவுகளுக்கு அமைய குறிப்பிடப்படும்.

### திரவத்தன்மை இடர்கள்

கம்பனிக்கு அதன் நிதிக் கடமைகளை நிறைவேற்ற இயலாமை திரவ இடர்கள் என்று அழைக்கப்படுகிறது. திரவ இடர்களை நிர்வகிப்பதற்காக நிறுவனத்தின் கொள்கையானது, சாதாரண மற்றும் எதிர்பாராத பொறுப்புகளை சந்திக்க போதுமான பணத்தொகை இருப்பதை உறுதி செய்வதாகும். அடுத்த ஐந்தாண்டுகளுக்கான விரிவான திட்டமும், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான செயல் திட்டமும், நிறுவனத்தின் பணப் புழக்கங்கள், முன்பே இருக்கும் பணப் புழக்கங்கள் மற்றும் வெளிச்செல்லும் பண வரவு ஆகியவற்றைக் கண்டறிய உதவுகின்றன. நிறுவனம் அந்த பணப்புழக்கங்களை நெறிப்படுத்தியதுடன் வருடாந்த அறிக்கை மற்றும் திட்டமிடல் திட்டத்தின் மூலம் அனைத்து நிதி பொறுப்புகளையும் தீர்ப்பதற்கான வசதிகளை வழங்கியுள்ளது.

### சந்தை இடர்

ஏற்ற இறக்கமான அந்நிய சொவணிக்கு (பணமாற்று இடர்) இணங்க வட்டி வீதங்கள் ஏறி இறங்குவதால் (வட்டி இடர்) சந்தை விலையின் ஏற்ற இறக்கமானது சந்தை இடர் என அழைக்கப்படுகிறது. இது நிறுவனத்தின் வருமானம் மற்றும் நிதியியல் சாதனத்தை பராமரிக்கும் கொள்ளளவை பாதிக்கிறது.

### நாணய பரிமாற்று இடர்

நாணய பரிமாற்று இடரானது அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் மதிப்பு ஏறி இறங்குவதால் நிறுவனத்தை நாணய பரிமாற்று இடருக்கு உள்ளாக்குகிறது.

### வட்டி இடர்

குறிக்கப்பட்ட வட்டி வீதம் மற்றும் வங்கி வைப்புகளுக்கான வட்டி வீதத்தின்கீழ் கடன் கொள்வனவுகளுக்கான சந்தை வட்டி வீதங்களுக்கான ஏற்ற இறக்கம் வட்டி இடர் என அழைக்கப்படுகிறது.

### ஒழுங்குமுறை இடர்

உரத்தின் இறக்குமதி, உற்பத்தி, விநியோகம் மற்றும் நுகர்வு தொடர்புடைய அரசாங்க விதிகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களான அதாவது தென்னை ஆராய்ச்சிநிலையம், தேயிலை ஆராய்ச்சி நிலையம், இறப்பர் ஆராய்ச்சி நிலையம் போன்றவற்றினால் வலியுறுத்தப்படும் சிபாரிசுகள் என்பனவற்றில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும்போது இதன்படியே நடப்பதற்கு நிறுவனத்திற்கு ஒழுங்குமுறை அதிகாரம் உள்ளது. இந்த ஒழுங்குமுறை அமைப்பில் ஏதாவது சாத்தியமான மாற்றத்தினை அடையாளம் காண்பதற்கு நிறுவனமானது இந்த நிறுவனங்களுடன் நெருங்கி செயற்படுகிறது.

எவ்வாறாயினும் இந்த இடர் காரணிகள் இந்த பட்டியலினை வரையறை செய்யாததுடன் நிறுவனமானது இவ்வாறான மாற்றங்கள் தனது செயற்பாடுகளை பாதிக்கக்கூடாது என்பதில் எச்சரிக்கையாக உள்ளது.

# **பிராந்திய** அறிக்கைகள்

# மனிதவள
# முகாமைத்துவ அறிக்கை

### மனிதவள கொள்கைகளில் சிறந்த நடைமுறைகள்

எமது மனித வளங்கள் முகாமைத்துவ மூலோபாயங்கள் திறைசேரி மற்றும் நேரியல் அமைச்சினால் கொடுக்கப்பட்டுள்ள வழிக்காட்டல்கள், கடை மற்றும் அலுவலகச் சட்டம், வேதன சபை அவசர வழிகாட்டல்களுக்கு இணங்கவும் தற்போது இலங்கையில் நடைமுறையில் உள்ள சம்பந்தப்பட்ட தொழில் சட்டங்களுக்கு அமையவும் முறையாக தயாரிக்கப்பட்டுள்ளன. நிர்வாக ஒழுங்கு விதிகள் மற்றும் நாட்டின் தாபன விதிக் கோவையை கடைப்பிடிக்கும் முகமாக நிறுவனமானது அதன் மனித வளங்களின் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு முயற்சி செய்வதுடன் விடா முயற்சியுடனும் வெளிப்படையாகவும் நிறுவனத்தின் கட்டமைப்பை தோற்றுவிப்பதுடன் சம்பளங்கள் மற்றும் பணிவியணி ஆணைக் குழுவினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைவாக இடைவெளிகளை அடையாளம் கண்டு அவற்றை நிரப்புவதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் உருவாக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய பதவியுயர்வுகளை வழங்குவதுடன் ஊதியப் படிநிலைகளை அமைத்துக் கொள்ளல்.

### ஊழியர் நலன் திட்டங்கள்

அரசாங்க வழிகாட்டல்களுக்கு இசைவாக நிறுவனமானது மொத்த சம்பளத்தில் 15% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF) மொத்த சம்பளத்தில் 3% ஐ ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் (ETF) பங்களிப்புச் செய்கிறது.

### நலன் திட்டத்தின் அறிமுகம்

இலங்கையின் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தகைமையுடைய மதிப்பீட்டாளர் ஒவ்வொரு வருட நிதியியல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நலன் பொறுப்பினை கணக்கிடுவதுடன் ஒவ்வொரு ஊழியரினதும் முதலாவது சேவை வருடத்தில் இருந்து ஓய்வூதிய நலன் பொறுப்புக்கான ஒதுக்கீடுகள் கணக்கிடப்படும்.

### ஊழியர் ஊக்கப்படுத்தல்

நிறுவனமானது மனதுக்கு இசைவான பணி சூழலை உருவாக்குதல், வசதிகளை மேம்படுத்தல், அழுத்தத்தை குறைத்தல் மற்றும் ஊழியர்களுக்கு நிறுவனத்தின் அன்றாட வணிகத்தில் வலுவான உரிமையை வழங்குவதன் மூலம் ஊழியர்கள் தமது ஆற்றலையும் உற்பத்தித்திறனையும் அதிகரிப்பதற்கு ஊக்குவிப்பதில் நிறுவனம் தீவிர கவனம் செலுத்துகின்றதுடன் நிறுவனத்தின் குறுகிய மற்றும் நீண்ட தவணை இலாப பெறுபேறுகளில் குறிப்பிடத்தக்க தேய்வு ஏற்பட்ட போதிலும் இதனை பின்பற்றுகின்றது.

### நிதியியல் நலன்கள்

- செயல்திறன் மதிப்பீட்டுக்காக சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைய ஒவ்வொரு ஊழியரினதும் தனிப்பட்ட செயற்திறனை அடையாளம் காணும் ஒரு வருடாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு திட்டம்.
- நிதியியல் அழுத்தத்தை குறைக்கும் முகமாக தகைமையுடைய ஊழியர்களுக்கு தேநீர், உணவு மற்றும் ஆடை போன்றவற்றுக்கு கொடுப்பனவுகளை வழங்கல்
- தொழிலிடத்தில் உள்ள அனைத்து ஊழியர்களுக்கும் ஆண்டில் அதிகளவு பயன்படுத்தாத மருத்துவ விடுமுறைகளுக்கு ஈடாக பணத்தினை வழங்குதல்.
- தகைமையுடைய ஊழியர்களுக்கு கையடக்கத் தொலைபேசிகளை வழங்குவதுடன் கையடக்க தொலைபேசிகள் மற்றும் நேரடித் தொலைபேசிகளுக்கான பற்றுச்சீட்டுக்குரிய தொகையை வழங்குதல், மீண்டும் நிறுவனத்தின் சார்பான வர்த்தக செயற்பாடுகள் காரணமாக ஊழியர்கள் மீது ஏற்படும் சுமையை இது குறைக்கிறது.
- ஊழியர்களுக்கான பொறுப்பினை புரிந்து கொள்ளும் முகமாக வேலைக்காக எளிய பொருளியல்சார் தொகையினை வழங்குதல், எமது ஊழியர்களின் பிள்ளைகளுக்கு தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கல்வி, கலாசாரம் அல்லது விளையாட்டு செயற்பாடுகளுக்கு நிதியியல் உதவிகளை வழங்குதல்.

### ஏனைய நலன்கள்

- விநியோக இலக்குகளை அடையும் பிராந்திய முகாமையாளர்களுக்கு உத்தியோகப்பூர்வ வாகனங்கள் வழங்கப்படும்.

- மாவட்ட விற்பனை நிறைவேற்று ஊழியர்களுக்கு சோர்வினை குறைத்து உற்பத்தித்திறனை அதிகரிக்கும் முகமாக மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன.
- அனைத்து ஊழியர்களுக்கும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கும் சுகாதார சேவையினை மேம்படுத்தும் முகமாக மருத்துவ காப்புறுதி திட்டமானது உருவாக்கப்பட்டுள்ளது.
- அதிகளவில் விற்பனை செய்யும் மாவட்ட விற்பனை நிர்வாகிகளை ஊக்குவிக்கும் வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணங்கள் வழங்கப்படும்.
- திறந்த தகவல்தொடர்பு கொள்கையினூடாக கீழிருந்து உயர்மட்ட வரை தகவல்கள் சுதந்திரமாகவும் மற்றும் நேர்மாயாகவும் செல்ல ஊக்கப்படுத்தும் அச்சமற்ற சூழலை ஊக்கப்படுத்தும் நிறுவன கலாசாரத்தை உருவாக்குதல்.
- மனநலம் மற்றும் தொழில்முறை திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஆன்மீக மற்றும் திறன் தொடர்பான பயிற்சித் திட்டங்கள் எமது அனைத்து ஊழியர்களுக்கும் வழக்கமான அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

### மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள்

### வயது குழுக்களுக்கான ஊழியர் கிரயம் (பயிற்சி)

| வயது பிரிவு | மொத்தம் (பங்கேற்பாளர்கள் மட்டும்) | முதலீடு |
|---|---|---|
| 18 - 30 | - | - |
| 30 - 40 | 4 | 314,000.00 |
| 40 - 50 | 2 | 237,000.00 |
| 50 - 60 | 3 | 314,000.00 |
| **மொத்தம்** | **9** | **865,000.00** |

### பாலினம் அடிப்படையில் முதலீடு

| | ரூபா. |
|---|---|
| ஆண் | 858,000.00 |
| பெண் | 7,000.00 |
| **மொத்தம்** | **865,000.00** |

## எங்கள் பணியாளர்கள் கட்டமைப்பு

நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கு லக்பொஹொர உறுப்பினர்களின் முழு அர்ப்பணிப்பே நிறுவனத்தின் வெற்றியின் ரகசியமாகும். எங்களிடம் 389 பணியாளர்கள் குழுவொன்று இருக்கின்றனர். அவர்கள் நிறுவனத்தின் முக்கிய மூலோபாய திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் முக்கிய குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை அடைவதில் உறுதியாக உள்ளனர். வேலை அடிப்படை, சேவை பிரிவு, பிரதேச மற்றும் ஆண் பெண் ஆகியவற்றின் அடிப்படையில் எங்கள் வேலை வகைப்பாடு கீழே காட்டப்பட்டுள்ளது.

பதவிநிலை தகவல்கள் 2021.03.31

மனிதவள வகையீடு - சேவை நிலை

பதவிநிலை கூட்டமைவு – அங்கீகரிக்கப்பட்ட பதவிநிலை மற்றும் உள்ளவாரான பதவிநிலை

| சேவை மட்டம் | வகை | சம்பள குறியீடு | 2021.03.31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவிநிலை | 2021.03.31 இல் உள்ளவாரான பதவி நிலை | |
|---|---|---|---|---|---|
| | | | | நிரந்தர | ஒப்பந்த |
| சிரேஷ்ட | சிரேஷ்ட முகாமையாளர் | HM 2.1 | 1 | 0 | |
| | சிரேஷ்ட முகாமையாளர் | HM 1.2 | 9 | 5 | |
| | முகாமையாளர் | MM 1.2 | 28 | 18 | |
| மூன்றாம் நிலை | கணிஷ்ட முகாமையாளர் | JM 1.1 | 37 | 28 | 1 |
| இரண்டாம் நிலை | முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பம்) | MA 2.1 | 11 | 7 | |
| | முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பமற்ற) | MA 1.1 | 165 | 153 | |
| முதன்மை நிலை | முதன்மை நிலை (தேர்ச்சி பெற்ற) | PL 3 | 58 | 67 | 1 |
| | முதன்மை நிலை (அரை தேர்ச்சி பெற்ற) | PL 2 | 6 | 4 | |
| | முதன்மை நிலை (தேர்ச்சியற்ற) | PL 1 | 99 | 88 | |
| **மொத்தம்** | | | **414** | **370** | **2** |

அங்கீகரிக்கப்பட்ட பதவிநிலை மற்றும் உள்ளவாரான பதவிநிலை




2021.03.31 இல் அங்கீகரிக்கப்பட்ட பதவிநிலை (நிரந்தர)



## மாகாண ரீதியான பதவியணி

| இல | மாகாணங்கள் | ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வட மற்றும் வடமத்திய மாகாணம் | 47 |
| 2 | வடமேல் மாகாணம் | 11 |
| 3 | தென் மாகாணம் | 28 |
| 4 | மத்திய மாகாணம் | 30 |
| 5 | கிழக்கு மாகாணம் | 17 |
| 6 | ஊவா மாகாணம் | 15 |
| 7 | சப்ரகமுவ மாகாணம் | 12 |
| 8 | மேல் மாகாணம் (நிர்வாக காரியாலயம் உட்பட) | 210 |
| | **மொத்தம்** | 370 |




## பவியணியின் பாலின வகைமீடு

| வகை | சம்பள குறியீடு | பாலினம் | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| சிரேஷ்ட முகாமையாளர் | HM 2.1 | 0 | 0 |
| சிரேஷ்ட முகாமையாளர் | HM 1.2 | 3 | 2 |
| முகாமையாளர் | MM 1.2 | 13 | 5 |
| கணிஷ்ட முகாமையாளர் | JM 1.1 | 24 | 4 |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பம்) | MA 2.1 | 4 | 3 |
| முகாமைத்துவ உதவியாளர் (தொழிநுட்பமற்ற) | MA 1.1 | 83 | 70 |
| முதன்மை நிலை (தேர்ச்சி பெற்ற) | PL 3 | 67 | 0 |
| முதன்மை நிலை (அரை தேர்ச்சி பெற்ற) | PL 2 | 4 | 0 |
| முதன்மை நிலை (தேர்ச்சியற்ற) | PL 1 | 88 | 0 |
| | | **286** | **84** |






**2021.03.31 இல் வயது அடிப்படையில்**

| வயது வகை | மொத்தம் |
|---|---|
| 20 - 30 | 35 |
| 31 -40 | 74 |
| 41 - 50 | 139 |
| 51 - 60 | 122 |







### ஊழியர் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

ஊழியர்களின் சுகாதாரம், கம்பனியின் தொடர்ச்சியான செயல்திறனுக்காக அத்தியாவசிய காரணியாவதுடன், ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை முதன்மையாகக் கொண்டு செயல்படுவது எமது வியாபார நடவடிக்கைகளை உயர்மட்டத்திற்கு கொண்டுவரும் செயல்முறையின் அடிப்படையாகும். இம்முக்கிய உயர் காரணிகளை அடைவதற்கும், பயனுள்ள முடிவுகளை அடைவதற்கும், ஊழியர்களின் இன்னல்களை குறைப்பதற்கும் மற்றும் கம்பனியின் கொள்கைகள் மற்றும் மூலோபாயங்கள் மூலம் ஊழியர் நம்பகத்தன்மையை அதிகரித்துள்ளோம். இம்முயற்சி வேலைத்தள பாதுகாப்புக்கான சர்வதேச தரநிலைகளுடன் இணங்குவதுடன், இதனூடாக ஊழியரின் சுகாதாரம், பாதுகாப்பு அல்லது சிறந்த பராமரிப்புக்கிடையில் நீக்கவேண்டிய தற்செயலான சம்பவமொன்றில் அவை

உடனடியாக விசாரணை செய்வதோடு அவ்வாறான சம்பவம் மீண்டும் நிகழும் வாய்ப்பை இல்லாதொழித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

### நலன்புரி மற்றும் மனிதவளம்

செயல்திறன் மேம்பாடு, சுயமுன்னேற்றம், தலைமைத்துவம் மற்றும் எமது பெறுமதி மிகுந்த வாடிக்கையாளர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கு பதிலளிப்பது மற்றும் நிறுவனத்தின் இந்த முக்கிய அம்சத்திற்கான எங்கள் முக்கிய அர்ப்பிப்பினை ஆதரிக்கும் உதவும் மற்றும் எளிதாக்கும் சூழலை உருவாக்குவதுடன் இதற்கு நிறுவனத்தின் முகாமைத்துவமானது மிகச்சிறந்த முன்னுரிமையை வழங்கி வருகிறது.

மேலும், எமது ஒட்டுமொத்த மனிதவள அபிவிருத்தி செயற்பாடுகளின் ஒரு பகுதியாக பல துறைகளிலும் உள்ளக மற்றும் வெளியக ஆகிய இரு தரப்பு தொழில்சார் சேவைகளை பயன்படுத்துவதுடன் தொழில்நுட்ப மற்றும் தலைமைத்துவ ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதற்கான தொனிப்பொருள்கள் மற்றும் உந்துதலுடன் அதேவேளை அனுபவமூடாக செயலூ க்கத்தை அதிகரித்தல், கற்றலை ஊக்குவித்தல், ஆலோசனை கொள்ளளவை மேம்படுத்தலும் ஆகும்.

மேலும், கம்பனி 2010 ஆம் ஆண்டு முதல் ஐஊவு பயிற்சி வேலைத்திட்டமொன்றை செயல்படுத்தியிருப்பதோடு, கம்பனி அனுசரணையின் கீழ் இப்பயிற்சி வேலைத்திட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஐஊனுடு சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

கம்பனியின் உற்பத்தி தொடர்பாக விரிவான புரிந்துணர்வானது நூற்றுக்கணக்கான ஊழியர்களுக்கு பெற்றுக்கொடுத்தல் இன்றியமையாததுடன், விநியோகப் பிரிவின் ஊழியர்களுக்காக பிரதான காரியாலயத்தில் மற்றும் பொலன்னறுவையிலுள்ள பிராந்திய பண்டகசாலைகளில் விசேட பயிற்சித் திட்டங்களினால் மேற்கொள்ளப்படுவதோடு, அங்கு அவர்களுக்கு இயற்கை உரம் தொடர்பான மிகச்சிறந்த பின்னணி அறிவைப் பெறப்படுகின்றது.

கற்றல் மிக முக்கியமானதுடன், புத்தகங்கள் அடிப்படை என்பதனால் நிறுவனம் ஊழியர்களுக்காக சிறந்த கற்றல் சூழலை வழங்குவதில் தூரநோககு பார்வையுடன்

உள்ளது. மேலும், ஊழியர்கள் தங்கள் அறிவை மேம்படுத்திக்கொள்ள அவர்களுக்காக நூலக வசதிகளை வழங்கப்பட்டுள்ளது

நவீன ஆய்வுகூடத்தில் உரப் பகுப்பாய்வுகளை தரப்படுத்துவதில் மிகவும் திறமையான மறறும் தொழிநுட்ப ரீதியாக சீராக காணப்படுவதற்கு, ஆய்வக ஊழியர்களுக்கு சிறந்த தொழிநுட்ப பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன.

### தக்க வைத்தல்

நிறுவனமானது இந்த நிதி ஆண்டில் குறைந்த ஊழியர் செலவு மற்றும் குறைந்த மட்ட ஊழியர் இழப்பினை பேணுவதில் சாதனை நிலைநாட்டியுள்ளது தொடர்பாக பெருமை கொள்வதுடன் ஊழிய அபிவிருத்தி, சமத்துவம், நட்புறவு மற்றும் கற்கை சூழலுக்கான உருவாக்கம் ஆகியவற்றின் மூலம் தொழில் திருப்தி தன்மையை ஏற்படுத்தியுள்ளதுடன் இங்கு வசதிகளும் நலன்களும் தொழில்சார் திறமையை அபிவிருத்தி செய்யும் முகமாக வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்காக வழங்கப்படுகின்றன.

# கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழு அறிக்கை

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில், பணிப்பாளர்கள் சபை பரிந்துரைத்த பணி விதிகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழு செயல்பட்டது.

### குழுவின் கட்டமைப்பு

கணக்காய்வு மற்றும் இடர் முகாமைத்துவ குழுவானது பணிப்பாளர்கள் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளது. மூன்று நிறைவேற்று தகைமையற்ற பணிப்பாளர்கள் மற்றும் திறைசேரியின் பிரதிநிதி ஒருவர் குழுவின் தலைவராக செயல்படுவதுடன் அவர் வெளி கணக்காய்வு கூட்டங்களில் அவதானிப்பாளராக கலந்து கொள்வார். 2020/21 ஆம் ஆண்டுக்கான இக்குழு பின்வரும் பணிப்பாளர்களை உள்ளடக்கி காணப்பட்டது.

- செல்வி. ஈ.ஜீ.எச்.எம் ரணசிங்க
  குழு தலைவர்
  (15-01-2020 இலிருந்து தொடரும்)

- திரு. எஸ்.எல்.ஜீ. பந்துசிரி
  குழு அங்கத்தவர்
  (12-02-2019 தொடக்கம் 15-01-2021)

- திரு. எல்.ஜீ. சமரவிக்ரம
  குழு அங்கத்தவர்
  (13-01-2020 இலிருந்து தொடரும்)

### குழு கூட்டங்கள் மற்றும் வருகை

மீளாய்வாண்டில் கணக்காய்வு குழுவானது முறையாக 02 தடவைகள் கூடியது. கூட்டங்களில் கலந்து கொண்டவர்களின் விபரங்கள் வருமாறு:

| திகதி | 2020.07.09 | 2020.12.10 |
|---|---|---|
| செல்வி. ஈ.ஜீ.எச்.எம் ரணசிங்க | ✓ | ✓ |
| திரு. எஸ்.எல்.ஜீ. பந்துசிரி | ✓ | ✓ |
| திரு. எல்.ஜீ. சமரவிக்ரம | ✓ | ✓ |

### 2.3. குழுவின் கடமைகள்

1. இலங்கை மற்றும் சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் மற்றும் உயர் கணக்கியல் சோதனைகளின் பிரகாரம் நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்கு நிதி அறிக்கைகளின் துல்லியம் மற்றும் நியாயத்தன்மையை பகுப்பாய்வு செய்தல்.
2. நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பின் மதிப்பு, செயல்திறன் மற்றும் செயல்திறனை உறுதி செய்தல், மதிப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்
3. நிறுவனத்தின் இடர் முகாமைத்துவ முறைமையின் வினைத்திறனை மதிப்பாய்வு செய்தல்
4. வெளியக கணக்காய்வாளர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்வதுடன் கணக்காய்வு முகாமைத்துவ கடிதத்தை மதிப்பாய்வு செய்தல்.

5. சங்கத்தின் நடவடிக்கைகள், விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணக்கத்தை உறுதிப்படுத்தல்

6. உள்ளக கணக்காய்வு அறிக்கைகள்: வெளியக கணக்காய்வு அறிக்கைகளை மதிப்பாய்வு செய்தல்.

7. அரச வணிக குழுவின் பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளை நிறைவேற்றுதல்.

### ஆண்டிற்குரிய செயற்பாடுகள்

குழுவானது நிதி அறிக்கையிடல் முறைமையை மீள் பார்வை செய்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு துல்லியமானதும் நம்பகத்தன்மையானதுமான தகவல்களை வழங்குவதை உறுதிப்படுததியதுடன் இலங்கை மற்றும் சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பகுதிசார்ந்த பரிவர்த்தனைகள் தொடர்பாக விசேட கவனத்தை செலுத்தி அவதானிப்புக்களை மேற்கொள்கின்றது.

### உள்ளக கணக்காய்வு

நிறுவனமானது மிகச்சிறந்த உள்ளக கணக்காய்வு பிரிவினை கொண்டுள்ளதுடன் அதன் ஊழியர்கள் கணக்காய்வு, நிதியியல் கணக்காய்வு, வரிவிதிப்பு மற்றும் வர்த்தக நிர்வாகம் போன்றவை உள்ளடங்கலாக பல்வேறு பகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அனுபவம் வாய்ந்த தொழிற்தகைமையாளர்களை கொண்டு விளங்குகிறது.

### உள்ளகக் கணக்காய்வு பிரிவின் பிரதான நோக்கங்கள்

1. கணக்கியல் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகளை மதிப்பாய்வு செய்தல்.

2. நிதி மற்றும் செயல்பாட்டுத் தகவலைச் பரிசீலித்தல்.

3. செலவு, செயல்திறன் மற்றும் செயல்பாடுகளின் செயல்திறனை மதிப்பாய்வு செய்தல்.

4. முகாமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகள்மற்றும்திட்டங்கள்சிறந்தமதிப்பீட்டுடன் கட்டுப்பாட்டில் உள்ளதை உறுதிப்படுத்துவதுடன் இந்த செயற்பாடுகளும் திட்டங்களும் திட்டமிட்டதற்கு இணங்க முன்னெடுக்கப்பட்டதையும் செயற்பாட்டு பெறுபேறுகள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு நோக்கி பயணிப்பதையும் உறுதிப்படுத்துகிறது.

5. சட்டங்கள், விதிகள் மற்றும் ஏனைய தேவைகள் முகாமைத்துவ கொள்கைகளுக்கு இணங்க இருப்பதை உறுதிப்படுத்தல்.

### விசேட புலனாய்வுகளை நடாத்துதல்

கணக்காய்வு குழுவானது அறிக்கையிடல் காலத்தில் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளையும் உள்ளக கணக்காய்வு திட்டம், பிராந்திய உர விற்பனையகங்களின் கணக்காய்வு திட்டங்கள், இடர்களை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்குமுறை இடர் மதிப்பீட்டு முறைமை மற்றும் கணக்காய்வு திட்டங்களை மையமாகக் கொண்டு மேற்பார்வை செய்கிறது. இந்த கணக்காய்வு குழுவானது மீளாய்வாண்டில் உள்ளக கணக்காய்வாளரின் அறிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வாளருடன் கலந்துரையாடுகிறது.

46 பிராந்திய உரக் களஞ்சியசாளைகள் மற்றும் 09 பிரதான பிரிவுகளின் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் முழுமையாக மீளாய்வு செய்யப்பட்டு ஒட்டுமொத்த உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் உள்ளக கணக்காய்வு பொறிமுறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்காணிக்கப்பட்டது.

### வெளியக கணக்காய்வு

கணக்காய்வாளர் நாயக திணைக்களமானது நிறுவனத்தின் வெளியகக் கணக்காய்வாளராக செயற்படுகிறது.

### குழுவுக்கு வழங்கப்படும் ஆதரவு

குழுவின் தலைவர்கள் மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்களினால் குழுவிற்கு எதிர்பார்த்த ஆதரவை வழங்கப்பட்டதுடன், அறிக்கையிடல் காலத்தில் குழு திறம்பட செயல்பட உதவியது. நிறுவனத்தின் முதன்மை உள்ளக கணக்காய்வாளர் சம்பந்தப்பட்ட காலாண்டுகளின் முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்க விவசாய அமைச்சினால் நடைபெறும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களில் கலந்துகொள்ளுதல்.

### குழு மதிப்பீடு

குழுவின் பணி செயற்பாடுகள் பணிப்பாளர்கள் சபையினால் மதிப்பீடு செய்யப்படுவதுடன் செயல்முறையானது பயனளித்துள்ளது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

**செல்வி ஈ.ஜீ.எச்.எம். ரணசிங்க**
தலைவி
கணக்காய்வு குழு
22/07/2021

# பெறுகைகள்
# பிரிவின் அறிக்கை

தேசிய பெறுகை வழிகாட்டி மற்றும் கையேடுகளுக்கு இணங்க நிறுவனத்திற்கு தேவையான பொருட்கள், சேவைகள், பணிகள் மற்றும் ஆலோசனை சேவைகளை கொள்வனவு செய்வது எமது பிரிவின் முதன்மை கடமையாகும். விவசாய சமூகத்தின் தேவைகளை உரிய நேரத்தில் பூர்த்தி செய்வதற்கு நாட்டிற்கு தேவையான உரங்களினை கொள்வனவு செய்வது எமது முக்கிய மையமாகும். இந்த பணியினை நிறைவேற்றுவதற்காக எமது பெறுகை குழு தகமையுடைய மற்றும் அனுபவம் கொண்ட 15 அதிகாரிகளை கொண்டுள்ளது.

மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இரசாயன உர வகைகளின் அளவுகள் பின்வருமாறு:

**01/04/2020 தொடக்கம் 31/03/2021 வரை உர இறக்குமதி**

| வகை | அளவு (மெ.டொன்) |
|---|---|
| யூரியா | 152,670.067 |
| த்ரிபல் சுபர் பொஸ்பேட் | 27,541.400 |
| முரியேட் ஒப் பொடெஷ் | 52,971.000 |
| எஸ்ஏ | 2,400.000 |
| மொத்தம் | **235,582.47** |

CFC ஆனது பொது திறைச்சேரிக்கு சொந்தமான போதிலும், அது நிதி ரீதியாக நிலையான அரச நிறுவனமாக (SOE) இருப்பதனால் ஒருங்கிணைந்த நிதியிலிருந்து எந்தவொரு நிதி உதவியினையும் பெறாது. மேலும், கம்பனியின் நுனுக்கமான பெறுகை முறையானது நாட்டின் நெல்லுக்கான உரத்தின் மொத்தத் தேவையில் 60% இனை பூர்த்தி செய்துள்ளது. எனவே, லக்பொஹொர கம்பனியின் இலாபமானது உரங்களின் உற்பத்தி மற்றும் விற்பனையின் ஊடாக பரந்த, பன்முகப்படுத்தப்பட்ட சந்தையின் ஊடாக அதிகரிக்கப்படுவதுடன், உற்பத்தி வருமானம் மற்றும் இலாபத்தை அதிகரிப்பதற்கும் பங்களிக்கிறது. மேலும், இலங்கையில் விவசாயம் மற்றும் கமநல சேவைகள் பிரிவின் ஊடாக இலாபத்தை ஸ்திரப்படுத்துவதில் கொள்முதல் பிரிவு முக்கிய பங்கு வகிக்கிறது.

டொலமைட், உயர்தர எப்பாவால ரொக் பொஸ்பேட் மற்றும் எப்பாவால ரொக் பொஸ்பேட் போன்ற உள்நாட்டு பெகை தவிர, நிறுவனமானது ஐக்கிய அரபு இராஜ்ஜியம், சீனா, இந்தோனேசியா, பெலரூஸ் குடியரசு, எகிப்து, கட்டார் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து உரங்களை இறக்குமதி செய்கிறது.

யூரியா, மியுரேட் ஒப் பொட்டாஸ் (MOP) மற்றும் ட்ரிபல் சுப்பர் பொஸ்பேட் (TSP) போன்ற பிரதான இரசாயன உர இறக்குமதியானது தேசிய பெறுகை வழிக்காட்டி (NPG) மற்றும் முதன்மைத் தகுதி திட்டத்தின் கீழ் ஆலோசனை கையேட்டிற்கு இணங்கியுள்ளது. இரசாயன உர பெறுகையானது, அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டதும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட தகைகையுள்ள பெறுகை குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், கிஸ்ரிட், சிங்க் சல்பேட், டி-எனோனியம் பொஸ்பேட், பொரேட், ஷல்பேட் ஒப் எமோனியா மற்றும் கொமர்ஷல் எப்சம் போன்ற சிறிய மூலப்பொருட்களை இறக்குமதி செய்யும் செயல்முறை சர்வதேச போட்டியுடனான விலைமனுக்கோரல் நடைமுறையின் (ICBP) கீழ் பின்பற்றப்படுவதுடன் அது விவசாய அமைச்சின் செயலாளர் அனுமதிக்கப்பட்ட திணைக்களத்தின் பெறுகை குழுவின் பரிந்துரைக்கு அமைவாக நிகழுகின்றதுடன் டொலமயிட், உயர் தரத்தினாலான எப்பாவல ரொக் பொஸ்பேட் (HERP) மற்றும் எப்பாவல ரொக் பொஸ்பேட் ஆன உள்நாட்டு கொள்வனவு தேசிய பெறுகை வழிக்காட்டிக்கு இணங்க பெறுகை குழு மற்றும் அமைச்சு அவற்றிற்கு ஏற்ற அனுமதியுடனாகும்.

### பெறுகை குழு எதிர்கொள்ளும் சவால்கள்

- தேவையான பொருட்கள், சேவைகள், பணிகள் மற்றும் மதியுரைகளை அவற்றின் பணத்திற்கான மதிப்பை மேம்படுத்துவதன் மூலம் பெறுவது பெறுகை பிரிவின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். எவ்வாறாயினும், தகவல் தொழிநுட்பம் மற்றும் பெறுகை தொடர்பான அறிவியலில் பாரிய முன்னேற்றங்களை கருத்திற் கொண்டு புதுப்பிக்கப்படாத 2006 இன் பெறுகை வழிக்காட்டி கோவையின் வழிக்காட்டல்களை கடைப்பிடிக்க வேண்டியது இப் பிரிவினால் எதிர்கொள்ளப்படுகின்ற முக்கிய சவால்களில் ஒன்றாகும்.

- பெறுகை நடைமுறை கணக்கய்விற்கு உட்பட்டிருக்கின்ற போதிலும் செயலாற்றல் கணக்காய்வு எதுவும் நிகழ்ந்திராததுடன் அதனால் பணத்தின் மதிப்பிற்கு கொள்வனவு செய்யும் முதன்மை கட்டளை அல்லது பிரதான விதியினை அடைவது எப்போதும் சாத்தியமில்லை.

- கம்பனியின் பெரும்பாலான நிதியிடல்கள் (அத்துடன் அரசாங்கத்தின் நிதிகள்) கொள்முதல் செய்யப்படுகின்றன. எவ்வாறாயினும், தற்போதைய அரச பொறிமுறையானது பொருள் அல்லது பெறுகை அறிவியலுக்கு முன்னுரிமை அளிக்காததுடன் நிறுவனத்திலும் பொதுவாக முழு அரசாங்கத்திலும் தரமான பெறுகை பதவியணியின் பற்றாக்குறை காணப்படுகின்றது.

### மூலோபாய தீர்வுகள்

- ஒரு வணிக நிறுவனமாக, கம்பனி கட்டாயமாக மற்ற வணிக நிறுவனங்களுடன் போட்டியிட வேண்டியுள்ளது. எனவே, உயர் அதிகாரிகளின் அங்கீகாரத்துடனும் தேசிய பெறுகை வழிக்காட்டியின் பிரதான நுழைவுகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வண்ணம், செயன்முறையின் வினைத்திறன் மற்றும் தாக்கத்தினை அதிகரிப்பதற்கும் செலவினங்கள் மற்றும் ஊழலினை குறைப்பதற்கும் மின்னியல் பெறுகை முறையின் அடிப்படையில் புதிய தொழிநுட்பங்களை பயன்படுத்தல் அவசியமானதாகும்.

- செயன்முறை கணக்காய்வு தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருவதுடன், வினைத்திறன் மற்றும் பெறுபேறு தொடர்பான தெளிவான பின்னூட்டல் வழங்கும் வலுவான, சான்றுகளின் அடிப்படையிலான செயலாற்றல் கணக்காய்வொன்று அறிமுகப்படுத்தல் மற்றும் அதனூடாக கம்பனியின் நிதிவளங்களை பயன்படுத்தும் அளவினை விரிவாக்கல்.

- பிரிவின் முக்கிய பதவியணி அங்கத்தவர்களுக்கு மட்டுமின்றி மற்ற பிரிவுகளிலிருப்பவர்களுக்கும் விசேடமாக தொழிநுட்ப மீளாய்வு குழு மற்றும் திணைக்க பெறுகை குழு உறுப்பினர்களுக்கு வலுவான பயிற்சியொன்று பெற்றுக் கொடுத்தல் மற்றும் அதனூடாக பெறுகை முயற்சிகளின் வினைத்திறன் மற்றும் விளைத்திறன் இரண்டினையும் மேம்படுத்தல்.

- பெறுகை பிரிவின் 15 உறுப்பினர்கள், மேற்படி சவால்கள் மற்றும் தீர்வுகளை இனங்கண்டு அவற்றை முன்னிலைப்படுத்தியதன் ஊடாக, சவால்களை வெல்லவும் வலுவான மற்றும் போட்டி தன்மையுடைய வணிக நிறுவனமாக மாற்றுவதற்கு பரிந்துரைகளை பயன்படுத்துவதற்கு வரும் ஆண்டுகளில் நடவடிக்கை எடுப்பார்கள்.

**பெறுகை பொறிமுறை:**


பெறுகை
பணிப்பாய்வு
செயல்முறை
தேவைகளை
கண்டறிதல்
விவரக்
குறிப்புக்களை எழுதுதல்
(TOR/SOW)
பெறுகை
முறையொன்றைவ
தெரிவு செய்தல்
கோரிக்கை
ஆவணங்களை
தயாரித்தல்
தெளிவான மற்றும்
அண்மைய சலுகையை
தேடுதல்
சலுகைகளை
மதிப்பிடல்
பெறுகை
ஒப்புதலுக்கானழ
ஆலோசனை
குழு
ஒப்பந்தம்
வழங்கல்
ஒப்பந்த
பேச்சுவார்த்தை
ஒப்பந்த
முகாமைத்துவம்
பெறுகை
மதிப்பீடு



# தகவல் மற்றும்
# தொழிநுட்ப பிரிவின் அறிக்கை

இலங்கை உரக் கம்பனியின் தகவல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவானது, நிறுவனத்தின் வணிக மற்றும் சேவைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பாதுகாப்பான, நம்பகமான மற்றும் இலகுவாக அணுகக்கூடிய தொழிநுட்ப உட்கட்டமைப்பை வழங்குகிறது. மேலும், தகவல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவானது மென்பொருள், வன்பொருள் மற்றும் வலையமைப்பு செயல்பாடுகளின் பயனுள்ள, திறமையான வடிவமைப்பு, செயல்பாடு மற்றும் பராமரிப்புக்கு பொறுப்பாகும். அதி நவீன தரவு பாதுகாப்புடன் சரியான நேரத்தில் முகாமைத்துவ தகவலை வழங்கவும், நிறுவனத்தில் முக்கிய தீர்மானங்களை எடுக்கவும் உதவுகிறது.

மாவட்ட உரக் களஞ்சியம் மற்றும் தலைமை காரியாலயத்திற்கும் இடையே உள்ள வலுவான தொடர்பு காரணமாக நிறுவனத்தின் விரிவான வலையமைப்பு முக்கியமானதாக இருப்பதால், குறைபாடற்ற மற்றும் பதிலளிக்கக்கூடிய அமைப்பை உருவாக்க நிறுவன வள திட்டமிடல் (ERP) அமைப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை உரக் கம்பனியின் ERP தளத்தின் முக்கிய நோக்கமானது, பொருட்கள் கொள்வனவு முதல் வாடிக்கையாளர்களுக்கான இறுதி விற்பனை விநியோகச் சங்கிலிச் செயற்பாடுகள் வரை, கம்பனியின் பல்வேறு செயற்பாடுகளை இணைப்பதற்கு அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதாகும். கம்பனி தரவு தொடர்பாக இந்த ஒருங்கிணைந்த இலக்கின் ஊடாக செயற்பாட்டு மற்றும் நிறுவன எல்லைகள் ஊடாக தகவல் பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்த இயலுகின்றது.

மீளாய்வாண்டினுள் தகவல் தொழிநுட்ப திணைக்களத்தினால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன:

- தற்போது தொடர்புப்படுத்தியுள்ள 16 மாவட்ட உர விற்பனை நிலையங்களுக்கு (DFS) மேலதிகமாக, 3 DFS கள் (அம்பாறை, பதுளை மற்றும் கொங்கல) பிரதான அலுவலகத்துடன் (ஹூனுபிடிய) இணைக்கப்பட்டுள்ளதுடன், ERP முறையை பயன்படுத்தி குறித்த உள்ளவாரான தரவுகள் வெற்றிகரமாக பெறப்படுகின்றது மற்றும் 2 DFS கள் (தொடங்கொட மற்றும் பலவத்த) கணனிமயப்படுத்தப்பட்டுள்ளது.

- மதவச்சி, அக்குரஸ்ஸ, திருகோணமலை, பெலவத்த, தொடங்கொட, நாதண்டிய, கெண்டவில், மொணராகலை, பிபில, முருங்கன், ஓலுமடு, பொத்துவில், கந்தலை, நாகொல்ல, வெலிகந்த, பட்ட-அத்த, தெஹிகஹலந்த, மதவியங்கொட, எம்பிலிபிடிய, சூரியவெவ மற்றும் நொச்சியாகம ஆன மற்றைய 21 டீஎப்சீ கள் பெறுகை நடைமுறை ஊடாக வலையமைப்பிற்காக தேவையான கருவிகளை பெற்றுக்கொள்ள விண்ணப்பித்துள்ளன.

- DFS களுக்கு உரங்களை வழங்கும் போது மற்றும் ஹூனுபிடிய நிலையத்தில் குறித்த உரங்களை ஏற்றும் செயல்முறையை நிறைவு செய்யும் போது, மாவட்ட சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரிகள், பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் களஞ்சிய காப்பாளர்களுக்கு தன்னியக்க ளுஆளு ஊடாக தெரியப்படுத்துவதற்கு ERP அமைப்பு அபிவிருத்தி செய்யப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது.

- மேலும் DFS இனால் இருப்புக்கள் வழங்கும் போது விநியோக முகாமையாளர் மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளருக்கு மின்னஞ்சல்களை அனுப்புவதற்கு ERP அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

- பிரதான சர்வர் இயந்திரத்தின் தரவுகள் பாதுகாப்பாக காப்புப் பிரதி எடுப்பதற்கு புதிய சர்வர் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது மற்றும் தற்போது புதிய சர்வர் இயந்திரம் தகவல் தொழிநுட்ப பிரிவில் வெளி இடமொன்றில் வைக்கப்பட்டுள்ளது.

வெளிபுர சேவையக இயந்திரத்தில் தரவை காப்புப் பிரதி எடுப்பது அனைத்து செயல்பாட்டு நடவடிக்கைகளையும் சீராக செயல்பட உதவுவதுடன் தரவு பாதுகாப்பை அதிகரிக்கின்றது.

# சட்ட பிரிவின்
# அறிக்கை

நிறுவனத்தின் பெருநிறுவன விவகாரங்களில் மிதான உயர்ந்த சட்டக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதனை உறுதி செய்து, நிறுவனத்திற்கு எதிராக வெளி தரப்பினரால் தொடரப்பட்ட வழக்குகளுக்கு வெற்றிகரமாகப் கம்பனியினை பாதுகாத்துள்ளது. இந்த முயற்சிகளில், சட்டப் பிரச்சினைகளில் அவர்களின் அணுகுமுறைகள் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்கியுள்ளமையை உறுதிப்படுத்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியை இப்பிரிவு தொடர்ந்து நாடுகிறது.

**மேல்முறையீட்டு நீதிமன்றம் – CA/Writ/50/2021**

முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஜயிட் மொஹமட் ஷஹீட் அவரின் இடைநிறுத்தப்பட்ட ஓய்வூதியத்தினை விடுவிக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட ரிட் விண்ணப்பத்தில் இலங்கை உரக் கம்பனி ரிட் விண்ணப்பத்தில் ஒரு தரப்படாக பெயரிடப்பட்டிருந்தது. இலங்கை உரக் கம்பனி அவரது ஓய்வூதியத்தினை விடுவிப்பதில் தடையில்லை என கடிதம் வழங்கியதுடன் அதன் பிரகாரம் வழக்கு முடிக்கப்பட்டது.

**வழக்கு இலக்கங்கள். CHC/278/20/ARB, CHC/279/ARB, CHC/43/20/MR, CHC/45/20/MR**

கோல்டன் பார்லி இன்டர்நெஷனல் பிரைவட் லிமிடட் - 323,190.00 ஐ.அ.டொலர்கள் மற்றும் 116,497.50 ஐ.அ.டொலர்களை மற்றும் சட்டக் கட்டணங்களை வசூலிக்க மேற்படி வழக்குகளை தாக்கல் செய்தது. இருதரப்பினர்கள் இடையே சுமூக தீர்வு ஏற்பட்ட பிறகு, கோல்டன் பார்லி இன்டர்நெஷனல் பிரைவட் லிமிடட் மேற்கண்ட வழக்குகளை வாபஸ் செய்தது.

எம்/எஸ் எங்ரி கொமொடிடீஸ், பினான்ஸ் எப்ஈஸட்ஈ மற்றும் இலங்கை உரக் கம்பனி இடையேயான நடுவர் மன்றம்

எம்/எஸ் எங்ரி கொமொடிடீஸ் மற்றும் பினான்ஸ் எப்ஈஸட்ஈ இனால் 209,385 ஐ.அ.டொலர்கள் மற்றும் சட்டக் கட்டணங்களை கோரும் வகையில் நடுவர் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

தரப்பினர்களுக்கிடையில் ஒரு இணக்கமான தீர்வு எட்டப்பட்ட பின்னர் எம்/எஸ் எங்ரி கொமொடிடீஸ் மற்றும் பினான்ஸ் எப்ஈஸட்ஈ இனால் நடுவர் வழக்கு வாபஸ் செய்யப்பட்டது.

**115/2016 ஆம் இலக்க உச்ச நீதிமன்ற மேல்முறையீடு**

மேற்படி வழக்கு இலங்கை உரக் கம்பனி மற்றும் ஓய்வுபெற்ற ஊழியர் திருமதி நந்தலதா சோமரத்ன ஆகியோருக்கு இடையே காணப்பட்டது. ஓய்வுப் பெற்ற ஊழியரின் நோய் மற்றும் 69 வயதினைகருத்திற் கொண்டு ரூபா 700,000/- செலுத்தி வழக்கு தீர்க்கப்பட்டது.

டி.எஸ் கன்ஸ்டிரக்ஷன் மற்றும் அர்த் மூவர்ஸ் மற்றும் இலங்கை உரக் கம்பனி இடையேயானநடுவர் மன்றம்

டி.எஸ் கன்ஸ்டிரக்ஷன் மற்றும் அர்த் மூவர்ஸ் இன் உரிமைக்கோரல் ரூபா 16,103,108.19 ஆகவும் இலங்கை உரக் கம்பனியின் உரிமைக்கோரல் ரூபா 8,859,708.00 ஆகவும் காணப்பட்டது. இரு கம்பனிகளினதும் உரிமைக்கோரல்கள் நிராகரிக்கப்பட்ட காரணத்தினால் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன.

சட்ட பிரிவானது நான்கு (04) தவறான கடனாளிகளுக்கு எதிராக கம்பனியின் நிலுவை தொகையை மீளப் பெறுவதற்கு கீழ் கண்டவாறு சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

**330/20/எம் ஆம் இலக்க கம்பஹா மாவட்ட நீதிமன்ற வழக்கு**

ஹெடெ அக்ரோ பிசினஸ் பிரைவட் லிமிடட் கம்பனியிடமிருந்து ரூபா 10,580,000 ஆன நட்டம் மற்றும் சட்டக் கட்டணத்தை வசூலிக்க இங்கை உரக் கம்பனி மேற்கண்ட வழக்கினை தாக்கல் செய்தது.

**255/2020/எம் ஆம் இலக்க கம்பஹா மாவட்ட நீதிமன்ற வழக்கு**

ரூபா 15,629,217.64 ஆனநட்டம் மற்றும் சட்டக் கட்டணத்தை திரு. ஏ.டீ.சீ. அல்விஸிடமிருந்து மீட்க இலங்கை உரக்கம்பனி மேற்கண்ட வழக்கினை தாக்கல் செய்தது.

**216/2020/எம் ஆம் இலக்க கம்பஹா மாவட்ட நீதிமன்ற வழக்கு**

திரு. சுபூர்கான் அம்ஜித்கானிடமிருந்து ரூபா 11,974,234/- ஆன நட்டம் மற்றும் சட்டக் கட்டணத்தை மீட்க இலங்கை உரக்கம்பனி மேற்கண்ட வழக்கினை தாக்கல் செய்தது.

**51/2020/எம் ஆம் இலக்க கம்பஹா மாவட்ட நீதிமன்ற வழக்கு**

ரூபா 600,200/- ஆன நட்டம் மற்றும் சட்டக் கட்டணத்தை திரு. ஆர். மஹிந்தபாலவிடமிருந்து மீட்க இலங்கை உரக்கம்பனி மேற்கண்ட வழக்கினை தாக்கல் செய்தது.

பிரிவானது, மீளாய்வாண்டில் கம்பனியின் பிற பிரிவுகளால் கோரப்பட்ட சட்ட ஆவணங்களை ஒழுங்கான முறையில் உருவாக்கியது. இப்பிரிவானது ஏனைய பிரிவு ஊழியர்களின் பிரச்சினைகளை கலந்துரையாடல் ஊடாக தீர்ப்பதற்கு ஆதரவை வழங்கியதோடு அதனூடாக வேலைவழங்குனர் - பணியாளி இடையே உகந்த நல்லிணக்கத்தினை உறுதி செய்தது.

மேற்குறிப்பிடப்பட்ட துறைகளில் சட்ட பிரிவின் பணிகள், மீளாய்வாண்டில் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு உதவியது.



# தொழிநுட்ப பிரிவின்
## அறிக்கை

லக்பொஹொர கம்பனியின் தொழிநுட்பப் பிரிவு அனைத்து துறைகளிலும் நிரந்தர ஊழியர்களுக்கு அவர்களின் கூட்டு முயற்சியில் தொழில்நுட்ப சேவைகளை வழங்குகிறது. நிறுவனத்தில் உள்ள ஒவ்வொரு ஊழியர்களுக்கும் நட்பு மற்றும் வசதியான பணிச்சூழல் இருப்பதை உறுதி செய்வதற்காக நிறுவனம் கொள்வனவு நிலையத்திலிருந்து விநியோக நிலையம் வரை தனது சேவைகளை வழங்குகிறது.

ஏறக்குறைய இருபது நபர்களைக் கொண்ட இந்தப் பிரிவு, நிரந்தரப் பணியாளர்கள், பதிவுசெய்யப்பட்ட போக்குவரத்து ஒப்பந்ததாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள், பதிவுசெய்யப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் CFC இற்கு சரக்குகள் மற்றும் சேவைகளை வழங்குபவர்களுக்கு உயர்தர பாரபட்சமற்ற தொழில்நுட்ப சேவைகளை வழங்கி, அதன் சொந்த தரமான சேவைகளை பரந்த அளவில் உருவாக்கியுள்ளது. நிறுவனத்தின் வெற்றிக்கு எப்போதும் பங்களிக்கும் இப்பிரிவு, நிறுவனத்தின் அனைத்து பங்குதாரர்கள், மற்றும் பணியாளர்களுக்கு நட்புரீதியான பணிச்சூழலை உருவாக்குவதற்கான களத்தை அமைக்கிறதற்கு நடவடிக்கை எடுக்கின்றது.

கடைகள் மற்றும் அலுவலகங்கள் சட்டம் ஊடாக நிர்ணயித்த நேரத்தை விட குறைவாக வேலை செய்ய மற்ற துறைகளுக்கு சில சலுகைகள் வழங்கப்பட்டாலும், தொழிநுட்ப பிரிவு ஊழியர்கள் அந்த சலுகையை பெறுப்பத்தாது இலங்கையின் தொழிலாளர் விதிமுறைகளுக்கு முழுமையாக இணங்கி முழு நாள் பணியாற்றியமையை நாம் பெருமையுடன் கூறுகிறோம். இப்பிரிவின் ஊழியர்களின் இந்த எல்லையற்ற, தன்னலமற்ற அர்ப்பணிப்பின் விளைவாக, 2011 முதல் இன்றுவரை எந்தவொரு இடையூறும் இன்றி அதன் ஒவ்வொரு தரமான இலக்குகளையும் அடைய முடிந்தது.

**பிரிவினால் வழங்கப்பட்ட சேவைகள் வருமாறு:**

1. இறக்குமதி செய்யப்பட்ட உரத்தை மத்திய களஞ்சியசாலைகளுக்கு அனுப்புவதற்கு முன்னரும் விநியோகப் பிரிவினால் நாடளாவிய ரீதியில் கொண்டு செல்வதற்கு முன்னரும் எடைப் பாலங்களைப் பயன்படுத்தி எடைப்போடுதல்.

2. உரம் திறம்பட சேமிப்பதற்கும் மீட்டெடுப்பதற்கும் பயன்படுத்தப்படும் அனைத்து ஸ்டெக்கர் இயந்திரங்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு.

3. பை தைக்கும் இயந்திரங்கள், தராசுகள், கை வண்டிகள், சீலர்கள் போன்ற விநியோகப் பிரிவினால் பயன்படுத்தப்படும் அனைத்து உபகரணங்களையும் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.

4. அனைத்து கட்டப்பட்ட பகுதிகள், கட்டுமான பகுதிகள் மற்றும் நிலத்தின் பராமரிப்பு மற்றும் பராமரிப்பு.

5. நீர் வழங்கல், மின்சாரம் மற்றும் உள்ளக தொலைபேசி அமைப்பு ஆகியவற்றின் உகந்த செயல்பாட்டினை பராமரித்தல்

கொவிட்-19 தொற்றுநோய்களின் போது, அலுவலக வளாகங்கள் மற்றும் உர விற்பனை நிலையங்களில் உள்ள அனைத்து ஊழியர்களும் தடையின்றி பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பாக பணியாற்றுவதை உறுதிசெய்ய தொழில்நுட்பக் குழு தங்களால் முடிந்த அனைத்தையும் செய்தது. கொரோனா நேர்மறை நோயாளிகள் தங்கள் பணியிடத்தில் அறிக்கை செய்வதில் குழுவின் விழிப்புணர்வு பாராட்டத்தக்கது.



# ஆய்வுக்கூட சேவைகள்
## பிரிவின் அறிக்கை

லக்பொஹொர ஆய்வுகூடமானது ISO/IEC 17025:2017 இனால் சான்றளிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை உரச் சபையினால் சான்றளிக்கப்பட்ட உரம் மற்றும் பொதியிடல் பொருட்களைப் பரிசோதிக்கும் வசதிகளைக் கொண்டுள்ளது.

ஆய்வுகூடம் வெளியிடப்பட்ட நிலையான நடைமுறைகள், வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் பொருந்தக்கூடிய சட்ட மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு ஏற்ப சோதனை சேவைகளை நடத்துகிறது.

உர பரிசோதனை ஆய்வுகூடத்தின் முகாமைத்துவம் மற்றும் பணியாளர்கள் வாடிக்கையாளர்களுக்கு சோதனை மற்றும் பகுப்பாய்வுக்காக சிறந்த சேவைகளை வழங்குகிறார்கள், அதே நேரத்தில் அவர்களின் தயாரிப்புகள் இலாபகரமானவை மற்றும் உயர் தரத்துடன் தொடர்புடைய சேவை வசதிகள், தயாரிப்பு தகவல்களை சரியான நேரத்தில் வழங்குவதன் மூலம் உறுதி செய்கின்றன.

ஆய்வுகூடத்தின் நோக்கம் ஒவ்வொரு பணியாளருக்கும் பொருத்தமான கருவிகள்: உபகரணங்கள் மற்றும் முறையான பயிற்சி வழங்கப்படும் சூழலை உருவாக்குவதாகும். அனைத்து ஆய்வுகூட ஊழியர்களும் தங்கள் கடமைகள் தொடர்பான நடைமுறைகள் மற்றும் நடைமுறைகளில் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் ISO தரநிலைகளை கடைபிடிக்கின்றனர்.

லக்போஹொர நிறுவனத்தின் ஆய்வுகூடம் பாரபட்சமின்றி ஆய்வுகூட நடவடிக்கைகள் மேற்கொள்வதுடன் அதன் பாரபட்சமற்ற தன்மையைப் பாதுகாக்க நிர்வகிக்கப்படுகிறது. ஆய்வுகூட முகாமைத்துவம் அதன் ஆய்வுகூட நடவடிக்கைகளின் பாரபட்சமற்ற தன்மைக்கு உறுதிபூண்டுள்ளதுடன் வணிக, நிதி அல்லது ஏனைய அழுத்தங்கள் அவற்றின் சோதனைகளின் நேர்மைக்கு இடையூறு விளைவிக்காது என்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பாகும்.

## உர மாதிதிகளை பரிசோதித்தல்

பொழிப்பறிக்கை ஏப்ரல் – மார்ச் (2020/2021)

| பரிசோதிக்கப்பட்ட உர மாதிரிகளின் பொழிப்பறிக்கை ஏப்ரல் – மார்ச் (2020/2021) | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பரிசோதனைகளின் எண்ணிக்கை | | | | | | | | | | | | | |
| அளவீடு | ஏப்ரல் | மே | யூன் | யூலை | ஆகஸ்ட் | செப்டெம்பர் | ஒக்டோபர் | நவம்பர் | திசெம்பர் | சனவரி | பெப்ரவரி | மார்ச் | மொத்தம் | மொத்த கிரயம் |
| மொத்த என் | 4 | 1 | 6 | 11 | 4 | 6 | 14 | 15 | 1 | 0 | 4 | 11 | 77 | 161,700.00 |
| அமோனிகல் என் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 2 | 4,200.00 |
| பீ | 2 | 5 | 4 | 8 | 3 | 6 | 5 | 3 | 2 | 0 | 3 | 12 | 53 | 116,600.00 |
| கே | 3 | 0 | 5 | 8 | 2 | 4 | 8 | 8 | 0 | 0 | 3 | 12 | 53 | 116,600.00 |
| என்ஏ | 1 | 0 | 3 | 0 | 0 | 2 | 4 | 2 | 0 | 0 | 0 | 1 | 13 | 28,600.00 |
| சீஏ | 2 | 0 | 2 | 4 | 0 | 1 | 0 | 1 | 0 | 0 | 3 | 1 | 14 | 30,800.00 |
| எம்ஜீ | 3 | 0 | 3 | 4 | 0 | 4 | 6 | 5 | 2 | 1 | 3 | 2 | 33 | 72,600.00 |
| மொய்சர் | 3 | 6 | 7 | 3 | 3 | 11 | 21 | 15 | 3 | 2 | 4 | 2 | 80 | 60,000.00 |
| பார்டிகல் | 3 | 6 | 7 | 3 | 3 | 11 | 17 | 13 | 0 | 1 | 2 | 1 | 67 | 40,200.00 |
| மெடல்ஸ் | 31 | 30 | 51 | 39 | 16 | 88 | 84 | 10 | 0 | 0 | 0 | 3 | 352 | 1,056,000.00 |
| நீர்.எஸ்.பீ204 | 0 | 5 | 2 | 0 | 3 | 4 | 1 | 1 | 0 | 0 | 0 | 1 | 17 | 37,400.00 |
| சிட்ரிக் அஸிட் பீ205 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | - |
| இலவச அசிடிட்டி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 | 1,100.00 |
| பையூரெட் | 2 | 1 | 4 | 3 | 0 | 4 | 8 | 10 | 0 | 0 | 1 | 0 | 33 | 99,000.00 |
| இலவச பாஸ்போரிக் அசிடிட்டி | 0 | 5 | 2 | 0 | 2 | 4 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 15 | 31,500.00 |
| மணல் அடக்ம் | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 3 | 0 | 4 | 9,200.00 |
| பீஎச் | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 800.00 |
| ஓசீ | 2 | 0 | 2 | 3 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 3 | 0 | 11 | 35,200.00 |
| எஸ் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 1 | 0 | 0 | 3 | 4,500.00 |
| கரையாதன்மை | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 2 | 1 | 0 | 0 | 4 | 4,000.00 |
| இசெட்என்(டைட்ரெமெட்ரிக்) | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | - |
| சீஎல் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 2 | 4,400.00 |
| நைட்ரேட் நைட்ரஜன் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 5,500.00 |
| மொத்தம் | **56** | **59** | **98** | **86** | **36** | **148** | **169** | **88** | **12** | **9** | **29** | **46** | | **1,919,900.00** |

**ஏப்ரல் – மார்ச் வரை பொழிப்பறிக்கை மாதம் அடிப்படையில்**



## அளவீடு அடிப்படையில் பொழிப்பறிக்கை




| கப்பல் சரக்கு/உள்ளே/வெளியே மொத்த மாதிரிகள் | | |
|---|---|---|
| அளவீடுகள் | பரிசோதனை எண். | பெறுமதி (ரூபா.) |
| மொத்த என் | 77 | 161,700.00 |
| அமோனிகல் என் | 2 | 4,200.00 |
| மொத்த பாஸ்பரஸ் | 53 | 116,600.00 |
| பொடேஸியம் | 53 | 116,600.00 |
| சோடியம் | 13 | 28,600.00 |
| சீஏ | 14 | 30,800.00 |
| எம்ஜீ | 33 | 72,600.00 |
| மொய்சர் | 80 | 60,000.00 |
| பார்டிகல் | 67 | 40,200.00 |
| எச்எம் | 352 | 1,056,000.00 |
| நீர்.எஸ்.பீ | 17 | 37,400.00 |
| சிட்ரிக் பீ | 0 | 0.00 |
| இலவச அசிடிட்டி | 1 | 1,100.00 |
| பையூரெட் | 33 | 99,000.00 |
| இலவச பாஸ்போரிக் அசிடிட்டி | 15 | 31,500.00 |
| மணல் அடக்கம் | 4 | 9,200.00 |
| பீஎச் | 1 | 800.00 |
| கரிமப் பொருள் | 11 | 35,200.00 |
| எஸ் | 3 | 4,500.00 |
| நீர் கரைதன்மை<br>நீர் கரையாதன்மை | 4 | 4,000.00 |
| இசெட்என்(டைட்ரெமெட்ரிக்) | 0 | 0.00 |
| சீஎல் | 2 | 4,400.00 |
| நைட்ரேட் நைட்ரஜன் | 1 | 5,500.00 |
| **மொத்தம்** | **836** | **1,919,900.00** |

| வெளியே (பணம் செலுத்தப்பட்ட) | | |
|---|---|---|
| அளீடுகள் | பரிசோதனை எண். | வருமானம் (ரூபா.) |
| மொத்த என் | 34 | 71,400.00 |
| அமோனிகல் என் | 0 | 0.00 |
| மொத்த பாஸ்பரஸ் | 16 | 35,200.00 |
| பொடேஸியம் | 23 | 50,600.00 |
| சோடியம் | 5 | 11,000.00 |
| சீஏ | 0 | 0.00 |
| எம்ஜீ | 7 | 15,400.00 |
| மொய்சர் | 29 | 21,750.00 |
| பார்டிகல் | 26 | 15,600.00 |
| எச்எம | 101 | 303,000.00 |
| நீர்.எஸ்.பீ | 1 | 2,200.00 |
| சிட்ரிக் பீ | 0 | 0.00 |
| இலவச அசிடிட்டி | 0 | 0.00 |
| பையூரெட் | 16 | 48,000.00 |
| இலவச பாஸ்போரிக் அசிடிட்டி | 1 | 2,100.00 |
| மணல் அடக்கம் | 0 | 0.00 |
| பீஎச் | 0 | 0.00 |
| கரிமப் பொருள் | 0 | 0.00 |
| எஸ் | 0 | 0.00 |
| நீர் கரைதன்மை<br>Solubility நீர் கரையாதன்மை | 0 | 0.00 |
| இசெட்என்(டைட்ரெமெட்ரிக்) | 0 | 0.00 |
| சீஎல் | 0 | 0.00 |
| நைட்ரேட் நைட்ரஜன் | 0 | 5,500.00 |
| **மொத்தம்** | **259** | **581,750.00** |

| பொதி பொருட்களின் பரிசோதனை தரவுகள் – ஆண்டு : 2020/2021 | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| khjpup FwpaPL | பரிமாணம் (அகலம், நீளம்) | நாடாவின் அகலம் | ஓரு டி.எம் இற்கு தையல் | நேரியல் அடர்த்தி | மடிப்பு தையல் | Seam stitching | கட்டுமானம் (முடிந்தவை எடுத்தவை) | சாக்கின் வய் | துணி உடைக்கும் வலிமை | வெடிக்கும் வலிமை | உள் லைனர் (அகலம், நீளம், தடிப்பு) | மாதிரி எடுக்கப்பட்ட/ பெறப்பட்ட திகதி | அறிக்கையிடப் பட்ட திகதி |
| Pac/NUP/2020/001 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 1 | 13.08.2020 | 18.08.2020 |
| Pac/NUP/2020/002 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 1 | 13.08.2020 | 18.08.2020 |
| Pac/Mini Pack - 2Kg/2020/003 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 28.08.2020 | 31.08.2020 |
| Pac/Mini Pack - 5Kg/2020/004 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 28.08.2020 | 31.08.2020 |
| Pac/Mini Pack - 2Kg/2020/005 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 20.10.2020 | 22.10.2020 |
| Pac/Mini Pack - 5Kg/2020/006 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 20.10.2020 | 22.10.2020 |
| Pac/Urea/2020/007 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 1 | 12.11.2020 | 13.11.2020 |
| Pac/Lak Pohora - 50Kg/2021/001 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 1 | 11.01.2021 | 12.01.2021 |
| Pac/Lak Pohora - 50Kg/2021/002 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 0 | 1 | 08.03.2021 | 10.03.2021 |
| மொத்தம் | 9 | 9 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 0 | 9 | | |

| காகித பொருட்களின் பரிசோதனை தரவுகள் – ஆண்டு : 2020 ஏப்ரல் – 2021 மார்ச் | | | |
|---|---|---|---|
| மாதிரி குறியீடு | மாதிரிகளின் எண்ணிக்கை (ஜீஎஸ்எம்) | மாதிரி எடுக்கப்பட்ட/ பெறப்பட்ட திகதி | அறிக்கையிடப்பட்ட திகதி |
| CFC/LAB/GSM/2020/007 | 3 | 12.08.2020 | 13.08.2020 |
| CFC/LAB/GSM/2020/008 | 4 | 12.08.2020 | 13.08.2020 |
| CFC/LAB/GSM/2020/010 | 6 | 21.09.2020 | 25.09.2020 |
| CFC/LAB/GSM/2020/011 | 6 | 07.10.2020 | 08.10.2020 |
| CFC/LAB/GSM/2021/001 | 4 | 11.01.2021 | 12.01.2021 |
| CFC/LAB/GSM/2021/002 | 5 | 11.01.2021 | 12.01.2021 |
| CFC/LAB/GSM/2021/003 | 4 | 11.03.2021 | 12.03.2021 |
| CFC/LAB/GSM/2021/004 | 20 | 18.03.2021 | 22.03.2021 |
| மொத்தம் | **52** | | |

# விநியோக பிரிவின் அறிக்கை



## விநியோகப் பிரிவு

நேர்மறையான மற்றும் எதிர்மறையான பல காரணங்களுக்காக பனுள்ள லாஜிஸ்டிக் முகாமைத்துவம் அவசியமானதாகும்.

நல்ல லாஜிஸ்டிக் முகாமைத்துவமானது, உற்பத்திகள் மிகவும் சிக்கனமாக, பாதுகாப்பான, திறமையான மற்றும் சரியான நேரத்தில் அனுப்பப்படுவதனை உறுதி செய்கின்றது. இது கம்பனியின் குறைவான செலவிற்கு மற்றும் அதிக திருப்திகரமான வாடிக்கையாளர்களுக்கு வழிவகுக்கின்றது. இதற்கு நேர்மாறாக, மோசமான லாஜிட்டிக் முகாமையானது சேதமடைந்த அல்லது தாமதமான ஏற்றுமதிகளை விளைவிக்கலாம். இது திருப்தியற்ற வாடிக்கையாளர்கள், திருப்பப்பட்ட மற்றும் சேதமடைந்த உற்பத்திகளுக்கு வழிவகுக்கின்றது. இந்த சிக்கல்களின் விளைவினால் அதிக செலவுகள் மற்றும் வாடிக்கையாளர் உறவு சிக்கல்கள் ஏற்படுகின்றன.

விநியோகப் பிரிவின் முதன்மை பணியானது நிறுவனத்தின் லாஜிஸ்டிக்களை நிர்வகிப்பதாகும். இது நாடளாவிய விநியோக வலையமைப்பை பயன்படுத்தி கேள்வி – நிரம்பல் சமன்பாட்டை மேம்படுத்துகின்றது. எங்கள் பரந்த விநியோக வலையமைப்பானது, முழு நாட்டிலும் உள்ள முக்கிய விவசாய துறைகளுக்கான உரத் தேவைகளை உள்ளடக்கியதும் அதை பூர்த்தி செய்வதுமாகும்.

CFC ஆனது எங்கள் வெளிநாட்டு முதல்வர்கள், உள்ளூர் வழங்குனர்கள் முதல் இலங்கை முழுதும் உள்ள சிறிய அளவின விவசாயிகள் - வெளி உற்பத்தியாளர்ள் வரை பரந்த மற்றும் விநியோகச் சங்கிலியைக் கொண்டுள்ளது.

CFCL இன் குறிப்பிடத்தக்க பலம நாடு முழுதும் நிறுவப்பட்டுள்ள களஞ்சிய வலையமைப்பு ஆகும். இது வத்தளையில் உள்ள மிகப்பெரிய மத்திய களஞ்சிய வளாகத்தை உள்ளடக்கியதுடன் சரியான நேரத்தில் சரியான இடத்தில் உம் கிடைப்பதனை இது உறுதிப்படுத்த உதவுகின்றது.

வத்தளை, ஹூனுபிடியவில் உள்ள மத்திய களஞ்சிய வளாகம் 67,000 மெட்ரிக் டொன் கொள்ளளவை கொண்டுள்ளதுடன் பொலன்னறுவையிலுள்ள பிரதான பிராந்திய களஞ்சி தொகுதியானது 18,500 மெட்ரிக் டொன் கொள்ளளவைக் கொண்டுள்ளது. அதற்கு மேலதிகமாக, நாடளாவிய ரீதியில் 44 களஞ்சியங்களைக் கொண்ட களஞ்சிய வலையமைப்பின் மொத்தக் கொள்ளளவு 35,000 மெட்ரிக் டொன்களாகும்.

நெல் உரத்தினை வழங்குவதில் வணிகத்தின் பெரும் அங்கம் இருந்தாலும், அதிகமாக தேயிலை, தென்னை, இறப்பர், காய்கறிகள், பழங்கள், பூக்கள் போன்ற குறிப்பிடத்தக்க பயிர்களுக்கு ஏற்றவாறு கலப்பு உர தயாரிப்பு போர்போலியோவை கம்பனி கொண்டுள்ளது. நிலையான விவசாயத்தில் வளர்ந்து வரும் உலகளாவிய போக்குகளுக்கு ஏற்ப கரிம உரங்களை உற்பத்தி செய்வதற்கும் சமீபத்தில் ஆரம்பித்துள்ளது.

**உர விநியோகம் (ஏனைய பயிர்கள்)**




**நாடளாவிய விநியோகம் - 2020/21**




மொத்த நெல் மானிய உர விநியோகம் இரு அரச நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளதுடன் அதில் CFC 60% க்கு ஆகும். சேசிய உர செயலகத்தால் வெளியிடப்பட்ட பருவக்கால விநியோகத் திட்டத்தின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நெல் மானிய உரம் (60%) கமநலசேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றது. 2020/2021 நிதிஆண்டில் நெல் பிரிவிற்கு எம்ஓபீ 40,040.95 மெ.டொன், டீ.எஸ்பீ 18,330 மெ.டொன மற்றும் யூரியா 130,166.6 மெ.டொன் என விநியோக செயலாற்றல் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் ஏனைய பயிர்களுக்கான

நேரடி உரம் 11,297 மெ.டொன் மற்றும் கலப்பு உரம் 3239 மெ.டொன் விநியோகிக்கப்பட்டது.

நெல் மானிய உரத்தினை ஏஎஸ்சீ க்கு கொண்டு செல்வதற்கு பல்வேறு வகையான முறைகள் பயன்படுத்தப்பட்டன.

1. ஹூனுபிடிய களஞ்சியசாலையிலிருந்து ஏஎஸ்சீ க்கு நேரடி போக்குவரத்து
2. பிராந்த உர விற்பனை நிலையங்களிலிருந்து ஏஎஸ்சீ இனால் கொள்வனவு செய்யப்படல்.
3. ஹூனுபிடிய பிரதான களஞ்சியத்திலிருந்து ஏஎஸ்சீ இனால் கொள்வனவு செய்யப்படல்

எங்கள் போக்குவரத்து முகவர்கள் பெரும்பாலும் பெரிய புகழ்பெற்ற உள்ளூர் நிறுவனங்களாகும். போக்குவரத்து முகவர்களுடனான உறவு ஒப்பந்தத்தால் பிணைக்கப்பட்டுள்ளது. விதிவிலக்கு இன்றி, அனைத்து ஒப்பந்தக் பொறுப்புக்களையும் மதித்து தொடர்ந்து பணியாற்றியதன் ஊடாக இந்த போக்குவரத்து முகவர்கள் பலருடன் CFCL நீண்ட கால உறவினை கொண்டுள்ளது. டிரான்ஸ்போட்டர்களுக்கு நாங்கள் ஒரு சமமான விளையாட்டு களத்தினை உறுதி செய்கின்றோம். டிரான்ஸ்போட்டாளர்கள் பதிவேடு பராமரிக்கப்பட்டு வருவதுடன் அது ஆண்டுதோறும் நாளதுவரையாக்கப்படுகின்றதுடன் இது புதிய டிரான்ஸ்போட்டாளர்களை பதிவு செய்வதற்கான வாய்ப்பை அனுமதிக்கின்றது. ஏற்கனவே பதிவு செய்தவர்கள் உட்பட அனைத்து டிரான்ஸ்போட்டாளர்களும் தங்கள் செயலாற்றலினை தீர்மானிக்கவும், நம்பகத்தன்மை உறுதிப்படுத்தவும் ஒரே மாதிரியான மதீப்பீடு மற்றும் சரிபார்ப்பு நெறிமுறைகளுக்கு உட்படுவார்கள். வருடாந்தம் மேற்கொள்ளப்படும் டிரான்ஸ்போட்டாளர்கள் மதிப்பாய்வுகள், நிறுவனத்தின் நெறிமுறைகள் மற்றும் மதிப்புகளுடன் அவர்களின் சீரமைப்பு குறித்து மேலும் உறுதியளிக்கின்றது. டீரான்ஸ்போட்டர் மேம்பாடு முன்முயற்சிகள் முக்கியமாக நமது வளர்ந்து வரும் விவசாயிகளுக்கு ஆதரவாக திரட்டப்படுகின்றன. போக்குவரத்து முகவர்களை நியமித்ததன் ஊடாக கம்பனியின் வளர்ச்சிக்கு கணிசமாக பங்களிப்பினை பெற்றுக் கொடுத்துள்ளதுடன் விவசாயிகளின் வீட்டிற்கே உரத்தினை பெற்றுக்கொடுப்பதற்கு வசதியளிக்கின்றது.

# சந்தைப்படுத்தல்
## பிரிவு அறிக்கை

பின்வரும் நோக்கங்களுக்கிணங்க உகந்த செயல்திறனுக்காக முழு விநியோகச் சங்கிலியையும் நிர்வகிப்பதில் சந்தைப்படுத்தல் பிரிவு பல முக்கிய செயல்பாடுகளைக் கொண்டுள்ளது:

1. இரசாயன உரத் துறையில் சந்தைத் தலைமைத்துவத்தினை பராமரிக்கவும், அச கொள்கைகளுக்கு இணங்க தரமான உறுதியளிக்கப்பட்ட உரங்கள் கிடைப்பதனை உறுதி செய்கின்றது. இது CFCL இன் அடிப்படை வணிகப் பகுதி மற்றும் தற்போதைய சந்தை நிலவரங்களை கருத்திற் கொண்டும், அடையாளம் காணப்பட்ட பல பகுதிகளை நிவிர்த்தி செய்ய திட்டமிடப்பட்டு அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு கவனம் செலுத்தப்படும்.

2. கரிம உரத்தின் விற்பனையை படிப்படியாகக் அதிகரிக்க: நிலைத்தன்மையை நோக்கி உலகம் வேகமாக நகரும் போது, விவசாயம் குறிப்பாக செயல் பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதால், நிலையான வளர்ச்சி இலக்கு இல. 12 (பொறுப்பான நுகர்வு மற்றும்உற்பத்தி) நிறுவனத்திற்கு முக்கியமாகன்றது. மேலும், வேளாண் இரசாயணங்களின் நச்சுத் தன்மை மற்றும் அது மண்ணை சேதப்படுத்தும் விதம், காற்று மற்றும் நீர்நிலைகளை மாசுப்படுத்தும் மற்றும் மனித விலங்கு சுகாதார சிக்கல்களுக்கு பங்களிக்கும் விதம் தொடர்பில் பரவரான பிண்ணடைவு காணப்படுகின்றது. எனவே, கம்பனி தமது ஒட்டுமொத்த சமூக பொறுப்பின் பகுதியொன்றாக மற்றும் அரச நிறுவனங்களுக்கு ஏற்பவும் கரிம பொருட்களை மேம்படுத்துவதற்கு தீவிரமாக தள்ளுகின்றது. இது தொடர்பில், இலங்கையின் விவசாய சமூகத்திற்கு உயர் தரத்திலான கரிம உரத்தினை உறுதி செய்வதற்காக உள்ளூர் சந்தையில் கரிம உற்பத்தியாளர்களுடன் இநைந்து பணியாற்றும்.

### மீளாய்வாண்டின் செயலாற்றல்

மானிய நெல் உரத்தின் உள்ளவாரானவைக்கு எதிரான முன்னறிவிப்பு

| வகை | எதிர்பார்க்கப்பட்ட விற்பனை (மெ.டொன்) | உள்ளவாரான விற்பனை (மெ.டொன்) | % |
|---|---|---|---|
| யூரியா | 153,245 | 143,123.650 | 93% |
| டிஎஸ்பீ | 37,587 | 19,785.000 | 53% |
| எம்ஓபீ | 45,660 | 42,435.497 | 93% |
| **மொத்தம்** | **236,492** | **205,344.147** | **87%** |

மீளாய்வாண்டில் காலநிலை, சுற்றுசூழல் மற்றும் சமூக எழுச்சிகள் இருந்த போதிலும், விவசாயத் துறையை வலுப்படுத்துவதையும், விவசாயிகளுக்கு தேவைப்படும் போது மானிய விலையில் நெல் உர உள்ளீடுகளை வழங்கப்படுவதனை உறுதி செய்வதில் எங்கள் குழு தங்களை அர்ப்பணித்துள்ளது. கொவிட் - 19 பின்னடைவுகள் இருந்த போதிலும் இந்த முயற்சியின் ஆதாரம் என்னவென்றால், கம்பனி தமது விற்பனை இலக்கில் 87% நிறுவனததிற்கு மிகவும் கடினமான ஆடுகளில் வழங்க முடிந்தது. வருடத்தின் பல்வறு காலக்கட்டங்களில் இருந்த பயணத்தடையின் போது கம்பனி மற்றும் வெளி போக்குவரத்து லொறிகளை இயக்குவதற்கான அங்கீகாரத்தினை பெற்றதன் பின்னர் நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற கமநல சேவைநிலையங்கள் ஊடாக உரம் விநிோகிக்கப்பட்டது. எவ்வாறெனினும், விவசயிகளுக்கு டிஎஸ்பீ வழங்குவதில் கணிசமான வீழச்சி ஏற்பட்டதுடன் இந்த பற்றாக்குறைக்கு பின்வருவன காரணங்களாகும்:

- ஒரு நடவுப் பருவத்தினை தவிர்த்து டிஎஸ்பீ விநியோகிக்கப்பட வேண்டும் மற்றும் மகாவலி, விவசாயம், நீர்பாசனம் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 7/1/3/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம்

கம்பனி விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட 50% இனை மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

- டிஎஸ்பீ குறைத்தலானது மகாவலி, விவசாயம், நீர்பாசனம் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 5/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை ஊடாக வலியுறுத்தப்பட்டுள்ளதுடன் அங்கு டிஎஸ்பீ இனால் மனிதர்களுக்கு மற்றும் சுற்றாடலுக்கு மற்றும் விவசாயிகளுக்கு பாதகமான கனரக உலோகங்கள் அதிகமாக இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் விவசாயிகளுக்கு பொஸ்பரஸ் அவசியம் என்பதனால், இந்த முலப்பொருள் தட்டுப்பாட்டினை ஈடுசெய்வதற்கு வைக்கோல் மற்றும் கரிம உரம் போன்ற மாற்று பொருட்களை பயன்படுத்த பரிந்துரைக்கப்பட்டது.

100% இலக்கினை அடைவதற்கு முடியவில்லை என்ற போதிலும், பெரிய நீர்பாசணம்/ சிறிய நீர்பாசணம் முறைகளை பயன்படுத்தி கம்பனி தமது உரத்தினை நெல் விவசாயிகளுக்கு வெற்றிகரமா வழங்கியது.

### எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உள்ளவாறான ஏனைய பயர்களுக்கு வழங்கப்பட்ட மானிய உரம்

| வகை | எதிர்பார்க்கப்பட்ட விற்பனை (மெ.டொன்) | உள்ளவாறான விற்பனை (மெ.டொன்) | % |
|---|---|---|---|
| ஏனைய பயிர்களுக்கான உரம் | 27,000 | 16,970.24 | 63% |

இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 27,000 மெட்ரிக் டொன் ஏனைய பயிர் உரங்களில், அளவில் 75% நேரடி உரமாகவும் 25% கலப்பு உரமாகவும் விற்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

| | எதிர்பார்க்கப்பட்ட விற்பனை (மெ.டொன்) | உள்ளவாறான விற்பனை (மெ.டொன்) | % |
|---|---|---|---|
| நேரடி (75%) | 20250 | 12538.16 | 62% |
| கலப்பு (25%) | 6750 | 4382.08 | 65% |

நெல் உரம் மிகவும் வெற்றிகரமாக விவசாயிக்கு வழங்கப்பட்டாலும், பின்வரும் காரணங்களால் ஏனைய பயிர் உரங்களின் விநியோகத்தில் குறிப்பிடத்தக்க பற்றாக்குறை காணப்பட்டது:

- 46 விற்பனை நிலையங்களிலும் வெளி களத்திலும் பணிபுரியும் CFCL உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டில்கணிசமானகாலப்பகுதிவீட்டிலிருந்து வேலை செய்ய வேண்டியிருந்தமையினால் விவசாயிகளின் சரியான உரத் தேவைகளை தீர்மானிக்க முடியவில்லை.

- போக்குவரத்து ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெறப்பட்ட லொறிகள் பயணக் கட்டுப்பாடு காரணமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது மற்றும் அதிக முன்னுரிமை மானிய நெல் உரம் வழங்குவதற்கு பயன்படுத்தப்பட்டமையினால் ஏனைய பயிர் உர விநியோகம் பாதிக்கப்பட்டது.

- விற்பனை விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலாமை.

- உலக நாணயசந்தையில் டொலரின் பெறுமதி உயர்ந்தமையினால் அக்காலப்பகுதியில் நிதி நெருக்கடி ஏற்பட்டதுடன் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்திருந்ததுடன், நாட்டின் உரத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நிதி வழங்குவதனையும் அரசாங்களம் புறக்கணித்தது.

| வகை | எதிர்பார்க்கப்பட்ட விற்பனை (மெ.டொன்) | உள்ளவாறான விற்பனை (மெ.டொன்) | % |
|---|---|---|---|
| கரிம துகல்கள் மற்றும் கொம்போஸ்ட் | 5000 | 144.300 | 3% |

இலங்கை விவசாயிகள் பல தசாப்தங்களாக விவசாய இரசாயன அடிப்படையிலான உரங்களுக்கு பழகியுள்ளதுடன் அவர்கள் மீண்டும் கரிமப் பொருட்களுக்கு திரும்பத் தயங்கினர். மேலும், பொதுவாக பயன்பாட்டில் இருந்த பழக்கம் கரிம உரங்களை பார்க்கிலும் இரசாயண உரங்களுக்கு பதிலளித்தனர். எனவே, பின்வரும் காரணங்களால் கரிம உர விற்பனை வீழச்சிக் கண்டது :

- வணிக விவசாயிகள் கலப்பினங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்டவகைகளைபயன்படுத்துகின்றனர். இரசாயண உரங்களைபார்க்கிலும் கரிம பொருட்களில் உள்ள சத்துக்களின் அளவு ஒப்பிட்டளவில் குறைவாக உள்ளது. எனவே, இரசாயண உரங்களுக்கு இணையான சத்துக்களை பெறுவதற்கு அதிகளவு உரங்களை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த நேரத்தில் கரிம உரங்கள் மட்டுமே இருந்தன.

- அதன் விலை உயர்வு விவசாயிகளால் தாங்க முடியாத அளவில் அதிகமாக இருந்தது.
- விவசாயிகள் தங்கள் தோட்டங்களிலும் வயல்களிலும் தாங்களே உரம் தயாரித்ததால், கம்பனியின் உர விற்பனை குறைந்துள்ளது.
- கரிம உரங்கள் பாரம்பரிய விவசாயிகளை இலக்காகக் கொண்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் அவர்களுக்கான விழிப்புணர்வு அல்லது பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான சாத்தியம் காணப்படவில்லை.
- கரிம உரங்களின் வினைத்திறன் குறித்து விவசாயிகளின் மத்தியில் நம்பிக்கை காணப்படவில்லை.
- கரிம உரம் விநியோகம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த எச்எஸ் அமைப்பிடமிருந்து கரிம உரங்கள் போதிய அளவில் வழங்கப்படவில்லை.
- நகர்புற சிறு தோட்ட விவசாயிகளை இலக்காகக் கொண்டு உரங்கள் வழங்கப்பட்டாலும், தொற்று நோய் இறுதி பயனர்களுக்கு பொருட்களை பெறுவதில் சிரமத்தினை ஏற்படுத்தியது.





# நிதியியல்
## அறிக்கை



# பணிப்பாளர்களின் பொறுப்புக்கள்
## பற்றிய கூற்று

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 150 (1) மற்றும் 151 உறுப்புரைகளுக்கு இணங்க அதில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக அனைத்து நிதி ஆண்டிற்காகவும் கம்பனியின் நடவடிக்கைகள் மற்றும் கம்பனியின் இலாப நட்ட கணக்கு உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதனை உறுதி செய்வதற்கு பணிப்பாளர்கள் பொறுப்புடையவர்களாக காணப்படுகின்றனர்.

நிதி நிலையானது நியாயமான மற்றும் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கு உதவும் வகையில் முறையாக பதிவேடுகள் பேணிச் செல்லப்படுகின்றமை தொடர்பில், நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றதென மற்றும் அக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு விரைவாக மற்றும் முறையாக மேற்கொள்ளப்படுகின்றதென 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் பணிப்பாள்கள் பொறுப்புடையவர்களாக காணப்படுகின்றனர்.

சமர்ப்பிக்கப்படுகின்ற நிதிக் கூற்றுக்களின் நேர்மைத்தன்மை மற்றும் புறநிலைத்தன்மை தொடர்பான பொறுப்பு பணிப்பாளர் சபைக்குரியது. நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது கொடுக்கல் வாங்கல்களின் தன்மை மற்றும் உள்ளடக்கம் முறையாக பிரதிபலிக்கின்ற நியாயமான மற்றும் விவேகமான தீர்மானங்களுக்கு எழுந்து உரிய கணக்கீட்டு கொள்கைகள் பயன்படுத்தியுள்ளமை தொடர்பில் பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது.

இந்த நிதிக் கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்திற்கு மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு - SLFRS அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளமை குறித்தும் பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது.

மேலும், நிதிக் கூற்றுக்கள் கம்பனி சட்டத்தின் பிரகாரம் தேவைப்படுகின்ற தகவல்களை வழங்குகின்றன.

பணிப்பாளர்களின் அபிப்பிராயமாவது, கம்பனி தொடர்பான அவர்களின் அறிவு, பிரதான செயற்பாடு மற்றும் நிச்சயமான தகவல்களின் அடிப்படையில், வரும் ஆண்டில் கம்பனியின் தொடர்ந்து இயங்கும் ஆற்றலின் அடிப்படையில் கம்பனிக்கு உதவுவதற்கு போதுமான சொத்துக்கள் காணப்படுகின்றதெனவாகும். இந்த நிதி கூற்றுக்கள் அவ் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

குழுமத்தின் சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக பணிப்பாளர்களினால் நியாயமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மோசடி அல்லது ஏனைய முறைக்கேடுகள் தவிர்க்கும் நோக்கத்தில் அது தொடர்பாக உரிய உள்ளக கணக்காய்வு கட்டுப்பாட்டு அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கம்பனி சட்டத்தின் 56 (2) உறுப்புரைக்கு அமைவாக தற்போது முன்மொழியப்பட்ட பங்கிலாபம் விநியோகிப்பதற்கு பணிப்பளர் சபை அங்கீகாரத்தினை வழங்கியுள்ளதுடன், கம்பனி சட்டத்தின் 57 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அவ்வாறான விநியோகித்தலின் பின்னர் கம்பனிக்கு கடன் தீர்க்கும் ஆற்றல் தொடர்பான பரிசோதனையில் வெற்றிபெற முடியுமென பெறப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் திருப்தி அடைகின்றது, முன்மொழியப்பட்ட பங்கிலாம் தொடர்பான கடன்தீர்ச் சான்றிதழொன்று கணக்காளர்களிடம் கோரப்பட்டுள்ளன.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் பத்தொன்பதாம் திருத்தத்தின் ஏற்பாடுகளின் கீழ் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியினை கணக்காய்வு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அவற்றினை ஸ்தாபிப்பதற்கு கூடுமான வகையில் பொருத்தமானதென கருதும் பரிசோதனைகள் மேற்கொண்டு நிதி கூற்றுக்கள் தொடர்பான அபிப்பிராயத்தினை பெற்றுக் கொடுப்பதற்கு அனைத்து சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டுள்ளன.

**இணக்க கூற்று**

பணிப்பாளர்கள் தமது உயர்பட்ச அறிவின் அடிப்படையில், ஐந்தொகை திகதியில் கம்பனி தொடர்பாக அதன் ஊழியர்கள் மற்றும் அரசிற்குரிய அனைத்து சட்டரீதியான கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளதென அல்லது குறித்த பிரகாரம் அதற்காக ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளதென உறுதியளிக்கின்றனர்.

**ஜனத் வடனகே**
தலைவர்
குழுமம் சார்பாக
வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி
22.07.2021

# தலைவர் மற்றும் நிதி முகாமையாளரின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று

2021 மார்ச் மாதம் 31 ஆந் திகதி உள்ளவாராக வரையறுக்கப்பட்ட இலங்கை உர கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் பின்வரும் தேவைப்பாடுகளுக்கு அமைவாக தயாரித்து முன்வைக்கப்பட்டது,

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்கள்
- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்
- பொது திறைச்சேரியினால் வெளியிடப்பட்டுள்ள கூட்டுறவு கட்டுப்பாடு தொடர்பான சிறந்த நடைமுறைக்கான கோவை

நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் உரிய பிரகாரம் மற்றும் எப்போதும் பயன்படுத்தியமையை உறுதி செய்கின்றோம். பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் எந்த விலகல்களும் இன்றி பயன்படுத்தப்பட்டுள்ளன. கணக்காய்வு குழு மற்றும் எங்கள் சுயாதீன கணக்காளர்களுடன் உயர் மட்டத்திலான தீர்ப்புக்கள் மற்றும் சிக்கல் தன்மைகள் தொடர்பான குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் மதிப்பீடுகள் கலந்துரையாடப்பட்டன.

உள்ளக கட்டுபாடு மற்றும் கணக்கு அறிக்கை அமைப்பு ஸ்தாபித்தல், சொத்துக்கள் பாதுகாத்தல் மற்றும் மோசடி மற்றும் முறைகேடுகள் தவிர்த்தல் மற்றும் அடையாளப்படுத்துவதற்காக நாங்கள் முறையான மற்றும் போதுமான கவனம் எடுத்துள்ளோம். இவை தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு அடிப்படையில் மதிப்பாயப்பட்டு, மீளாய்வு செய்யப்பட்டு, நாளதுவரையாக்கப்பட்டுள்ளது. கம்பனியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்ச்சியாக பின்பற்றப்பட்டுள்ளமைக்கு சாதாரண உறுதிப்படுத்தல்கள் கம்பனியின் உள்ளக கணக்காய்வாளர்களினால் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் ஊடாக வழங்கப்பட்டன. எவ்வாறாயினும், ஏதேனும் உள்ளக கட்டுப்பாடு மற்றும் கணக்கு அமைப்பின் ஊடாக வழங்கப்படுகின்ற சான்றுகள் பெற்றுக் கொள்ளும் போது அடையாளப்படுத்தப்பட வேண்டிய இயல்பான வரம்புகள் காணப்படுகின்றன.

கணக்காய்வின் பயனுறுதியினை மீளாய்வு செய்வதற்கு, கணக்காய்வு செய்வதற்கு, உள்ளக கட்டுப்பாடு மற்றும் நிதி அறிக்கையிடலின் பிரச்சனை தொடர்பாக கம்பனியின் கணக்காய்வு குழுவானது அவ்வப்போது உள்ளக கணக்காய்வாளர்களுடன் மற்றும் சுயாதீன கணக்காய்வாளர்களுடன் கலந்துரையாடுகின்றது. சுயாதீன கணக்காய்வாளர்களுக்கு மற்றும் உள்ளக கணக்காய்வாளர்களுக்கு ஏதேனும் விடயம் தொடர்பாக கணக்காய்வு குழு கூட்டங்களின் போது கலந்துரையாடுவதற்கும் பூரண சுதந்திரம் காணப்படுகின்றது.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்பட்டன.

..........................................
**ஜனத் வடனகே**
தலைவர்

..........................................
**என்.பீ.சீ. ஏகநாயக**
நிதி முகாமையாளர்

# பொதுக் கணக்காய்வாளர் அறிக்கையின் மொழிப்பெயர்வு

ஏஆர்ஜ/ஏ/சீஎப்சீ/2022/16

2022 திசெம்பர் 14 ஆந் திகதி

தலைவர்

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் 2021 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் ("கம்பனி") 2021 மார்ச் 31 இல் உள்வாரான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் உறுப்புரைக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, கம்பனியின் 2021 மார்ச் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயாமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் ஆண்டின் இறுதி இருப்பு பௌதீகமாக உறுதி செய்யப்பட்டு கிரயம் மற்றும் தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியில் கணக்கிடப்படல் வேண்டும். அதன் பிரகாரம் வெளி கணக்காளர்களின் பங்கேற்பில் 2021 ஒக்தோபர் மாதத்தில் பௌதீக இருப்பு மெய்மையாய்வொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் இருப்பு ஆய்வு மேற்கொள்ளக்கூடிய பிரகாரம் இருப்புக்களை வைத்திருக்காமையின் காரணத்தினால் இருப்பு பௌதீக ரீதியில் மெய்மையாய்வு மேற்கொள்ள முடியாது போனது. எவ்வாறெனினும் இருப்பு அறிக்கைகளின் பிரகாரம் இறுதி இருப்பு ரூபா 446,784,423 இற்கு மதிப்பிடப்பட்டு இறுதி கணக்குகளில் காண்பிக்கபபட்டுள்ளதுடன் அதன் துல்லியம் தொடர்பில் கணக்காய்வின் போது திருப்தியடைய முடியவில்லை.

(ஆ) கம்பனியினால் ரூபா 6,000,000 ஆன 122.73 மெட்ரிக் டொன்னிலான உர இருப்பு பற்றாக்குறையொன்று இனங்காணப்பட்டுள்ளதென 2.8.6 (h) ஆம் இலக்க கணக்கீட்டு குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அவ் உர வகை எது, அதன் பெறுமதி கணிக்கப்பட்ட அடிப்படை என்ன போன்றன தெளிவுப்படுத்தப்பட்டிராததுடன் இருப்பு பற்றாக்குறை கிரயத்திற்கு சீராக்கப்பட்டிராமையினால் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 6,000,000 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஒவ்வொரு நாட்களுக்குரியதாக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படுகின்ற அந்நிய செலாவணி மாற்று வீதத்திற்கு பதிலாக வேறுப்பட்ட வீதத்தின் அடிப்படையில் அந்நிய செலாவணி மாற்று இலாப நட்டம் கணிக்கப்பட்டமையினால் கணக்கிடப்பட்டுள்ள அந்நிய செலாவணி மாற்று நட்டம் ரூபா 2,845,381 இனால் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மாத்தளை மாவட்டத்தினுள் லக்பொஹொர களஞ்சியம் அமைந்துள்ள வாரியபொல வத்த என்ற பெயரிலான 29.93 பர்சஸ் இனாலான காணி, காணி மறுசீரமைப்பு ஆனைக்குழுவினால் 2020 செப்தெம்பர் 10 ஆந் திகதி கம்பனிக்கு ஒப்பாவணம் ஊடாக சட்டரீதியாக கையளிக்கப்பட்ட போதிலும் அக் காணி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படாமையின் காரணத்தினால் நிதிக் கூற்றுக்களில் நடைமுறை அலாச் சொத்துக்கள் மிகையாக மதிப்பிடப்பட்டிருந்தது.

(உ) கம்பனிக்கு சொந்தான ஆய்வுக் கூடத்தின் ஊடாக கணக்கு ஆண்டினுள் வெளி நிறுவனங்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள 103 ஆய்வுக்கூட பரிசோதனைகளுக்குரிய வருமானம் ரூபா 1,200,140 ஆக காணப்பட்ட போதிலும், நிதி கூற்றில் ஆண்டினுள் காசாக பெறப்பட்ட ரூபா 693,406 ஆன பெறுமதி மட்டும் ஆய்வுக்கூட வருமானமாக இனங்காணப்பட்டமையின் காரணத்தினால் ஆண்டின் இலாபம் ரூபா 506,734 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் நடைமுறை சொத்துக்கள் அப் பெறுமானத்தினால் குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) களஞ்சியங்களுக்காக உரிய வண்ணம் களஞ்சிய ஊழியர்கள் பெற்றுக் கொடுக்க முடியாமையின் காரணத்தினால் தனியார் நிறுவனமொன்றிலிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 172,500 ஆன ஏல உத்தரவாதங்கள் கம்பனியின் வருமானமாக கணக்கிடப்படாது இன்னுமாக நடைமுறை பொறுப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(எ) கம்பனிக்கு சேவை வழங்கும் மூன்று ஒப்பந்தக்காரர்களுக்குரிய 2021 மார்ச் 31 ஆந் திகதியாகையில் 06 மாதங்களை மிகைத்திருந்த போதிலும் கோரப்படாத மொத்த பெறுமதி ரூபா 239,141 ஆன நிறுத்தி வைக்கப்பட்ட தொகை வருமானத்திற்கு சீராக்கப்பட்டோ அல்லது குறித்த தரப்பினரிடமிருந்து விசாரிக்கப்படாது செலுத்த வேண்டிய மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) கணக்கு ஆண்டினுள் நுகர்வுப் பொருட்கள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ள காகிதப் பொருட்கள், பிளம்பிங் உதிரிப்பாகங்கள், கட்டிடப் பொருட்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்கள் போன்றவற்றின் ரூபா 415,514 ஆன பற்றாக்குறை தொடர்பாக புலனாய்வொன்று மேற்கொள்ள்பட்டு பொறுப்பு கூற வேண்டியவர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு பதிலாக பற்றாக்குறையின் பெறுமதி ஏனைய பெற வேண்டிய பெறுமதியொன்றாக நிதிக் கூற்றினுள் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) பெற வேண்டிய மீதிகளில் பெலவத்த சீனி கம்பனியிடமிருந்து பெற வேண்டிய ரூா 807,650 ஆன கடன் மீதியொன்று உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் பெலவத்த சீனி கம்பனியின் கணக்கில் அவ்வாறான செலுத்தப்பட வேண்டிய மீதியொன்று காண்பிக்கப்படாததுடன் லக் பொஹொர கம்பனிக்கு செலுத்தப் டவேண்டிய அனைத்து கொடுப்பனவுகளும் செலுத்து முடிவடைந்துள்ளமை பெலவத்த சீனி கம்பனியினால் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்படி கடன் மீதி தொடர்பாக முறையான புலனாய்வொன்று மேற்கொண்டு அவர்களிடமிருந்து அத் தொகை அறவிடப்படுவதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது.

எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 கம்பனியின் 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கின்ற அதிகார சபையின் 2021 ஆண்டறிக்கையில் உள்ளடக்கூடிய எனினும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்களாக கருதப்படுகின்றது. ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தும் அல்லது முடிவுரையினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

கம்பனியின் 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை நான் வாசிக்கையில் அதில் பொருண்மையான பிழையாகக் காட்டுதல் உள்ளது என முடிவுக்கு வந்தால் சரிசெய்வதற்காக நிருவகிக்கின்ற தரப்பினர்கக்கு இவ்விடயங்களைத் நான் தெரியப்படுத்துதல் வேண்டும். இன்னும் சரிசெய்யப்படாத பொருண்மையான பிழையாகக் காட்டுதல்கள் இருக்குமாயிருந்தால் அவற்றை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்

## 1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனி தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் கம்பனிகலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் கம்பனியின் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.5 கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள்

தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக கம்பனியின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் கம்பனி தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(1)(ஈ) பிரிவில் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை கம்பனி பேணி வந்திருந்தது.

2.1.2 கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியின் (அ), (ஆ), (இ), (ஈ) கின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தவிர்த்து முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் அங்கத்தவர்கள் எவருக்கும் கம்பனி சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமை.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து, ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது கம்பனியின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமை.

| | சட்டங்கள் / பணிப்புரைக்கான தொடர்பு | அவதானிப்பு |
|---|---|---|
| அ) | 2003 யூன் 02 திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவு | கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் அனைத்து அரச கம்பனிகளும் நிதிக் கூற்றுக்களை தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2020/2021 நிதி ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் கணக்கு ஆண்டு முடிவடைந்து 229 நாட்களுக்குபின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |
| ஆ) | 2015 மே 25 திகதிய PED 1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2016 ஒக்தோபர் 25 திகதிய PED 1/2015(i) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் 3 ஆம் பிரிவு | வாகனம் மற்றும் எரிபொருள் கொடுப்பனவு பெற்றுக் கொடுக்கக்கூடிய உத்தியோகத்தர்-கள் பிரிவிற்கு உட்படாத ஆஆ 1-2 சேவை பிரிவிற்கு சொந்தமான பத்து உத்தியோகத்தர்-களுக்கு மாதாந்தம் ரூபா 10,000 வீதம் கொடுப்பனவு மற்றும் அப் பிரிவின் பிரதேச விற்பனையாளர்களாக பணியாற்றும் 08 உத்தியோகத்தர்-களுக்கு மாதாந்தம் ரூபா 40,000 ஆன கொடுப்பனவு மற்றும் அதிகபட்சமாக 125 லீட்டர் ஆன எரிப்பொருள் கொடுப்பனவு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை மிகைத்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் கடமைகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக கால எல்லைக்குள் சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என

(அ) லக் பொஹொர கம்பனி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் மொத்த கிரயத்தில் 50 சதவீதம் கம்பனியின் பங்களிப்பில் விற்பனை மேம்பாட்டு உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் பெற்றுக் கொடுத்திருந்தது. கம்பனி மற்றும் மோட்டார் சைக்கிள்கள் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தர்கள் இடையே ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தரினால் எஞ்சிய 50 சதவீத சமனான 60 தவணைகளில் செலுத்தப்பட வேண்டியதுடன் செலுத்தி முடியும் வரையில் மோட்டார் சைக்கிளின உரித்து கம்பனிக்குரியதாகும். மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் மோட்டார் சைக்கிள்ளொன்றினை பெற்றுக் கொண்ட அப்போது ஓலுமடு களஞ்சியத்தின் காப்பாளர் உர மோசடியொன்று காரணத்தினால் வேலை நிறுத்தத்திற்கு உட்படும் சந்தர்ப்பத்தின் போது மோட்டார் சைக்கிளுக்காக 13 தவணைகள் மட்டும் செலுத்திருந்தார். வேலை நிறுத்தத்திற்கு உட்பட்ட 2019 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் மீளாய்வாண்டு இறுதி வரையில் தவணைக் கட்டணம் அறவிடப்படுவதற்கு அல்லது உடன்படிக்கையின் பிரகாரம் மோட்டார் சைக்கிளை மீண்டும் கம்பனிக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையினால் ரூபா 325,000 ஆன அரசாங்க சொத்து பிழையாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) உர போக்குவரத்திற்காக போக்குவரத்து நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்படிக்கையின் பிரகாரம் போக்குவரத்திற்காக கையளித்த இருப்புகளுக்கு சேதம் ஏற்பட்டால் குறித்த சேதத்திற்குட்பட்ட இருப்பின் கிரயம் போக்குவரத்து நிறுவனத்தினால் கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டும். எனினும் மானிய ஆமூீ உரத்தினை கொண்ட லொறியொன்று 2020 திசெம்பர் 21 ஆந் திகதி கம்பஹா இம்புல்காட பிரதேசத்தில் அவசர விபத்தொன்றிற்கு முகங்கொடுத்தமையினால் சேதமடைந்த மற்றும் மணல் கலந்த 58 மூட்டைகள் மீண்டும் உர கம்பனிக்கு கையேற்கப்பட்டு 50 மூட்டைகளாக தயாரிக்கப்பட்டு இருப்பிற்கு கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பான முறையான பரிசோதனைகள் மேற்கொண்டு அக் கம்பனியிலிருந்து பணம் அறவிடப்படுவதற்கும் களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள உர இருப்பு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனிக்கு சொந்தமான நுவரஎலிய மற்றும் பொலன்னறுவை சுற்றுலா விடுதிகளுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் 2019 மே 10 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் திருத்தப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட கட்டணங்களை உள்ளடக்கிய உள்ளக அலுவலக குறிப்பு பத்திரிக்கையின் பிரகாரம் பண்டிகை நாட்கள் மற்றும் பண்டினை அற்ற நாட்கள் என 2 வகை கட்டணங்கள் மற்றும் கம்பனியின் ஊழியர்கள் மற்றும் வெளி நபர்களுக்காக மாற்றப்பட்ட 2 வகையான கட்டண அறவிடல்கள் அறிமுகப்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் பண்டிகை நாட்கள் மற்றும் பண்டிகை அற்ற நாட்கள் உள்ளடங்கும் வகையில் காலம் சரியாக அறிமுகப்படுத்திக் கொடுத்திருக்கவில்லை. உள்ளக அலுவலக குறிப்பு பத்திரத்தின் நாளிலிருந்து திருத்தப்பட்ட கட்டணம் அறவிடப்பட வேண்டிய போதிலும் கம்பனியின் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் தலையீட்டின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட மேற்படி கட்டணம் சரியாக அறவிடப்படாது குறைவான கட்டணம் அறவிடப்பட்டு உள்ளக மற்றும் வெளி தரப்பினருக்கு சுற்றுலா விடுதியினை பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) மானிய உரம் பெற்றுக் கொடுக்கும் முறை செயற்படுத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டு தொடக்கம் நெல் பயிர்சிக்காக உரம் வழங்கும் அரச முகவராக லக் பொஹொர கம்பனி நடவடிக்கை எடுக்கின்றதுடன் அத்திகதியிலிருந்து விற்பனை மேம்பாடு மற்றும் விற்பனை தொடர்பான வேறு பணிகள் பாரியளவில் குறைந்துள்ளது. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை திருத்தப்படுவதற்கு பதிலாக கம்பனி அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் பதவியணிக்கு சொந்தமான, மாவட்ட சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பாளர்கள், பிரதேச சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பாளர்கள், சந்தைப்படுத்தல் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் போன்ற பதவிகளில் தொடர்ச்சியாக வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டில் பிரதேச சந்தைப்படுத்தல் முகாமையாளர்கள் பதவிகள் 5 இற்காக பதிற்கடமை அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இக் காரணத்தினால் கம்பனிக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவிற்காக சிக்கனமற்ற கிரயமொன்று ஏற்பதற்கு நேர்ந்துள்ளது.

(உ) கம்பனிக்கு சொந்தமாக இலங்கை ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான தராதர அங்கீகார சபையில் (Sri Lanka Accreditation Board) பதிவு செய்யப்பட்ட ரூபா 19,264,125 ஆன பெறுமதியான ஆய்வுக் கூட உபகரணங்களை கொண்ட ஆய்வுக் கூடமொன்று காணப்படினும், மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்த தெரிவுப் பரிசோதனைகளின் எண்ணிக்கை 103 ஆக காணப்பட்டதுடன் அதற்குரிய வருமானம் ரூபா 1,200,140 ஆகும். இந்த ஆய்வுக் கூடத்தில் வருமானமொன்று ஈட்டுவதற்கு முடிந்த வகையில் மூலோபாய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இதனால் ஆய்வுக் கூடத்திற்கு சொந்தமான வளங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 2.3 ஏனைய விடயங்கள்

(அ) பசளை பெறுதல், வழங்குதல், மாற்றுதல் உள்ளடங்கலாக பசளை தொடர்பான முழுமையான செயன்முறை கணினி மயப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கணினி அமைப்பிற்கு முன் திகதியொன்றில் நாளதுவரையாக்கப்பட்ட வண்ணம் தரவுகள் உள்ளடக்கப்படும் திறன் காணப்படுகின்றமை, தேவையான பொது கட்டுப்பாடுகள் மற்றும் அமைப்புக் கட்டுப்பாடு செயற்படுத்தப்படாமையின் காணரத்தினால் கணினி அமைப்பு தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

(ஆ) கொவிட்ட 19 தொற்று நிலையின் காரணத்தினால் நாடு மூடப்பட்டிருந்தமையினால் சுழற்சி முறையில் கடமையாற்றல் அறிமுகப்படுத்திருந்த போதிலும் அம் முறைமை செயற்படுத்தப்பட்டிராமை மற்றும் மேலதிக நேரத்தினை கட்டுப்படுத்தாமையின் காரணத்தினால் கடந்த ஆண்டிற்கு இணையாக 12.3 சதவீத அதிகரிப்புடன் ரூபா 39,219,757 ஆன தொகை மேலதிக நேரக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 4 ஆண்டுகள் தொடக்கம் 11 ஆண்டுகள் வரையான காலத்தினுள் உரிமை கோரப்படாத ரூபா 274,000 ஆன மீண்டும் செலுத்தப்படுகின்ற ஏல உத்தரவாதங்கள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நீண்ட காலமாக நடைமுறை பொறுப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2021 யூன் 08 திகதிய mkg/21/0964/323/030 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்திக் கொடுத்த கரிம உர கொள்கை மற்றும் 2021 யூலை 31 திகதிய 2238∴45 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் பிரகாரம் மீண்டும் இரசாயன உரம் கொண்டுவரப்படுவதற்காக அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் லக்பொஹொர கம்பனிக்கு அவ் அங்கீகாரம் பெறப்படாமையினால் 2021 ஆம் ஆண்டு தொடக்கம் கம்பனியினால் மேற்கொண்ட வியாபார நடவடிக்கை இழந்திருந்தது. கம்பனியின் தொடர்ச்சியான நிலைத்திருத்தன்மை உறுதி செய்யக்கூடிய புதிய வியாபார சந்தர்ப்பங்களுக்கு முன்வராமையினால் கம்பனியின் தொடர்ச்சியான நிலைத்திருத்தன்மை சவாலாக இருப்பது அவதானிக்கப்பட்டது.

(உ) கம்பனியின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் 2019 செப்தெம்பர் 26 ஆந் திகதி ஓலுமடு களஞ்சியத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது உர பற்றாக்குறையொன்று இனங்காணப்பட்டிருந்ததுடன் உர களஞ்சியத்தின் களஞ்சிய காப்பாளர்கள் கடமையிலிருந்து அகற்றப்பட்டு பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. பரிசோதனையின் பெறுபேற்றின் அடிப்படையில் கம்பனியின் தலைவரினால் 2020 நவம்பர் 24 ஆந் திகதிய கடிதத்தின் ஊடாக மேற்படி களஞ்சிய காப்பாளரினால் ரூபா 2,191,948 ஆன அரச பணத்தொகை மோசடி செய்யப்பட்டுள்ளதெனவும் அரசாங்க பணம் பிழையாக பய்னபடுத்தியமை தெர்பில்புலனாய்வொன்று மேற்கொண்டு மேல் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டு கம்பனியின் தலைவரினால் நிலைய அதிகாரி விசேட புலனாய்வு பிரிவு முல்லைத்தீவு இற்கு கடிதமொன்று வழங்கப்பட்டுள்ளது. எனினும் மேற்படி விடயம் தொடர்பாக பொலிஸில் வழக்கு தாக்கல் செய்யப்படாது நட்டம் அறவிடப்படுவதற்காக சிவில் வழக்கொன்று பணித்தல் காரணத்தினால் அரசாங்க பணம் பிழையாக பயன்படுத்திய குற்றத்தினை மறைப்பதற்கு கம்பனியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ஊ) உர வழங்குனர்களிடமிருந்து கடனுறுதி கடிதம் தேறும் போது கடனுறுதி கடிதம் வழங்கப்பட்டுள்ள வங்கியினால் கம்பனிக்காக செலுத்தப்பட்ட தொகை கடனிற்கு மாற்றும் போது அத் திகதிக்குரிய மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள அந்நிய செலாவணி வீத்தினை பார்க்கிலும் அதிக வீதமொன்றினை பயன்படுத்தியமையின் காரணத்தினால் மொத்த பெறுமதி ரூபா 485,074,407 ஆன குறுகியகால கடனுக்கு அதிகமாக கொடுப்பனவு செய்வதற்கு கம்பனிக்கு நேர்ந்துள்ளது.

**டப்.பீ.சீ. விக்ரமரத்ன**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று

## 2021 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான

*(இலங்கை ரூபாவில்)*

| | குறிப்பு | 2021 | 2020 |
|---|---|---|---|
| வருமானம் | 3 | 2,257,657,781 | 2,100,583,296 |
| விற்பனைக் கிரயம் | 4 | (1,841,516,753) | (1,832,856,472) |
| **மொத்த வருமானம்** | | **416,141,028** | **267,726,824** |
| பிற தொழிற்பாட்டு வருமானம் | 5 | 118,465,561 | 209,623,485 |
| நிர்வாகச் செலவுகள் | 6 | (562,562,771) | (550,184,970) |
| விநியோகச் செலவுகள் | 7 | (907,040) | (21,423,709) |
| **தொழிற்பாடுகளிலிருந்தான இலாபம்** | | **(28,863,222)** | **(94,258,371)** |
| நிதி வருமானம் | 8 | 212,531,507 | 345,946,426 |
| நிதிக் கிரயம் | 8 | (21,077,869) | (63,244,126) |
| **வரிக்கு முன்னர் இலாபம்** | | **162,590,416** | **188,443,929** |
| வருமானவரி செலவுகள் | 9 | (38,197,672) | (90,450,653) |
| **ஆண்டிற்கான இலாபம்** | | **124,392,743** | **97,993,276** |
| | | | |
| **ஏனைய விரிவான வருமானம்** | | | |
| கடப்பாடு மீதான உள்ளவாரான இலாபம்/நட்டம் | | (7,955,528) | (10,206,319) |
| பிற்போடப்பட்ட வரி நலன் / (செலவுகள்) உள்ளவாரான இலாபம் மதான பொறுப்புக்கள் மீதான நட்டம். | | 1,909,327 | - |
| மீள் மதிப்பீட்டு மிகையின் மீது பிற்போடப்பட்ட வரி நலன்/ (செலவுகள்) | | 20,082,985 | 5,493,967 |
| **மொத்த ஏனைய விரிவான வருமானம்** | | **14,036,784** | **(4,712,352)** |
| **ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம்** | | **138,429,527** | **93,280,924** |

| | | | |
|---|---|---|---|
| ஒரு பங்கிற்கான அடிப்படை வருவாய் (EPS) | 10.1 | 2.48 | 1.95 |
| ஒரு பங்கிற்கான ஈவுத் தொகை (DPS) | 10.2 | 0.37 | 0.59 |

அடைப்புக் குறிக்குள் உள்ளவைகள் கழிக்கப்பட்டவைகளை குறிக்கின்றன.

பக்கம் 91 தொடக்கம் 128 வரையுள்ள நிதி அறிக்கைக்களுக்கான குறிப்புக்கள் இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

# நிதி நிலைமை பற்றிய கூற்று

## 2021 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

(இலங்கை ரூபாவில்)

| | குறிப்பு | 2021 | 2020 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **eilKiway;yhr; nrhj;Jf;fs;** | | | |
| ஆதனம், பொறி உபகரணம் | 11 | 2,665,990,105 | 2,705,686,663 |
| மூலதன நடைமுறை வேலைகள் | 12 | 676,729 | 676,729 |
| அசையாச் சொத்துக்கள் | 13 | 9,560,797 | 13,754,126 |
| **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **2,676,227,631** | **2,720,117,519** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| தொக்குகள் | 14 | 388,720,934 | 225,993,757 |
| வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் | 15 | 25,672,027,321 | 18,802,655,103 |
| ஊழியர்களின் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 16 | 39,171,276 | 40,730,642 |
| அரசாங்க பத்திரங்களில் முதலீடு | 17 | 730,446,740 | 698,334,484 |
| நிலையான வைப்புக்களில் முதலீடு | 18 | 2,396,023,005 | 2,267,056,772 |
| வருமான வரி அறவீடுகள் | | - | 41,815,680 |
| காசும் காசுக்கு சமனானவைகளும் | 19 | 196,034,947 | 570,071,557 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **29,422,424,223** | **22,646,657,994** |
| **மொத்த சொத்துக்கள்** | | **32,098,651,854** | **25,366,775,513** |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | | |
| **உரிமையாண்மை** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 20 | 502,456,080 | 502,456,080 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 21 | 2,317,365,710 | 2,297,282,725 |
| நிறுத்தி வைக்கப்பட்ட வருவாய் | | 3,526,156,689 | 3,341,503,885 |
| **மொத்த உரிமையாண்மை** | | **6,345,978,479** | **6,141,242,690** |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய நலன் கடப்பாடு | 22 | 79,731,435 | 68,393,216 |
| பிற்போடப்பட்ட விரிவிதிப்பு | 23 | 139,082,220 | 169,037,795 |
| வட்டி தாங்கு கடன்கள் | 25 | 15,991,700,302 | - |
| **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **16,210,513,957** | **237,431,011** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 24 | 5,770,919,966 | 4,694,602,515 |
| வட்டி தாங்கு கடன்கள் | 25 | 3,666,228,769 | 14,103,482,956 |
| வைப்புக்கள் மற்றும் பெறப்பட்ட முற்பணங்கள் | 26 | 22,058,923 | 44,458,457 |
| வருமான வரி செலுத்தல்கள் | 27 | 4,345,255 | - |
| திரட்டப்பட்ட செலவுகள் மற்றும் ஒதுக்கங்கள் | 28 | 78,201,983 | 78,699,320 |
| வங்கி மேலதிக பற்றுக்கள் | 19 | 404,521 | 66,858,564 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **9,542,159,417** | **18,988,101,812** |
| **மொத்த உரிமையாண்மையும் பொற்புக்களும்** | | **32,098,651,854** | **25,366,775,513** |
| **பங்கிற்கான நிகர சொத்து பெறுமதி** | | **126.30** | **122.22** |

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் இந்த நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என நான் இத்தாள் சான்றுப்படுத்துகின்றேன்.

நிதி முகாமையாளர்

இந்த நிதிக் கூற்றுக்களை தாயரித்து சமர்ப்பிப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.
பணிப்பாளர் சபை சார்பாக அங்கீகரித்து கையொப்பமிடுகின்றேன்.

தலைவர்

பணிப்பாளர்

26.10.2021 ஆந் திகதி
கொழும்பு

அடைப்புக் குறியினுள் உள்ளவைகள் கழிக்கப்பட்டவைகளை குறிக்கின்றன.
பக்கம் 91 தொடக்கம் 128 வரையிலான நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

# உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று

## 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

(இலங்கை ரூபாவில்)

| | கூறப்பட்ட மூலதனம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | நிறுத்தி வைக்கப்பட்ட ஈட்டல்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| **2019 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | **502,456,080** | **2,291,788,758** | **3,243,246,375** | **6,037,491,213** |
| **கடந்த ஆண்டு சீராக்கல்கள்** | - | - | 10,470,553 | 10,470,553 |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | 97,993,276 | 97,993,276 |
| ஏனைய விரிவான வருமானம்(குறப்பு இல 1) | - | 5,493,967 | (10,206,319) | (4,712,352) |
| | | | | - |
| பங்கிலாப ஒதுக்கம் | - | - | | - |
| **2020 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | **502,456,080** | **2,297,282,725** | **3,341,503,885** | **6,141,242,690** |
| கடந்த ஆண்டு சீராக்கல்கள் | - | - | 66,306,262 | 66,306,262 |
| ஆண்டிற்கான இலாபம் | - | - | 124,392,743 | 124,392,743 |
| | | | | - |
| ஏனைய விரிவான வருமானம் | - | 20,082,985 | (6,046,201) | 14,036,784 |
| **2021 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | **502,456,080** | **2,317,365,710** | **3,526,156,689** | **6,345,978,479** |

**குறிப்பு இல 01**

மேற்படி குறிப்பு இல 1 இற்கு தொடர்புடையதாக இந்த ஆண்டில் சீராக்கப்பட்டுள்ள கடந்த ஆண்டிற்கான காணிக்கான பிற்போடப்பட்ட வரி கணிப்பு கருத்திற் கொள்ளப்படவில்லை.

அடைப்புக் குறியினுள் உள்ளவைகள் கழிக்கப்பட்டவைகளை குறிக்கின்றன.

பக்கம் 91 தொடக்கம் 128 வரையிலான நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

# காசுப் பாச்சல் கூற்று

## 2021 மார்ச் 30 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான

(இலங்கை ரூபாவில்)

| | குறிப்பு | 2021 | 2020 |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| வரிக்கு முன்னர் இலாபம் | | 162,590,416 | 188,443,929 |
| **செம்மையாக்கல்கள்** | | | |
| பெருமானத்தேய்வு | | 53,130,341 | 52,382,408 |
| அசையாச் சொத்துக்களை தீர்த்தல் | | 4,517,354 | 4,457,400 |
| ஆதனம், பொறி உபகரணங்கள் மீதான விற்பனை (இலாபம்)/நட்டம் | | (90,014) | 2,289,940 |
| வியாபார வருமதிகளின் பாதிப்பு | | - | 19,804,991 |
| ஆண்டிற்கான பணிக்கொடை கட்டணம் | | 11,211,931 | 10,284,130 |
| வட்டி வருமானம் | | (212,531,507) | (345,946,426) |
| வட்டி செலவுகள் | | 21,077,869 | 63,244,126 |
| கடந்த ஆண்டின் சீராக்கல்கள் | | 66,306,262 | 10,470,553 |
| **தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன் செயற்பாட்டு நட்டம்** | | **106,212,653** | **5,431,051** |
| தொக்குகள் | | (162,727,177) | 420,539,571 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | | (6,869,372,218) | 565,542,997 |
| ஊழியர் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | | 1,559,366 | (2,839,143) |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | | 1,076,317,452 | (990,924,834) |
| வைப்புக்கள் மற்றும் முற்பண பெறுவனவுகள் | | (22,399,534) | (104,514,426) |
| திரட்டப்பட்ட செலவுகள் மற்றும் முற்பணங்கள் | | (497,337) | (29,747,059) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசு பாய்ச்சல்** | | **(5,870,906,795)** | **(136,511,844)** |
| பணிக்கொடை செலுத்தியது | | (7,829,240) | (11,958,720) |
| வட்டி செலுத்தியது | | (21,077,869) | (63,244,126) |
| வரி செலுத்தியது | | - | (70,451,099) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்படுகின்றது)தேறிய காசுப்பாய்ச்சல்** | | **(5,899,813,904)** | **(282,165,789)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கையேற்றல் | | (13,625,891) | (15,423,824) |
| அசையாச் சொத்துக்களின் கையேற்றல் | | (324,025) | (710,500) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை மீதான வருமானம் | | 282,122 | - |
| திறைச்சேரி உண்டியல்/நிலையான சொத்துக்கள் மீதான (வட்டி மறு முதலீட்டுடன்) முதலீடு | | (161,078,490) | (1,211,565,657) |
| திறைச்சேரி உண்டியல்/நிலையான சொத்துக்களின் (வட்டியுடன்) திரும்பப் பெறல் | | - | 2,317,651,167 |
| பெறப்பட்ட வட்டி (வரிகளின் நிகரம்) | | 212,531,507 | 345,946,426 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்படுகின்றது)தேறிய காசுப்பாய்ச்சல்** | | **37,785,222** | **1,435,897,612** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாச்சல்** | | | |
| ஆண்டினுள் பெற்றப்பட்ட கடன் | | **11,437,869,814** | **9,839,059,331** |
| ஆண்டினுள் செலுத்திய கடன்கள் | | (5,883,423,698) | (10,530,789,713) |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்படுகின்றது)தேறிய காசுப்பாய்ச்சல்** | | **5,554,446,115** | **(691,730,383)** |
| **ஆண்டினுள் காசு மற்றும் காசுக்கு சமனானவைகளில் ஏற்பட்ட தேறிய மாற்றங்கள்** | | **(307,582,567)** | **462,001,441** |
| ஆண்டு தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்கு சமனானவைகள் | | 503,212,993 | 41,211,553 |
| **ஆண்டு இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமனானவைகள்** | 19 | **195,630,426** | **503,212,993** |

அடைப்புக் குறியினுள் உள்ளவைகள் கழிக்கப்பட்டவைகளை குறிக்கின்றன.

பக்கம் 91 தொடக்கம் 128 வரையிலான நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்கள் இந்த நிதி அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

## 1. பொதுவான கொள்கைகள்

### 1.1 நிறுவன தகவல்கள்

**அறிக்கையிடும் நிறுவனம்**

வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி முழுமையாக இலங்கை அரசிற்கு சொந்தமான ISO 9001:2008 சான்று பெற்ற கம்பனியாவதுடன் அது 50 ஆண்டுகளுக்கு அதிகமாக இலங்கையில் செயற்படுத்தப்படுகின்ற கமத்தொழில் அமைச்சின் விடய பரப்பிற்குரியதாக காணப்படுகின்றது. இலங்கை உரக் கம்பனி இரசாயன உரத்தினை இறக்குமதி செய்தல், தரமான உர கலவினை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல், நாடு முழுவதுமான களஞ்சிசாலை வலையமைப்பின் ஊடாக விநியோகித்தல் மற்றும் அதன் ஊடாக இலங்கை விவசாயிகளின் உர தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக செயற்படுகின்றது.

1987 இன் 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் அரச கூட்டுத்தாபனம் மற்றும் அரசிற்கு சொந்தமான மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புக்களையுடைய கம்பனியாக மாற்றலின் பிரகாரம் இலங்கை உர கூட்டுத்தாபனம் வரையறுக்கப்பட்ட இலங்கை உர கம்பனியாக மாற்றப்பட்டது.

இந்த பரிவர்த்தனை 1992 செப்தெம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் சட்ட ரீதியாக செயற்படுத்தப்பட்டது. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி தற்போது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பொது கம்பனியாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் நோக்கமாவது, 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட அதன் முற்பதவியாளரான இலங்கை உர கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட வியாபாரம் வெற்றிகரமான முன்னெடுத்துச் செல்வதனை உறுதி செய்வதாகும்.

### 1.2 நிதி ஆண்டு

கம்பனியின் நிதி அறிக்கைகள் அறிக்கையிடும் திகதி ஏப்ரல் 01 ஆந் திகதி ஆரம்பித்து மார்ச் 31 இல் முடிவடைகின்றது.

### 1.3 கம்பனியின் பங்கு மூலதனம்

கம்பனி முழுமையாக இலங்கை திறைச்சேரிக்கு சொந்தமாவதுடன் வழங்கப்பட்டுள்ள பங்கு மூலதனம் ரூபா 10 வீதமான சாதாரன பங்குகள் 50,245,608 ஆகும்.

### 1.4 உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை

2021 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 362 ஆகும். (2020-388)

### 1.5 வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி 2021.10.29 ஆம் திகதி ஆகும்.

### 1.6 பதிவு அலுவலகத்தின் சட்ட ரீதியான தன்மை மற்றும் முகவரி

இலங்கையினுள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களுடைய வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் முழுமையான உரித்து நிதி அமைச்சின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. கம்பனியின் பிரதாக அலுவலகம் லக்பொஹொர ஸ்வர்ன ஜயன்தி வீதீ, ஹூனுபிடிய, வத்தலை, இலங்கையில் அமைந்துள்ளது.

### 1.7 பிரதான நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாட்டின் தன்மை

கம்பனியின் பொருளாதார அபிவிருத்திக்கு மற்றும் வளர்ச்சிக்கு கருத்திற் கொள்ளப்பட வேண்டிய பங்களிப்பொன்று வழங்கிய தமது நாடளாவிய பகிர்வு வலையமைப்பின் ஊடாக கம்பனி வெற்றிகரமாக மற்றும் தொடர்ச்சியாக மக்களுக்கு உரம் பெற்றுக் கொடுத்துள்ளது. அது கரிம உரத்தினை உற்பத்தி செய்து சந்தைக்கு வழங்கும் முதல் அரச அமைப்பாகவும் கருதப்படுகின்றது.

### 1.8 தொடர்ந்தியங்கல்

முகாமைத்துவத்தினால் தொடர்ந்து இயங்கும் திறன் தொடர்பாக மதிப்பீடொன்று மேற்கொண்டுள்ளதுடன் எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்திற்காக வியாபார நடவடிக்கைகளை

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

மேற்கொண்டு செல்வதற்கு வளங்கள் காணப்படுகின்றமையை குறித்து திருப்பியடைகின்றது. மேலும், கம்பனிக்கு தொடர்ச்சியாக முன் செல்வதற்கு காணப்படுகின்ற திறன் தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய சந்தேகமொன்று ஏற்படுத்தக் கூடிய திரவத்தன்மையில் நிச்சயமற்ற தன்மை தொடர்பில் முகாமைத்துவம் அறியாது. எனவே, கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்ச்சியாக செயற்படுத்தப்படும் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றது.

### 1.9 வரிவிதிப்பு

2016 இன் 10 ஆம் இலக்க இறைவரித் சட்டத்திற்கு மற்றும் 2017 இன் 24 ஆம் இலக்க புதிய இறைவரிச் சட்டத்திற்கு பிரகாரம் வரி நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட ஆண்டிற்கான இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டு வரிவிதிப்பிற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள்

### 2.1 தயாரிப்பின் அடிப்படை

#### (அ) இணக்கக்கூற்று

நிதிக் கூற்றுக்களானது, நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கியது.

#### (ஆ) அளவீட்டு அடிப்படை

தொடர்புடைய குறிப்புக்களின் கீழ் சாதாரண மதிப்பு தொடர்பாக உரிய வெளிப்படுத்தல்களை தவிர நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரயத்தினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்கீட்டு நியமம் (SLFRSs) இற்கு அமைய கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. காணி மற்றும் கட்டிடங்கள் மீள்மதிப்பீட்டு செய்வதன் ஊடாக மாற்றப்பட்ட வரலாற்று கிரய மரபின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (SLFRSs) அமைவாக நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்காக சில சிக்கலான கணக்கு மதிப்பீடுகள் பயன்படுத்தல் அவசியமாகின்றது. கம்பனியின் கணக்கீட்டு கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டில் முகாமைத்துவம் தம் தீர்பினை செயற்படுத்தவும் தேவைப்படுகின்றது. உயர் மட்டத்திலான தீர்ப்பு அல்லது சிக்கல்தன்மை அல்லது நிதிக் கூற்றுக்களுக்காக கற்பிதங்கள் மற்றும் மதிப்பீடுகள் தேவைப்படுகின்ற துறை 2.3.2 குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நிதி நிலைமைக் கூற்றில் பின்வரும் உறுப்படிகள் தவிர கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்று கிரயத்தினை அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

1) வரையறுக்கப்பட்டுள்ள நலன் கடப்பாட்டு பொறுப்பானது வரையறுக்கப்பட்டிருக்கும் நலன் கடப்பாட்டின் நிகழ்கால பெறுமதியாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

2) இறையிலி நிலம் மற்றும் கட்டிடங்கள் அளவிப்படுவதாவது, கையகப்படுத்தும் போது விலையில் மற்றும் பின்னர் மீள்மதிப்பீட்டு செய்யப்பட்ட பெறுமதியிலாவதுடன், அவை மீள் மதிப்பீட்டு திகதியில் நேரிய மதிப்பில் காணப்படுகின்றது.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (LKASs and SLFRSs) பிரகாரம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் தேவையாடுகளின் பிரகாரம், கம்பனியின் நிதிக் கூற்றுக்களானவை, நிதி நிலைமைக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கியுள்ளது.

நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது மற்றும் தேவைப்படுமென கருதும் விடத்து அடிப்படை தொடர்பாக திரட்டல் அடிப்படை கணக்கீட்டு கொள்கை பயன்படுத்தப்படுகின்றது.

சமமான உருப்படிகளின் அனைத்து பொருட் வகுப்புக்களும் நிதிக் கூற்றுக்களில் படிப்படியாக முன்வைக்கப்படும். இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 1 ஊடாக “நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்” ஊடாக அங்கீகாரம் அளிக்கப்பட்டள்ள பிரகாரம் அசாதாரண தன்மையின் அல்லது தொழிற்பாட்டின் உருப்படிகள் திரவத்தனமையற்றவை தனித்தனியாக சமர்ப்பிக்கப்படும். குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகள் தொடர்புடைய தனித்தனி குறிப்புக்களுடன் கலந்துரையாடப்படும்.

**(இ) ஒப்பீட்டுத் தகவல்கள்**

நிகழ்கால நிதிக்கூற்றுக்கள் தொடர்பான புரிந்துணர்வினை மேம்படுத்துவதற்காக மற்றும் இடைகால ஒப்பீட்டுத் தன்மையை மேம்படுத்துவதற்காக நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள அனைத்து பணப் பெறுமானங்களுக்காகவும் பொருண்மையான, எடுத்துரைப்பான மற்றும் விரிவான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட ஒப்பீட்டு தகவல்கள் கடந்த காலப்பகுதிக்குரியதாக அடையாளப்படுத்தப்படும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் இந்த நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து காலப் பகுதிக்கும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

**(ஈ) குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கையின் பொழிப்பு**

குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு தொடர்புடைய தனிப்பட்ட குறிப்புடன் அடுத்த பக்கங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு குறிப்புக்களுடனும் முன்வைக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் கம்பனியினால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுள்ளது. கம்பனியினால் தொடர்ச்சியான பயன்படுத்தப் பட்டுள்ள கொள்கைகள் பின்பற்றல் முக்கியமாக கருதப்படினும் வேறு எந்த பிரிவிலும் வெளிப்படுத்தப்படவில்லை.

**(உ) நிகழ்கால மற்றும் நிகழ்கால அல்லாத வகையீடு**

நிறுவனம் நடைமுறை / நடைமுறையற்ற அற்ற வகையீட்டின் அடிப்படையில் நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வழங்குகின்றது. ஒரு சொத்து நடைமுறையாக கருதப்படுவது அது :

1) தேறக்டிய அல்லது விற்பதற்கு அல்லது சாதாரன செயற்பாட்டு சுழற்சியில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற போது
2) பிரதானமாக வர்த்தக நோக்கத்திற்காக பேணும் போது
3) அறிக்கையிடும் காலத்தின் பின்னர் பன்னிரண்டு மாதங்களுக்குள் தேறுவதை எதிர்பார்கின்ற போது, அல்லது
4) அறிக்கையிடும் காலப்பகுதியின் பின்னர் குறைந்தபட்சமாக பன்னிரண்டு மாதங்களுக்காக பொறுப்பொன்று மாற்றப்படல் அல்லது பயன்படுத்துவதனை மட்டுப்படுத்தாவிடின் காசு மற்றும் காசுக்கு சமமான ஏனைய அனைத்து சொத்துக்களும் நடைமுறை அற்றவை என வகைப்படுத்தப்பட்டுள்ள போது

**(ஊ) கம்பனியின் பொறுப்புக்கள் நடைமுறையாக கருதப்படுவது அது,**

1) சாதாரன இயக்கச் சுழற்சியில் தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற போது
2) பிரதானமாக வர்த்தக நோக்கத்திற்காக பேணும் போது
3) அறிக்கையிடும் காலத்தின் பின்னர் பன்னிரண்டு மாதங்களுக்குள் தீர்க்கப்படுமென எதிர்பார்கின்ற போது, அல்லது
4) அறிக்கையிடும் காலப்பகுதியின் பின்னர் குறைந்தபட்சமாக பன்னிரண்டு மாதங்களுக்காக பொறுப்பொன்று தீர்க்கப்படுதலினை பிற்போடுவதற்கு நிபந்தனையற்ற உரித்து இல்லாத போது கம்பனி ஏனைய அனைத்து பொறுப்புக்களையும் நடைமுறை அற்றதென வகைப்படுத்தப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நடைமுறை அல்லாத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

### 2.2 கணக்கீட்டு கொள்கையில் மாற்றம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளின் மாற்றமானது, வேறு விதமாக குறிப்பிடப்படவில்லை எனின், நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்ட காலப்பகுதியில் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை பட்டயக் கணக்காயர்களின் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட SLAS பிரகாரம் கணக்கீட்டு நியமம் அறிக்கையிடும் போது மற்றும் இந்த நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து காலப்பகுதிக்காகவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 2.3 வெளிநாட்டு நாணய மாற்றங்கள்

#### 2.3.1 தொழிற்பாடு மற்றும் சமர்ப்பிக்கும் அலகுகள்

நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களின் நடவடிக்கைகள் ஆரம்ப பொருளாதார சூழலில் காணப்படும் நாணயத்தின் அடிப்படையில் கம்பனியினால் அளவிடப்படுகின்றது. இந் நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் (LKR) முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளதுடன் இதுவே கம்பனியின் முன்னிலைப்படுத்தும் நாணயமாகும்.

#### 2.3.2 கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும்

அந்நிய நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட காலத்தில் நிலவிய நாணய மாற்று வீதத்தில் ரூபாவிற்கு நாணய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக, அந்நிய நாட்டு நாணய பரிமாற்றத்தில் பெற்றவைகள் மற்றும் இழப்புக்கள் மற்றும் அறிக்கை சமர்ப்பிக்கும் திகதியில் வெளிநாட்டு நாணய ஆதிக்கத்திற்கு உட்பட்ட நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதி பொறுப்புக்களில் பரிமாற்ற வீதங்கள் என்பன விரிவான வருமானக் கூற்றில் கணக்கு வைக்கப்பட்டது. ஆரம்ப கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற தினத்திலேயே காணப்பட்ட வெளிநாட்டு நாணய மாற்று வீதத்தில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்படும்.

விரிவான வருமானக் கூற்றினுள் காலக்கழிவு மேற்கொண்ட கிரயத்தின் மாற்றங்கள் தொடர்பாக மாற்றல் வேறுபாடு அடையாளப்படுத்தப்பட்டது

#### 2.3.3 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

நிதிக் கூற்றுக்களினை தயாரிக்கும் போது, அறிக்கையிடும் இறுதி காலத்தில் வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் நிச்சயமற்ற பொறுப்புக்கள் வெளிப்படுத்தும் அளவிற்கு தாக்கமளிக்கும் நிதிக் கூற்றுக்களுக்கான தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள், குறிப்புக்கள் மேற்கொள்வதற்கு கம்பனிக்கு முகாமைத்துவம் தேவைப்படுகின்றது.

இந்த அனுமானங்கள் மற்றும் மதிப்பீடு தொடர்பான நிச்சயமற்ற தன்மை உதிர்காலத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை தாங்கும் அளவிற்கு திரவதன்மை தேவைப்படும் விளைவுகளுக்கு காரணமாகக் கூடும். கம்பனியின் கணக்கீட்டு கொள்கை பயன்படுத்தும் செயன்முறையின் போது முகாமைத்துவமானது வெவ்வேறு தீர்ப்புக்களை மேற்கொண்டுள்ளது. திரண்ட நிதிக் கூற்றுக்களில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள பணத் தொகையை குறித்து மிகவும் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய தாக்கத்தினை ஏற்படுத்துவதற்கு முகாமைத்துவத்தினால் மதிப்பிடப்பட்டுள்ளவை தொடர்புடைய நிதிக் கூற்றுக்கள் வரிசை உருப்படிகளில் தனி குறிப்புக்களில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வரும் நிதி ஆண்டினுள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அளவிற்கு திரவ பொருத்தப்பாடொன்று ஏற்படுத்துவதற்கான குறிப்பிடத்தக்க ஆபத்தொன்று காணப்படும், எதிர்காலத்தினை குறித்து பிரதான அனுமானம் மற்றும் அறிக்கையிடும் திகதியின் மதிப்பீட்டின் நிச்சயமற்ற தன்மையின் ஏனைய பிரதான வளங்களும் நிதிக் கூற்றுக்களுக்கான தனி குறிப்புக்களில் விபரிக்கப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது காணப்படுகின்ற வரைக்கூறுகள் மீது கம்பனி தம் அனுமானங்கள் மற்றும் மதிப்பீட்டினை அடிப்படையாகக்

கொண்டுள்ளது. எவ்வாறாயினும், காணப்படுகின்ற நிலைமை மற்றும் எதிர்கால வளர்ச்சி தொடர்பான அனுமானங்கள், சந்தை மாற்றங்கள் அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டினை மீறுகின்ற நிலைமைகள் காரணத்தினால் வேறுப்படக்கூடும். அவ்வாறான மாற்றங்கள் ஏற்படுகின்ற போது அனுமானங்களில் பிரதிபலிக்கின்றன.

## 2.4 சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படை

### 2.4.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

**(அ) அடையாளப்படுத்தல் மற்றும் அளவீடு**

ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகளின் விலை அல்லது அவற்றின் சாதாரன பெறுமதியில் குறைந்த திரண்ட பெறுமானத்தேய்வு அல்லது நட்ட சேதம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டில் சனாதிபதியினால் கட்டளையொன்று வழங்கப்பட்ட பிரகாரம் அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் கம்பனியின் பிரதான அலுவலக சூழலின் உரித்து கம்பனிக்கு பணிக்கப்பட்டது. எவ்வாறெனினும், ஒப்பாணை பெறப்படினும் களனி மற்றும் வத்தளை பிரதேச செயலாளர் அதுவலகங்களில் காணி பணிப்பாருக்கு அச் சூழலின் உரித்து பதிவு செய்யும் நடவடிக்கை தற்போது நடைப்பெற்று வருகின்றது. களனி பிரதேச செயலாளர் அலுவலகத்தில் ஒப்பாணை பதிவு செய்தல் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் வத்தளை செயலாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டவுடன் நாட்டின் போக்குவரத்து விரிவாக்கலின் காரணத்தினால் 28 பர்சஸ் காணியொன்று பெற்றுக் கொள்வதற்காக கம்பனி வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து ரூபா 12.6 மில்லியன் இழப்பீட்டு பணத்தொகையை அறவிட்டுள்ளது.

இலங்கை உரக் கம்பனியின் நிலையான சொத்துக்களின் குறைந்தபட்ச பெறுமதி ரூபா 5,000 என கருதி, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கயின் அனைத்து உருப்படிகளும் முதலில் குறிப்பிடப்பட்டிருந்தது குறைவான திரண்ட தேய்வு அல்லது சேத நட்டத்தின் கீழாகும். சொத்தொன்றின் குறிப்பிடத்தக்க பகுதிகள் தனித்தனியாக அடையாளப்படுத்தப்பட்டு தேய்வு செய்யப்படும். ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் குறிப்பிடத்தக்க பகுதிகள் இடைவெளிகளில் மீள ஸ்தாபிப்பதற்கு தேவைப்படுகின்ற விடத்து, நிறுவனம் மீள் ஸ்தாபித்தல் பகுதியினை அடைளாயப்படுத்தாது, ஆயுட்காலம் மற்றும் தேய்வில் அடையாளப்படுத்தும்.

கம்பனியின் முகாமைத்துவத்தினால் கூறப்படும் விதத்தில் செயற்படுத்துவதற்கு தேவைப்படுகின்ற இடத்திற்கு சொத்துக்கள் கொண்டு வருவதற்காக நேரடியாக காரணமாகக் கூடிய கிரயம் உள்ளடங்கலான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் அனைத்து உறுப்படிகளும் ஆரம்ப விலைக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகள் பின்னர் மீள மதிப்பிடும் போது, அவ்வாறான சொத்துக்களில் மொத்த வகுப்பும் மீள மதிப்பிடப்படும். மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்படுவது, அறிக்கையிடும் திகதியில் அவற்றின் கொண்டு செல்லும் பெறுமதியில் அவற்றின் சாதாரண பெறுமதிகளில் திரவத்தன்மை மாறாதென உறுதி செய்வதற்காக போதுமான ஒழுங்குமுறையுடன் ஆகும்.

அவ்வாறான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்படுவதனால் எழுகின்ற ஏதேனும் மீள்மதிப்பீடு ஏனைய விரிவான வருமானத்தினுள் அடையாளப்படுத்தப்பட்டு அது மீள்மதிப்பீடு மாற்றுமளவினை தவிர்த்து பங்குகளில் சேரும்.

வருமானக் கூற்றில் முன்னர் அடையாளப் படுத்தப்பட்டுள்ள சொத்துக்களுக்காகவே குறைதல், அங்கு முன்னர் செலவு செய்த குறைந்த அளவிற்கு அதிகரித்தல் வருமானக் கூற்றிற்கு வரவு வைக்கப்பட்டது. சொத்துக்களின் மீள்மதிப்பீட்டின் போது எழுகின்ற கொண்டு செல்லும் தொகையில் ஏற்படுகின்ற குறைவு, அச்சொத்துக்களின் முன் மீள்மதிப்பீட்டிற்கு தொடர்புடையதாக ஆதனம் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் காணப்படுகின்ற மீதியினை மிகைத்து செல்லும் அளவிற்கு வருமான கூற்றினுள் அடையாளப்படுத்தப்படும்.

அகற்றப்பட்டதன் பின்னர், ஏதும் தொடர்புடைய மீள்மதிப்பீடு ஒதுக்கமொன்று மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வருமானத்திற்கு மாற்றப்படுவதுடன், அகற்றும் போது பெறப்படும் இலாபம் அல்லது நட்டம் அடையும் போது கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. சொத்துக்கள் மீள் மதிப்பீடு தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு இல 11 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மற்ற அனைத்து பழுது பார்த்தல்களும் பராமரித்தல் செலவினம் ஏற்றதாக வருமானக் கூற்றில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

கம்பனியின் முகாமைத்துவத்தினால் கூறப்படும் விதத்தில் செயற்படுத்துவதற்கு தேவைப்படுகின்ற இடத்திற்கு சொத்துக்கள் கொண்டு செல்வதற்காக நேரடியாக காரணமாகக் கூடிய ஏதேனும் கிரயமொன்று உள்ளடங்கலாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆரம்பத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் அனைத்து உருப்படிகளும் ஆரம்பத்தில் கிரயத்திற்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகள் பின்னர் மீள மதிப்பிடும் போது, அவ்வாறான சொத்துக்களில் மொத்த வகுப்பும் மீள மதிப்பிடப்படும். மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்படுவது, அறிக்கையிடும் திகதியில் அவற்றின் முன் கொண்டு செல்லும் பெறுமதியில் அவற்றின் சாதாரண பெறுமதிகளில் திரவத்தன்மை மாறாதென உறுதி செய்வதற்காக போதுமான ஒழுங்குமுறையுடன் ஆகும்.

அவ்வாறான சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்படுவதனால் எழுகின்ற ஏதேனும் மீள்மதிப்பீடு ஏனைய விரிவான வருமானத்தினுள் அடையாளப்படுத்தப்பட்டு அது மீள்மதிப்பீடு மாற்றுமளவினை தவிர்த்து பங்குகளில் சேரும்.

வருமானக் கூற்றில் முன்னர் அடையாளப் படுத்தப்பட்டுள்ள சொத்துக்களுக்காகவே குறைதல், அங்கு முன்னர் செலவு செய்த குறைந்த தொகை அதிகரிப்பு வருமானக் கூற்றிற்கு வரவு வைக்கப்பட்டது. சொத்துக்களின் மீள்மதிப்பீட்டின் போது எழுகின்ற கொண்டு செல்லும் தொகையில் ஏற்படுகின்ற குறைவு, அச்சொத்துக்களின் முன் மீள்மதிப்பீட்டிற்கு தொடர்புடையதாக ஆதனம் மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் காணப்படுகின்ற மீதியினை மிகைத்து செல்லும் அளவிற்கு வருமான கூற்றினுள் அடையாளப்படுத்தப்படும்.

அகற்றப்பட்டதன் பின்னர், ஏதும் தொடர்புடைய மீள்மதிப்பீடு ஒதுக்கமொன்று மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வருமானத்திற்கு மாற்றப்படுவதுடன், அகற்றும் போது பெறப்படும் இலாபம் அல்லது நட்டம் அடையம் போது கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. சொத்துக்கள் மீள் மதிப்பீடு தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு இல 11 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**(ஆ) பெறுமானத் தேய்வு**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உருப்படிகள் தேய்வு செய்யப்படுவது அவை பயன்பாடிற்கு எடுக்கப்பட்ட திகதி தொடக்கம் அல்லது, சுய நிர்மாணிப்பு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக, சொத்துக்கள் நிறைவு செய்து பயன்பாட்டிற்கு ஆயத்தமாக்கப்பட்ட திகதியிலிருந்தாகும்.

தேய்மானம் கணக்கிடப்படுவது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உருப்படிகளின் மதிப்பிடப்பட்ட எஞ்சிய பெறுமதி குறைவாக பதிவழிக்கப்படுவதற்காக அவைகளின் மதிப்பிடப்பட்ட பயன்படு ஆயுட்காலத்தின் மீது நேர்கோட்டு அடிப்படை பயன்படுத்தப்பட்டது. பெறுமானத்தேய்வு இலாபம் அல்லது நட்டத்தினுள் அடையாளப்படுத்தப்படும். குத்தகை காலம் முடிவடையும் போது கம்பனிக்கு உரித்து பெறப்பட்டுள்ளமை சாதாரண நம்பிக்கை அல்லவனின் குத்தகை சொத்துக்கள் குத்தகை காலம் மற்றும் அவற்றின் பயன்படு ஆயுட்காலம் குறுகிய காலத்தினுள் தேய்வு செய்யப்படும். காணி பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

ஏனைய சொத்துக்களின் பெறுமானத்தேய்வு கணக்கிடப்படுவது அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்படு ஆயுட்காலத்தினை விட அவற்றின் கிரயம் அல்லது மீள்மதிப்பீடு தொகை ஒதுக்கப்படுவதற்காக சாதாரண நேர்கோட்டு

முறைமை பயன்படுத்தப்பட்டு ஆகும்.

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 40 ஆண்டுகள் |
| கொள்களன் அலுவலகம் | 10 ஆண்டுகள் |
| பொறி மற்றும் இயந்திரம் | 05 – 10 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 ஆண்டுகள் |
| சைக்கிள்கள் | 03 ஆண்டுகள் |
| அலுவலக தளபாடங்கள் | 03 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள் | 03 ஆண்டுகள் |
| வேலைத்தள உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |
| ஆய்வுக்கூட உபகரணங்கள் | 03 ஆண்டுகள் |
| ஏனைய உபகரணங்கள் | 03 ஆண்டுகள் |
| சிற்றூண்டிச்சாலை உபகரணங்கள் | 05 ஆண்டுகள் |
| கணினி உதிரிபாகங்கள் | 03 ஆண்டுகள் |

சொத்து கொண்டு செல்லக்கூடிய தொகை அதன் மதிப்பிடப்பட்ட அறவிடப்படக்கூடிய தொகையினை விட அதிகமெனின், அச் சொத்து கொண்டு செல்லக்கூடிய தொகை விரைவாக மீள பெறக்கூடிய தொகைக்கு எழுதப்படும்.

சொத்தின் பெறுமானத் தேய்வானது அது பயன்படுத்தும் போது ஆரம்பிக்கப்படுவதுடன் சொத்தின் தேய்மானம் நிறுத்தப்படுவது அச் சொத்து விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள திகதி மற்றும் சொத்து அடையாளப்படுத்தப்படாத திகதி இரண்டிற்கும் முன்னராகும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படிகள் அகற்றும் போது அல்லது அது பயன்படுத்தும் போது அல்லது அகற்றலினால் எதிர்கால நலன் எதிர்பார்க்கப்படாத போது அடையாளப்படுத்தப்பட மாட்டாது. சொத்து அடையாளப்படுத்தப்படாத ஆண்டினுள் ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியொன்று அடையாளப்படுத்தப் படாமையினால் பெறப்படுகின்ற இலாபம்/ நட்டம் இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு உள்ளடக்கப்படும்.

பெறுமானத்தேய்வு முறையானது, பயன்படு ஆயட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதிகள் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமெனில் திருத்தபடும்.

**(இ) அங்கீகாரத்தினை அகற்றல்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் பொருளொன்று முன் கொண்டு செல்லும் அளவு அகற்றப்படும் போது அல்லது அது பயன்படுத்துவதில் அல்லது அகற்றலில் எதிர்கால பொருளாதார நலன் எதிர்பார்க்கப்படாத போது அடையாளப்படுத்தப்பட மாட்டாது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உருப்படிகள் அடையாளப்படுத்துவதில் ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் பொருள் அடையாளப்படுத்தும் போது இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டது.

**(ஈ) நேரிய மதிப்புக்களின் அளவீடு**

சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் நேரிய மதிப்பினை அளவிடும் போது, கம்பனி முடியுமான வரையில் அவதானிக்கக்கூடிய சந்தை தரவுகளை பயன்படுத்தும். நேரிய பெறுமதியானது பின்வருமாறு மதிப்பீட்டு உத்திகளினை பயன்படுத்தும் உள்ளீடுகளின் அடிப்படையில் நிலைமுறையில் வெவ்வேறு நிலைகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

1) நிலை 1- ஒத்த சொத்து மற்றும் பொறுப்பிற்காக செயற்பாட்டு சந்தைகளில் எடுத்துரைக்கும் விலைகள் (திருத்தப்படாத)
2) நிலை 2- நேரடியாக அல்லது மறைமுகமாக சொத்து அல்லது பொறுப்புக்களுக்காக அதானிக்கப்படக்கூடிய நிலை 1 இன் உள்ளடக்கப்பட்டுள்ள எடுத்துரைக்கும் விலைகளை தவிர ஏனைய உள்ளீடுகள்.
3) நிலை 3- அவதானிக்கப்படக்கூடிய சந்தை தரவுகளின் மீது அடிப்படையாகாத சொத்து அல்லது பொறுப்பிற்கான உள்ளீடு (அவதானிக்க முடியாத உள்ளீடுகள்)

நேரிய மதிப்புக்கள் அளவிடும் போது மேற்கொள்ளப்படுகின்ற அனுமானங்கள் தொடர்பான மேலதிக ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களில் குறித்த குறிப்புக்களில் உள்ளடக்கப்படுகின்றது.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

**(உ) மீள்மதிப்பீட்டு மாதிரி**

கம்பனியினால் நிதிநிலைமைக் கூற்றில் முழு வகுப்பின் காணி மற்றும் கட்டிடங்களுக்காக மீள்மதிப்பீட்டு மாதிரி பயன்படுத்தப்படும். ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் நேரிய பெறுமதி பயன்பாட்டில் தீர்மானிக்கப்படுகின்ற பணத்தொகையினை விட பொருண்மையான வித்தியாசம் அற்ற விதத்தில் போதுமான ஒழுங்குமுறையில் மீள்மதிப்பீட்டு மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. அனைத்து அறிக்கையிடும் காலப்பகுதியிலும் காணி மற்றும் கட்டிடங்களின் நேரிய பெறுமதி கருத்திற் கொள்ளப்படாத தொகையினால் வேறுப்படுமெனின், கம்பனி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அக் காணி மற்றும் கட்டிடங்களினை மீள்மதிப்பீடும்.

அவ்வாறான காணி மற்றும் கட்டிடங்கள் மீள்மதிப்பீட்டின் அடிப்படையில் எழுகின்ற ஏதேனும் மீள்மதிப்பீட்டு அதிகரிப்பு, வருமானக் கூற்றில் முன்னர் அடையாளப்படுத்தப்பட்ட அச் சொத்திற்காக மீள்மதிப்பீட்டுக் குறையொன்று மாற்றியமைக்கும் அளவினை தவிர, ஏனைய விரிவான வருமானமொன்று மற்றும் பகுதிகளாக சேர்க்கப்படுவதுடன் முன்னர் செலவிடப்பட்ட குறைவின் அளவு வருமானக் கூற்றிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. காணி மற்றும் கட்டிடங்கள் மீளமதிப்பிடப்படும் போது எழுகின்ற பணத்தொகையின் குறைவொன்று அச் சொத்து அல்லது கட்டிடங்கள் முன்னர் மதிப்பீடு செய்யப்பட்டதற்கு தொடர்புடைய சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் வைக்கப்பட்டு சேமிப்பு மிகைத்து செல்லப்படுகின்ற அளவிற்கு வருமானக் கூற்றினுள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அகற்றப்பட்டதன் பின்னர், ஏதேனும் தொடர்புடைய மீள்மதிப்பீட்டு ஒதுக்கமொன்று மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வருமானத்திற்கு மாற்றப்பட்டதுடன், அகற்றலின் இலாபம் அல்லது நட்டத்தினை அடையும் போது கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

கம்பனி அனைத்து 5 ஆண்டுகளுக்கு ஒரு தடைவ இந்த சொத்துக்களை மீள் மதிப்பிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றமையினால் நிதி அறிக்கையிடலுக்காக தேவைப்படுகின்ற தொழிற்சார் சேவை மற்றும் தேவைப்பாடுகளை வழங்குவதற்காக இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வியாபார நிறுவனமொன்றான Ace Property & Business Consultants (Pvt) limited இனால் கம்பனியினால் 2017 ஆம் ஆண்டில் அதன் கட்டிடங்கள், வீட்டுப் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள், இயந்திர உபரணங்கள், வாகனங்கள் மீண்டும் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்டது.

**(ஊ) நடைமுறையிலுள்ள மூலதன வேலைகள்**

நடைமுறையிலுள்ள மூலதன வேலைகள் நிர்மாணிப்பதற்கு நேரடியாக தொடர்புடைய பொருட்களின் திரண்ட கிரயம் மற்றும் ஏனைய செலவினங்களினை பிரநிதிநித்துவப்படுத்தும். நடைமுறையிலுள்ள மூலதனம் அது கருதப்படக் கூடிய விதத்தில் நிறைவு செய்யப்பட்டு அதன் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டிற்காக தயாராகும் சந்தர்ப்பத்தில் தொடர்புடைய சொத்து கணக்குகளுக்கு மாற்றப்பட்டது.

**2.4.1 தொட்டுரண முடியாத சொத்துக்கள்**

கையகப்படுத்தப்பட்ட கணினி மென்பொருள் மற்றும் செயற்பாட்டு அமைப்பு மூலதனமாக்கப்படுவது விசேட மென்பொருள் மற்றும் அமைப்பு கையகப்படுத்தப்படுவதற்கு மற்றும் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு ஏற்கப்பட்ட கிரயத்தின் மீதாகும். கையகப்படுத்தப்பட்ட தொட்டுணர முடியாத சொத்துக்களின் குறைவாக ஒதுக்கப்பட்ட காலக்கழிவு மற்றும் ஒதுக்கப்பட்ட அகற்றல் நட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த செலவினம் பின்வருமாறு அவைகளின் மதிப்பிடப்பட்ட பயன்படு ஆயட்காலத்தின் அடிப்படையில் காலக்கழிவு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கணினி மென்பொருள் | 05 ஆண்டுகள் |

கணினி மென்பொருள் ப்ரோகிராமர்களின் பராமரிப்புடன் தொடர்புடைய கிரயம் ஏற்கப்பட்ட செலவினமாக கருதப்படும்.

#### 2.4.2 நிதி அல்லாச் சொத்துக்களின் சேதங்கள்

ஒவ்வொரு அறிக்கையிடும் காலக்கட்டத்தின் இறுதியிலும், அச் சொத்து சேதமடைந்திருப்பது குறித்து ஏதேனும் அறிகுறி உள்ளமை தொடர்பில் தீர்மானிப்பதற்காக கம்பனி அதன் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் தொட்டுணர முடியா சொத்துக்கள் கொண்டு செல்லும் பெறுமதியில் மீளாய்வு செய்யப்படும். அவ்வாறான ஏதும் அறிகுறி காணப்படுமெனின், சேதத்தின் நட்டம் (ஏதும் இருப்பின்) தீர்மானிப்பதற்காக சொத்துக்களின் மீள பெறக்கூடிய தொகை மதிப்பிடப்படும். தனி சொத்தொன்றில் அறவிடப்படக்கூடிய அளவு மதிப்பிடப்பட முடியாத சந்தர்ப்பத்தில், கம்பனி காசு பிறப்பாக்கி அலகினை தீர்மானிப்பதுடன் சொத்து சொந்தமான காசு பிறப்பாக்கி அலகில் அறவிடப்படக்கூடிய அளவு மதிப்பிடப்படும்.

மீள அறவிடப்படக்கூடிய தொகை நேரிய பெறுமதியினையும் விட அதிகமான பெறுமதியொன்று விற்பனை செய்வதலானது பயன்பாட்டிலுள்ள பெறுமதியினை பார்க்கிலும் குறைவாகும். பயன்பாட்டிலுள்ள பெறுமதி மதிப்பிடும் போது, மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாச்சல் அவற்றின் நிகழ்கால பெறுமதிக்கு கழிவு செய்யப்படுவது வரிக்கு முன்னரான விகிதத்தினை பயன்படுத்தி பணத்தின் கால பெறுமதியின் நிகழ்கால சந்தை மதிப்பீடு மற்றும் எதிர்கால காசு பாய்ச்சல் மதிப்பிடப்படுகின்ற சொத்திற்கு விசேடமான அபாயத்தினை வெளிப்படுத்தி தயாரிக்கப்படவில்லை.

சொத்தொன்றின் (அல்லது பண பிறப்பாக்கி அலகில்) அறவிடப்படக் கூடிய தொகை அதன் கொண்டு செல்லும் தொகையிலும் குறைவென மதிப்பிடப்பட்டிருப்பின், (அல்லது பண பிறப்பாக்கி அலகின்) கொண்டு செல்லக்கூடிய தொகை மீண்டும் அறவிடப்படக் கூடிய அளவிற்கு குறைக்கப்படும். விரிவான வருமான கூற்றினுள் சேத பெறுமதி விரைவாக அடையாளப்படுத்தப்படும்.

### 2.5 இருப்பு

இருப்பு (நேரடி மற்றும் கலவை உரம்) கிரயத்தில் இருந்து மானியம் கழிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளது. கிரயம் கணிக்கப்பட்டிருப்பது முன்வந்து முன் செல்லும் முறையிலாகும். (FIFO). மூலப் பொருட்கள். நேரடி ஊழியம், ஏனைய நேரடிச் செலவுகள் மற்றும் இவை தொடர்பான உற்பத்தி மேந்தலைகளை உள்ளடக்கியதாக கலவை உரத்தின் கிரயம் காணப்படுகின்றது. தேசிய ரீதியில் கொள்வனவு செய்த உரம் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சாதாரண வியாபார நடவடிக்கைகளில் விற்பனை செய்ய மீர்மானிக்கும் விலையில் இருந்து அதற்கான செலவினை கழித்ததன் பின்னர் தேறிய பெறுமதி கணக்கிடப்பட்டுள்ளது. நுகர்வுப் பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்கள் அதன் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2.6. நிதி கருவிகள்

